விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 தை 06 செவ்வாய்க்கிழமை (20.01.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 032

## இனப்பிரச்சினைக்கான தீர்வில்

# இந்தியா ஆர்வம்

## பிரதமர் மோடி-மங்கள நேற்று சந்திப்பு

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தில் ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து இந்திய மத்திய அரசு ஆர்வமாகவுள்ளது. இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பில் இலங்கையின் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து இந்தியப் பிரதமர் வினவியதாக தெரிவிக்கப்படுகிறது.

23ஆம் பக்கம் பார்க்க....



## மகிந்தவின் வீட்டில் பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் தங்காலை வீட்டில் பொலிசார் நேற்று சோதனை நடவடிக்கையொன்றை மேற்கொண்டுள்ளனர்.

தங்காலையில் அமைந்துள்ள ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்லமான கார்ல்டன் மாளிகையில் விலையுயர்ந்த கார்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்திருந்தது.

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி செயலகத்தின் 172 வாகனங்கள் மாயம்

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான 172 வாகனங்கள் காணாமற்போயுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட

24ஆம் பக்கம் பார்க்க....

## 3 ஆளுநர்கள் இராஜினாமா

(கொழும்பு)

தென் மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் வடமத்திய மாகாணம் ஆகியவற்றின் ஆளுநர்கள் நேற்று தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு தமது இராஜினாமா கடிதத்தினை நேற்று அனுப்பிவைத்துள்ளதாக தென்மாகாண ஆளுநர் குமாரி பாலசூரிய குறிப்பிட்டார்.

அவர் கடந்த 08 வருடங்கள் தென

24ஆம் பக்கம் பார்க்க....

### முதலமைச்சர் தெரிவில் இழுபறி

## கிழக்கு ஆட்சி மாற்றத்துக்கான பேச்சுவார்த்தைகள் தோல்வி

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையில் ஆட்சி மாற்றத்தை கொண்டு வருவது தொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்துள்ளது.

முதலமைச்சர் பதவி தொடர்பாக இணக்கப்பாடு ஏற்படாததே இந்த தோல்விக்குக் காரணம் என இரு தரப்பும் கூறுகின்றன.

கிழக்கு மாகாண சபையில் ஆட்சி மாற்றம் தொடர்பாக நேற்று வரை இரு தரப்பினருக்கு மிடையில் மூன்று சுற்றுப் பேச்சுக்கள் நடந்துள்ளன.

23ஆம் பக்கம் பார்க்க....

## ராஜபக்ஷவினருக்கான தண்டனை அரசியல்வாதிகளுக்கு ஒரு பாடம்

### சட்டத்தின் மூலம் தண்டிப்போம்-பைரூஸ்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரின் பரம்பரையும் தொடர்ந்து இந்த நாட்டை ஆட்சி செய்யக்கூடிய வகையில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக மேல் மாகாண சபை உறுப்பினரும மத்திய கொழும்பு ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளருமான பைரூஸ் ஹாஜியார் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பு புதுக்கடையில் நேற்று

23ஆம் பக்கம் பார்க்க....

## வட மாகாணத்தின் புதிய செயலாளராக பத்திநாதன் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபையின் புதிய பிரதம செயலாளராக முல்லைத்தீவு மொனறாக்லை ஆகிய மாவட்டங்களின் முன்னாள் அரசாங்க அதிபர் அ.பத்திநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வட மாகாண ஆளுநராக இருந்த சந்திரசிறிக்குப் பதிலாக பள்ளி ஹக்கார நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரதம செயலாளருடைய நியமனத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## பேரப்பிள்ளையின் உயிரைக் காக்க தன்னுயிரைக் கொடுத்த பேர்த்தி

(கரணவாய்)

கிணற்றில் தவறி விழுந்த தனது பேரப்பிள்ளையைக் காப்பாற்ற கிணற்றில் குதித்த பேர்த்தியார் நீரினுள் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை 3 மணியளவில் வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

கிணற்றில் தவறி விழுந்த தனது பேரப்பிள்ளையை காப்பாற்ற குறித்த பேர்த்தியார் கிணற்றினுள் குதித்துள்ளார்.

சத்தம் கேட்டு அங்கு ஓடி வந்த பிள்ளையின் தாயாரும் இருவரையும் காப்பாற்றும் முயற்சியில் கிணற்றினுள் குதித்துள்ளார்.

அதேவேளை மூவரின் அவலக் குரல் கேட்டு விரைந்து வந்த அயலவர்களினால் மூவரும் கிணற்றிலிருந்து வெளியே மீட்கப்பட்டனர்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக பேர்த்தியார் கிணற்று நீரில் மூழ்கி மூச்சு

24ஆம் பக்கம் பார்க்க....

## புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற அமெரிக்கா ஆர்வம்



(கொழும்பு)

இலங்கைக்கான புதிய அரசாங்கத்திடம் இருந்து மக்கள் எதனை எதிர்பார்க்கிறார்களோ, அதனையே தாங்களும் எதிர்பார்ப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கையின் புதிய அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைப் பாராட்டி அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியா

23ஆம் பக்கம் பார்க்க....

## சீனாவுடனான கட்டுமான ஒப்பந்தங்கள் மீளவும் ஆய்வுக்கு உள்ளாகும்-அரசு

## ஒதுக்கப்பட்ட நிதியை வைத்து அதிக நிதியை பெற்றார் சந்திரசிறி

## குற்றஞ்சாட்டுகிறார் தவராசா

(கொழும்பு)

வடமாகாண முன்னாள் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியை வைத்து அதிகளவான வட்டியைப் பெற்றதாக தனக்கு தகவல்கள் கிடைத்ததாக வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் சின்னத்துரை தவராசா குற்றஞ்சாட்டினார்.

வடமாகாண சபையின் மாதாந்த அமர்வு கைதடியில் அமைந்துள்ள வட மாகாண சபையில் நேற்று இடம்பெற்றது.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறிக்கு தனிப்பட்ட ரீதியில் ஒதுக்கப்பட்ட 6 மில்லியன் ரூபாய் நிதியை வடமாகாண பேரவைச் செயலகத்

24ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு அதிவேக நெடுஞ்சாலை திட்டம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட வடக்கு அதிவேக நெடுஞ்சாலை வேலைத்திட்டத்திற்கான செலவு விபரங்கள் தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து முடியும் வரை, அந்த நெடுஞ்சாலை அமைக்கும் பணிகளை இடைநிறுத்திவைப்பதற்கு புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குருநாகல் ஊடாக கொழும்பையும் கண்டியையும் வடக்கில் யாழ்ப்பாணத்துடன் இணைக்கும் விதத்தில் அமையவிருந்த இந்த அதிவேக நெடுஞ்சாலை சீனாவின் கடனுதவியின் மூலம் அமைக்கப்பட விருந்தது.

கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக, இந்த நெடுஞ்சாலை வேலைத் திட்டம் வைபவ ரீதியாக மகிந்த ராஜபக்ஷவினால் தொடங்கப்பட்டிருந்த போதிலும், உண்மையில் களமட்டத்தில் எந்தவித வேலைகளும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை என்று புதிய நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளூர் ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கின்றார்.

இதேபோலவே, மகிந்த ராஜபக்ஷ

24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆனைக்கோட்டையில் காணி சுவீகரிப்பு எதிர்த்து நாளை கவனயீர்ப்பு போராட்டம்

## ☆ தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இராணுவ முகாம் அமைப்பதற்காக கூழாவடி ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள காணிகளைச் சுவீகரிப்பதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதுடன்,

நாளை 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு கூழாவடி ஆனைக்கோட்டையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றையும் நடத்தவுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கூழாவடி ஆனைக்கோட்டை என்னுமிடத்தில் பொது மக்கள் பலருக்குச் சொந்தமான காணிகள் வீடுகள் கடந்த இரண்டு தசாப்தங்களாக இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டு முகாம் அமைக்கப்பட்டிருந்தது. அக் காணிகள் அரசினால் சுவீகரிக்கப்பட்டு இராணுவ முகாம் அமைப்பதற்காக வழங்கப்படவுள்ளது.

ஜே-133 கிராமசேவகர் பிரிவில் சுவீகரிக்கப்பட்ட மேற்படி காணிகள் மற்றும் வீடுகளைஇராணுவத்தின் 11-வது சிங்க றெஜிமென்ற் 'பி' அணிக்கான நிரந்தர நிலையத்தை ஸ்தாபிப்பதற்காக வழங்கப்படவுள்ளது.

மேற்படி இராணுவ முகாம் அமைப்பதற்காக இராணுவத்தினரிடம் காணி கையளிக்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை நடைபெறவுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலரினால் குறித்த காணி உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

காணி உரிமையாளர்கள் தமது காணிகள் சுவீகரிக்கப்படுவதனை விரும்பாத போதும் அவர்களது விருப்பத்திற்குமாறாகவே மேற்படி நிகழ்வு நடைபெறவுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் எம்மிடம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி காணிகளை இராணுவ முகாம் அமைப்பதற்காக வழங்கும் நடவடிக்கைக்கு எதிராக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது. இப்போராட்டத்தில் தமிழ்த் தேசிய உணர்வுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# மகிந்தவின் பொருட்கள்; விசாரணை ஆரம்பம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பரிசுப் பொருள் கொள்கலன்கள் மீட்கப்பட்டமை குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதிக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் சொந்தமான பரிசுப பொருட்கள் நினைவுச் சின்னங்கள் அடங்கிய கொள்கலன்கள் மீட்கப்பட்டிருந்தன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது புதல்வர் நாமல் ராஜபக்ச ஆகியோரின் உருவம் பொறிக்கப்பட்ட கைக் கடிகாரங்கள், உடுதுணிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன. பெலியகொட பிரதேசத்தில் இந்தப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

அலரி மாளிகையிலிருந்து கொண்டு வரப பட்ட பொருட்களே இவ்வாறு கொள்கலன்களின் அடைக்கப்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கொள்கலன் தொடர்பில் விசாரணை நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வீரகெட்டிய பிரதேசத்திலும் கடிகாரங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் நேற்று முன்தினமும சபுகஸ்கந்தவிலும் இவ்வாறு பொருட்கள் மீகப பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

# மொஹான் பீரிஸ் தடுக்கப்பட்டார்

இலங்கையின் பிரதம நீதியரசர் மொஹான பீரிஸ், நேற்று பிராந்திய மாநாடு ஒன்றில் பங்குபற்ற முடியாதபடி தடுக்கப்பட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து இராணுவப்புரட்சி ஒன்றுக்கு திட்டமிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த தடை விதிக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் நேற்றைய நிகழ்வில் பங்கேற்றால் தாம் நிகழ்வை புறக்கணிக்கப் போவதாக சட்டத்தரணிகள் சங்கம் முன்னதாக எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதனையடுத்தே சட்டமா அதிபர், பிரதம நீதியரசரின் வருகையை தடுத்தார்.

ஏற்கெனவே முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையிலேயே மொஹான் பீரிஸ் பிரதம நீதியரசராக் கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# ஐ.நா. சர்வதேச விசாரணைகளை புதிய அரசு அனுமதிக்க வேண்டும்

## ☆ வடக்கு அமர்வில் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

இலங்கை மீதான ஐ.நா சர்வதேச விசாரணைக்கு புதிய அரசு அனுமதிக்க வேண்டும் மென வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையின் மாதாந்த அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் உரையாற்றிய சிவாஜிலிங்கம் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டுக்களினை சர்வதேச விசாரணை செய்வதற்கு புதிய அரசு அனுமதியளிக்க வேண்டும்.

தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு வலிந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பல இலட்சம் மக்கள் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இதனை விசாரணை செய்வதற்கு தற்போதைய புதிய அரசு அனுமதியளிக்க வேண்டும்.

தமிழர்களின் வாக்குப்பலத்துடன் ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசு 100 நாள் வேலைத் திட்டத்தின் அடிப்படையில் பலவற்றை செய்து வருகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் முறைமை அரசியல் முறைமை என்பவற்றில் புதிய அரச மாற்றம் கொண்டுவருவதாக கூறிவருகின்றது.

ஆனால் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து எதுவும் கூறவில்லை ஏனைய முறைகள் மாற்றப்பட்டால் அது சிறுபான்மையினருக்கு பாதகமாக அமையும்.

இனப்பிரச்சினையை முதன்மையாகக் கொண்டு அனைத்தும் ஒன்றாக தீர்க்கப்பட வேண்டும்எனதெரிவித்தார்சிவாஜிலிங்கம். (செ-4)

# பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் செயலாளராகிறார் விஜயலட்சுமி



வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளரான விஜயலட்சுமியை மாற்றம் செய்யும்படி முன்னைய அரசிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாணசபை ஆகியன பல தடவை கோரிக்கை விடுத்திருந்த நிலையில், தற்போது இவர் அந்தப் பதவியில் இருந்து மாற்றம் செய்யப்பட்டுள்ளார். (செ-11)

# ஜனாதிபதி மைத்திரியின் ஆட்சியில் குடும்ப ஆட்சிக்கு இடமில்லை

## பைசர் முஸ்தபா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரியின் ஆட்சியில் குடும்ப ஆட்சிக்கு இடமில்லை என சிவில் விமான சேவைகள் ராஜாங்க அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை அமைச்சர் பைசர் முஸ்தபா தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சிவில் விமான சேவைகள் அமைச்சின் கீழ் நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் ஊழலுக்கோ, மோசடிகளுக்கோ, குடும்ப ஆட்சிக்கோ பழிவாங்கலுக்கோ இடமிருக்காது.

ஆனால் கடந்த காலத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டோருக்கான தண்டனை பெற்றுக் கொடுக்க தயங்க மாட்டோம்.

மத்தள விமான நிலையம் நஷ்டத்தில் இயங்குவதால் அதனை மூடிவிடும்படி விமான சேவைகள் அதிகார சபை உத்தரவிட்டுள்ளது.

இதன் முழு விபரமும் எதிர்காலத்தில் பகிரங்கப்படுத்தப்படும். அத்துடன் அமைச்சில் எனது உறவினர் எவருக்கும் இடமளிக்கமாட்டோம் என்பதை உறுதியாக சொல்லிக் கொள்கிறேன் என்றார். (செ-11)

# கட்சி தாவினால் பதவி பறிபோகும்

(கொழும்பு)

கட்சி தாவும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவியை உடனடியாக பறிக்கும் வகையிலான சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் விரைவில் நிறைவேற்றப்படவுள்ளது.

மைத்திரி அரசாங்கத்தின் நூறுநாள் செய்ற்திட்டத்தின் வழிகாட்டுதல் குழுவான தேசிய நிறைவேற்று சபை இது தொடர்பான இணக்கப்பாடொன்றை எட்டியுள்ளது.

இதன் பிரகாரம் அரசியல் ரீதியாக கட்சித் தாவல்களை மேற்கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவியை உடனடியாக பறிக்கும் வகையில் குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்படவுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் இச்சட்ட மூலம் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இச்சட்ட மூலம் தொடர்பான இணக்கப்பாட்டுக்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடமும் இணக்கம் பெறப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-11)


**வாழ்க்கையில் வெறுப்பா ?**

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776

(சி-9863)


# கோத்தாவின் ஆயுத களஞ்சியத்தை சோதனையிட நீதிமன்று அனுமதி

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ரக்னா லங்கா நிறுவனத்தின் ஆயுத களஞ்சியத்தை சோதனையிட நீதிமன்றம் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டப சூழலில் இந்த ஆயுத களஞ்சியம் இயங்கி வந்ததுடன் அண்மையில் அது முத்திரை இடப்பட்டு மூடப்பட்டது.

இந்த நிலையில், அந்த ஆயுத களஞ்சியத்தை சோதனையிட நீதிமன்றம் நேற்று பொலிஸாருககு அனுமதி வழங்கியது.

கறுவாத்தோட்ட பொலிஸார் விடுத்த வேண்டுகோளை ஏற்று கொழும்பு பிரதான நீதவான் கியான் பிலப்பிட்டிய இந்த அனுமதியை வழ்ங்கினார்.

கோட்டை மாநகர சபை உறுப்பினர் ஒருவர் வழங்கிய தகவலுக்கு அமைய பொலிஸார் அண்மையில் ஆயுத களஞ்சியத்தை முற்றுகையிட்டு சோதனையிட்டனர்.

அங்கு பல ஆயுதங்களுடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உருவங்கள் பொறிக்கப்பட்ட பல்வேறு பொருட்களும் இருந்தன. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தச் சட்டம் அமுலாக்கப்பட வேண்டும்

## இந்தியா மீண்டும் வலியுறுத்து

**(கொழும்பு)**

**இலங்கையில் 13 ஆவது சட்டதிருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமுமில்லை என இந்திய பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் வெங்கய நாயுடு தெரிவித்துள்ளார்.**



திருமண நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக மத்திய அமைச்சர் வெங்கய நாயுடு நேற்று முன்தினம் சென்னை வந்திருந்தார். சென்னை விமான நிலையத்தில் அவர்நிருபர்களிடம்தெரிவிக்கையில்,

ஜல்லிக்கட்டு என்பது உள்ளூர் பிரச்சினை. இது தேசிய பிரச்சினை அல்ல. இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. இலங்கை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவையும் சீனாவையும் மோத விட நினைத்தார் என்று இலங்கை பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறியிருப்பது மிகவும் கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான கருதது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பழங்காலம் முதலே நல்ல நட்பு இருந்தது. அது தொடர வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது.

மேலும் இலங்கையில் புதிய அரசு அமைந்துள்ள நிலையில், தமிழர்கள் நிலை மாறும் என்ற நம்பிக்கை உள்ளது. மேலும், முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி முயற்சியால் ஏறபட்ட இலங்கையின் 13 ஆவது சட்ட திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து இந்தியா என்றும் மாறவில்லை. திரைப்பட தணிக்கைக் குழு உறுப்பினர்கள் அந்த பதவியிலிருந்து விலகியுள்ளனர். நேற்று முன்தினம் வரை அவர்கள்தான் பதவியில் இருந்தனர். தணிக்கைத்துறையில் ஏதேனும் தவறு என்றால் அவர்களை அவர்களே குற்றம்சாட்டிக் கொள்ள வேண்டும். தணிக்கைக் குழுவை அரசியலாக்கியது காங்கிரஸ் அரசுதான், எனவே, தற்போதைய புதிய அரசை அவர்கள் குறை சொல்லக் கூடாது என நிருபர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர் மேலும் பதிலளித்துள்ளார். (இ-5)

> **“இலங்கை- இந்திய உடன்படிக்கையின் மூலம் உருவாக்கப்பட்ட 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என இந்திய அரசு மீண்டும் வலியுறுத்தியுள்ளது. இருப்பினும் ஈழத் தமிழர்கள் தரப்பில் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையான தீர்வைப் பெற்றுத் தராது என்ற கருத்து தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகின்றது ”**

## முன்னாள் பிரதமர் ஜயரத்ன வெளிநாடு செல்வதற்குத்தடை



ஜனாதிபதித் தேர்தல் தினத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்று தொடர்பாக முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரத்னவுக்கும் அவரது மகன் உட்பட ஐவருக்கு வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தினத்தின் போது பொதுவேட்பாளரின் காரியாலயம் ஒன்றைத் தாக்கியது, அனுமதியின்றி உட்பிரவேசித்தல், துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியமை என்பவை தொடர்பாக முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரத்னவின் புதல்வரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான அனுராதா ஜயர்த்ன மற்றும் கம்பளை நகரசபை உறுப்பினர்கள் இருவர், உடபலாத்த பிரதேச சபை உறுப்பினர் ஒருவர், அமைச்சர்கள், பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தர் ஒருவர் உட்பட ஐவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கம்பளை நீதவான் உபுல் ராஜகருணா மேற்படி சந்தேக நபர்கள் வெளிநாடு செல்வதற்குத் தடை விதித்துள்ளார். இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கும் உள்ளூராட்சி சபை உறுப்பினர் தர்சன நயன தரங்க என்பவர் மட்டும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். ஏனைய சந்தேக நபர்களையும் தொடர்புடைய வாகனங்களையும் பொலிஸார் தேடி வருகின்றனர். (இ-5)

## ஆளுநர் டிக்கிரி இராஜினாமா

மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தனது ஆளுநர் பதவியை இராஜினமா செய்துள்ளார். அவருடைய பதவிக்காலம் இவ் வருடம் டிசெம்பர் மாதத்துடன் நிறைவடைய விருக்கின்ற நிலையிலேயே அவர்தனது பதவியை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இராஜினமா செய்துளளார்.

அவர் மத்திய மாகாண ஆளுநர் பதவிக்கு கடந்த 2005 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## அபிராமிப்பட்டர் விழா


(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் அபிராமிப் பட்டர்விழா இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறவுள்ளது.

மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று அம்பாளுடன் அபிராமிப்பட்டர் திருவீதியுலா வரவுள்ளார். (இ-5)

## களங்கம் துடைக்க மீண்டும் வருவேன்

### பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு



தற்போது அமெரிக்காவில் தங்கியுள்ள முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ விரைவில் நாடு திரும்பவுள்ளதாக அறிவித்துள்ளார்.

தேர்தலுக்கு பின்னர் நாட்டில் தமது பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் தாம் மக்களுக்காக செய்த சேவைகளை கொண்டு தம்மை நியாயப்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளார். குறுஞ்செய்தி ஒன்றின் மூலம் அவர் இதனை அறிவித்துள்ளார். இதேவேளை தற்போதைய அரசாங்கத்தில் கொள்கை வகுப்பு மற்றும் பொருளாதார விவகாரங்களை பொறுப்பேற்றுள்ள பிரதமர் ரணில் விக்ரமசிங்க, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ பயன்படுத்திய அலுவலகத்தில் இருந்து மாற்று அலுவலகம் ஒன்றிற்கு பணிகளை மாற்றவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## 13 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்துடன் 2 பெண்கள் கைது

இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு தங்கம் கடத்திச் சென்ற இரண்டு பெண்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர். கொச்சி விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து 13 இலட்சம் பெறுமதியான 400 கிராம் தங்கம் மீட்கப்பட்டுள்ளது. ஆடைகளுக்குள் மறைத்து குறித்த பெண்கள் தங்கம் கடத்திச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## இராசி பலன்

20.01.2015
(தை 06, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு
அமாவாசை முன்னிரவு 7.58 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 2.42 மணிவரை
இராகுகாலம் 3.35-5.05 மணிவரை
சுபநேரம் 11.05-12.35 மணிவரை
அமாவாசை விரதம்

வளவன்

**மீனம்:** எடுத்த காரியங்களில் பெரியளவில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் அதிகரிக்கும் நாள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள்.

**மேடம்:** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**இடபம்:** நல்லவர்களின் தொடர்புகளால் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** முக்கியமான பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், சாப்பிடக்கூட நேரமில்லாமல் வேலை செய்வீர்கள்.

**கும்பம்:** சாப்பிடக்கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், உறவினர்களின் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்:** நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம், தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத கற்பனைகள் தோன்றி மறையும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், பெண்களால பெருமைகள் வந்து சேரலாம், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிபுகள் எடுப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு:** நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** சேமிப்பை உயர்த்த முற்படுவீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களின் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**துலாம்:** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, நலன்தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி:** நீண்ட நாட்களாக தள்ளிப்போட்ட காரியமொன்றை இன்று திடீரென செய்து முடிப்பீர்கள், உயர் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், வியாபார விருத்தியுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 128

## மனக்கோட்டைகளைத் தகர்த்தல்!

...மேலும் உங்களது கற்பனைகளையும் ஆசைகளையும் அடக்கி வைக்க சமூகம் முயற்சி செய்ய முயற்சி செய்ய, அவை மேலும் மேலும் வளர்கிறது; ஏனெனில், சமூகம் அதன் மூல காரணத்தை அறிந்து கொள்ளாமல் அறிகுறிகளை அடக்க முயற்சி செய்கிறது.

வெறுமனே ஒரு மரத்தின் கிளைகளை மட்டும் வெட்டிவிட்டு அதன் வேர்களை அப்படியே விட்டுவிட்டால் என்னவாகும்? மரம் இன்னும் செழிப்பாக வளரும். அவ்வளவுதான்!

எப்படியாயினும் இந்த சில வருடங்களில், நாம் எல்லா விதமான ஊடகங்களின் வாயிலாகவும் கருத்துக்களைச் சேகரித்து ஒரு முழுமையான பெண் அல்லது ஆணின் உருவத்தை மனதில் உருவாக்கிக் கொள்கிறோம். ஒவ்வொரு மனிதரிமிருந்தும் சிறந்த நாசி, சிறந்த கண்கள், சிறந்த தோற்றம் என்று சேகரித்து நமது இலட்சிய மனிதனை உருவாக்கிக் கொள்கிறோம். நாம் ஒரு வெட்டி ஒட்டும் முறையைப் பின்பற்றுகிறோம்! உங்கள் கணினிகளில் நீங்கள் எப்பொழுதும் வெட்டி ஒட்டிக்கொண்டிருக்கிறீர்கள் இல்லையா?

இந்த நிலை கிட்டத்தட்ட 7 வருடங்கள் நீடித்து இருக்கும்; நாம் 20 அல்லது 21 வய்தை அடையும் வரை இந்த சமயத்தில் ஊடகங்களுடன் அடையாளப்படுத்திக்கொள்ளுதல் போய் விடுகிறது.

ஆனால், அவற்றிலிருந்து பெற்ற கருத்துக்கள் நம் மனதில் ஏற்கனவே ஆழமாக வேரூன்றி விடுகிறது. பிறகு ஒரு புதிய தேடல் ஆரம்பிக்கிறது - அந்த இலட்சிய மனிதனை நமது நிஜ வாழ்வில் தேடுவது.

இந்தத் தேடல் நமக்கு கணவனாக அல்லது மனைவியாக வரப்போகிறவர் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றியது. இங்குதான் எதிர்பார்ப்புகள் ஆரம்பிக்கின்றன.

அடுத்த 7 வருடங்களுக்கு இந்தத் தேடல் தொடர்கிறது. நாம் ஒவ்வொரு மனிதராக முயற்சி செய்து ஏமாற்றம் அடைகிறோம். அறிவுள்ள சில மனிதர்கள், சிறிது காலத்தில் கனவுகள் உண்மையாக முடியாது என்பதைக் கண்டுகொள்கிறார்கள். கனவுகள் உண்மையாக முடியாத காரணத்தினால்தான், கனவுகள் என்று அழைக்கப்படுகின்றன! ஆனால், பலர் அதைத் தேடிக் கொண்டே இருக்கிறார்கள்.



ஒரு சின்ன கதை... ஒரு 90 வயது மனிதர் தினமும் கடற்கரையில் காலை முதல் மாலை வரை அமர்ந்து மக்களை கவனித்துக்கொண்டிருப்பது வழக்கம். இதைக் கவனித்துக்கொண்டிருந்த இன்னொரு மனிதர் அவரிடம் சென்று, நீங்கள் தினமும் இங்கு அமர்ந்து என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு அந்த வயதான மனிதர் சொன்னார், நான் எனக்கு மனைவியாக ஒரு பெண்ணைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

இந்த பதிலால் அதிர்ச்சியடைந்த அந்த மனிதர் கேட்டார். நீங்கள் ஏன் உங்கள் இளமையிலேயே தேடியிருக்கக் கூடாது?

வயதான மனிதர் பதிலளித்தார், நான் என் 30 வயதிலிருந்து தேடிக் கொண்டிருக்கிறேன். திகைப்படைந்த அந்த மனிதர் கேட்டார். நீங்கள் எந்த மாதிரி பெண்ணைத் தேடிக்கொண்டிருக்கிறீர்கள்? அவர் பதில் சொன்னார், நான் ஒரு முழுமையான பெண்ணைத் தேடிக்கொண்டிருக்கிறேன்.

அவர் கேட்டார், அது போன்று ஒருவரைக் காணவே இல்லையா? வயதான மனிதர் சொன்னார், என் மனதில் இருப்பது போன்ற ஒரு பெண்ணைப் பார்த்தேன். ஆனால், அவளுடன் சரிப்படவில்லை. அந்த மனிதர் ஏன் என்று கேட்டார். வயதான மனிதர் சொன்னார், அவளும் ஒரு முழுமையான ஆணைத் தேடிக்கொண்டிருந்தாள்!

(பலத்த சிரிப்பு)

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

### ஆடம்பர அரசியல்வாதிகளுக்கு மத்தியில் பாத்திரம் தேய்க்கும் பெண் கவுன்சிலர்!...

இந்தியாவில் ராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை நகராட்சி அ.தி.மு.க பெண் கவுன்சிலர் மீனா (42 வயது). இவர் மாதம் 1,200 ரூபாய்க்கு வீடுகளில் பாத்திரம் தேய்த்து வீட்டுவேளை பார்த்து வருகிறார்.

பொதுவாக அரசியலில் இருந்தால் பார்ப்பதற்கு தோரணையாக இருப்பார்கள். கார், பெரிய வீடு என வசதி வாய்ப்புடன் இருப்பார்கள். ஆனால் இவரோ ஓட்டு வீட்டில் வசித்து வருகிறார். இவரது கணவர் மூக்காண்டி கொத்தனார் பணி செய்து வருகிறார். இவர்களுக்கு மகன். 2 மகள் திருமணமாகிவிட்டது.



இவரது 2 வார்டு அருந்ததியினருக்கு ஒதுக்கப்பட்டது. தேர்தலில் நிற்க 500 ரூபாய் தான் டெபாசிட் தொகை. அதையும் கட்சியினர் தான் கட்டியுள்ளனர். மேலும் அவர் கூறுகையில், "இரண்டு வீடுகளில் 20 வருடங்க ளாக சமையல் பாத்திரம் தேய்த்து துணி துவைக்கிறேன். இதற்கு மாதம் 600 ருபாய் காலை 5.30 மணி முதல் 12.30 வரை வேலை பார்த்த பின் எனது வீட்டிற்கு சென்று சமையல் செய்வேன்.

அதுபோக நகராட்சி கூட்டத்தில் மக்களின் குறைகளை வலியுறுத்துவேன். என்னால் முடிந்த அளவு சேவை செய்து வருகிறேன். ஒருசிலர் என்னை ஏளனமாக பார்த்தாலும் கண்டுகொள்வதில்லை. அதுமட்டுமில்லாமல் மற்றவர் களுக்காக வாழாமல் நமக்காக உழைத்து வாழவேண்டும்" என்றார்.

# சமைப்போம் சுவைப்போம்

## சோளம் சூப்

**தே.பொருட்கள்:-**



பதப்படுத்தப்பட்ட சோளம்- 1 கப்

வெஜிடபிள் ஸ்டாக்- 1 லிட்டர்

வெண்ணைய்- 1 டேபிள் ஸ்பூன்

பால் -1 கப்

தேவையானால் முட்டை- 1 அஜினோ மோட்டோ- 1/2 தேக்கரண்டி மிளகுத்துள்-1 தேக்கரண்டி மைதா மாவு -1 மேஜைக்கரண்டி உப்பு -தேவையான அளவு

### செய்முறை

வெண்ணையை அடுப்பில் வைத்து உருக்கிக்கொள்ளவும். வெண்ணைய் உருகியவுடன், மைதா மாவு சேர்த்து 1 நிமிடம் வரை வறுக்கவும். பால் சேர்க்கவும். டப்பியில் உள்ள மக்காச் சோளத்தையும், வெஜிடபிள் ஸ்டாக்கையும் (காய்கறி வேக வைத்த தண்ணீர்) சேர்க்கவும். உப்பு, மிளகுத்தூள் சேர்க்க வும். சூப் இரண்டு கொதி வந்தவுடன் தேவையானால் முட்டை சேர்க்கவும். முட்டையை உடைத்து மெதுவாக விடவும். சூப்பை சுமார் 10 நிமிடம்வரை கொதிக்க விடவும். அஜினோ மோட்டொவைச் சேர்க்கவும். சூப்பை வடிகட்டாமல் சூடாகப் பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கிற்கு சுயாட்சியா?

## முற்றாக மறுக்கிறார் ரணில்

(கொழும்பு)

**வடக்கு ,கிழக்கு மாகாணங்களுக்கு சுயாட்சியை ஏற்படுத்த இருப்பதாக ரணில் விக்ரமசிங்கவை மேற்கேள்காட்டி இந்தியாவின் இணையத்தளம் வெளியிட்ட செய்தியை ரணில் முற்றாக மறுத்துள்ளார்.**



13 ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுலாக்கவிருப்பதாக கூறியதை இந்த இணையத்தளம் திரிவுபடுத்தி வெளியிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இலங்கை தொடர்பில் ஐ.நா விசாரணையை நடத்துவதற்காக நிபுணர் குழு ஒன்று நியமித்து விசாரணை நடத்தி வருகின்றது.

இந்தக் குழுவுடன் அரசு இணைந்து செயறபடுவதோடு, குற்றத்துக்கான தண்டனையை உள்நாட்டு சட்டதிட்டத்தின்படியே அணுகப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்தோடு சீனா மற்றும் ஏனைய வெளி நாடுகளினால் இலங்கையில் அமுலாக்கப்படும் வேலைத்திட்டங்கள் குறித்து மறுபரிசீலனை செய்யப்படுவதோடு மோசடிகள் குறித்து விசாரணை செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## 13 கோடி பெறுமதியான சட்டவிரோத சிகரெட் சுங்கப் பிரிவிடம் சிக்கியது

(கொழும்பு)

கிரிஉல்ல ஆடை தொழிற்சாலை ஒன்றுக்கு ஆடை கழுவும் தூள் கொண்டு வருவதாகக் கூறி சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 13 கோடி ரூபா பெறுமதியான 44 இலட்சம் சிகரெட் தொகை சுங்கப் பிரிவினரால் நேற்று மீட்கப்பட்டு ள்ளது.

டுபாயில் இருந்து கடந்த மாதம் 18 ஆம் திகதி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கொள் கலன் ஒன்றை ஒருகொடவத்த சுங்க களஞ்சியசாலையில் சோதனை செய்த போதே சிகரெட் தொகை மீட்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட இந்த சிகரெட்டினால் சுங்கப் பிரிவிற்கு 247 மில்லியன் நட்டம் என சுங்கப் பிரிவின் ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார். (இ-5)

## வாழைச்சேனை கடதாசி ஆலை விடுதிகளில் பொதிசெய்யப்பட்ட உணவுப்பொருட்கள் மீட்பு

(கொழும்பு)

வாழைச்சேனை கடதாசி ஆலையின் விடுதிகளில் பொதி செய்யப்பட்ட நிலையில் உலர் உணவுப் பொதிகளும் பாடசாலைப்பை மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் படம் பொறிக்கப்பட்ட அப்பியாசக்கொப்பிகளும் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வாழைச்சேனை கடதாசி ஆலையியின் நிறைவேற்று அதிகாரியாக இருந்த தேசமான்ய மங்கள சி.செனரத் பாவித்த விடுதி மற்றும் அதன் அருகில் உள்ள இரண்டு விடுதிகளிலுமாக மொத்தம் மூன்று விடுதிகளில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பொது மக்களுக்காக வழங்குவதற்கு கொண்டு வரப்பட்ட உலர் உணவுப் பொருட்கள், பாடசாலை கற்றல் உபகரணங்கள், தேர்தல் வெற்றியின் பின்னர் பாவிப்பதற்காக வைத்திருந்த பட்டாசு என்பவற்றை பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.

கடதாசி ஆலையின் விடுதிகளில் தேர்தல் காலத்தின் போது வந்த உலர் உணவுப் பொதிகள் இருப்பதாக வாழைச்சேனை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி எம்.பி. எம். ஹுஸைனின் பணிப்புரைக்கமைவாக விடுதிகள் ஆலையின் அதிகாரிகள் மற்றும் வாழைச்சேனை பொலிஸார் ஆகியோர் திறந்து பார்வையிட்ட போதே இப்பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த விடுதிகளுக்கு வாழைச்சேனை பொலிஸார் பாதுகாப்பு வழங்கியுள்ளதுடன் நேற்று திங்கட்கிழமை வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற அதிகாரிகளின் உதவியுடன் பொருட்களை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் அதுவரை வாழைச்சேனை பொலிஸாரின் பாதுகாப்பிலேயே குறித்த மூன்று விடுதிகளும் இருக்கும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## புலனாய்வுப்பிரிவு பணிப்பாளராக மார்சோமாவை நியமித்தது அரசு

அரச புலனாய்வு பிரிவின் பணிப் பாளராக கடமையாற்றிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்திரா வாகி ஸ்ட தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இதனையடுத்து, அப்பிரிவின் பதில் பணிப்பாளராக கடமையாற்றி வந்த சிரேஷ்ட பொலிஸ் அத்திய ட்சகர் எம்.எச். மார்சோம நியமிக்கப் பட்டுள்ளார்.

கடந்த காலம் முழுவதும் அரசியல் கட்சித் தலைவர்கள், செயற் பாட்டாளர்களின் தொலைபேசி அழைப்புகளை அரச புலனாய்வுப் பிரிவு பதிவு செய்து வந்தது.

இவ்வாறு தொலைபேசி அழைப் புக்களைப் பதிவு செய்யும் பணியில் ஈடுபட்ட நபரும் அந்த பணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஆடம்பரப் பந்தயக்காரின் இலக்கத்தகடு போலியானது

(கொழும்பு)

பிலியந்தலை பிரதேசத்தில் வீடொன்றில் இருந்து பிரபலமான அரசியல் வாதியின் மகனுக்கு சொந்தமானது என கூறப்படும் ஆடம்பர பந்தயக் கார் ஒன்றை பொலிஸார் நேற்று முன்தி னம் ஞாயிற்றுக்கிழமை மீட்டுள்ளனர்.

அந்த வீட்டின் உரிமையாளர் ஓய்வுபெற்ற வங்கி ஊழியர், அவரது புதல்வர் இராணுவத்துக்கு வாகனங் களை விநியோகித்து வருபவர் எனக் கூறப்படுகிறது.

wp KE 1391 என்ற இலக்கத்தை கொண்ட கறுப்பு, சிவப்பு நிறத்திலான காரே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. குறித்த கார் தனது மகனின் நண்ப ருடையது என பொலிஸாரிடம் வீட்டு உரிமையாளர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் மூலம் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே இந்த காரை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த கார் தொடர்பில் வீட்டிலில் இருந்தவர்கள் உரிய ஆவணங்கள் கையளிக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். கார், இரண்டு அல்லது மூன்று தடவைகள் ஓட்டப்பட்டிருக்க லாம் என்று பொலிஸார் சந்தேகிக் கின்றனர். இதேவேளை, பிலியந்த லையிலிருந்து மீட்கப்பட்ட ஆடம்பர பந்தயக் கார், மினுவாங்கொடை யிலுள்ள தொழிற்சாலைக்கு சொந்த மான ஓட்டப்பந்தய கார் என்றும் அக்கார் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த பொலிஸார், பொய்யான இலக்கத்தகடை பயன்படுத்தி அக்கார், ஓட்டப்பந்தயத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர். அந்த காரை, சோதனைக்கு உட்படுத்துவத ற்கு பொலிஸாருக்கு அனுமதியளிப்பதாக மினுவாங்கொடை தொழிற்சா லையின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

ஆடம்பர பந்தயக் கார்களை முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவின் புதல்வர்கள் பயன்படுத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 37 செவ் 2இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: BSC/ பொறியியளாளர்<br>தொ.இ: B/4003 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 8 1/4<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: G/4001 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 23 1/4 செவ் 8இல்<br>உயரம்: 167cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ அரச தொழில்<br>தொ.இ: B/4004 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 56<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: G/4002 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்:<br>கி.பா: 27 1/2 சூரிசெவ் 2இல<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: பொறியியளாளர் (நோர்வே PR)<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/4005 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 44 செவ் 8இல்<br>உயரம்: 152cm<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/4008 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 47 1/2 செவ் 8இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்: A/L (லண்டன் PR)எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/4006 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 53 செவ் 2இல்<br>உயரம்: 4’10"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/4010 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
...அலுவலகம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

வடமராட்சி கல்வி வலயத்தில் வெற்றிடமாகவுள்ள பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம் (தரம் II) துன்னாலை தெற்கு அ.த.க.பாடசாலை (தரம் III) என்பவற்றுக்கான அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ் வரும் தகைமையுடைய அதிபர், ஆசிரியர்கள் குறித்த பாடசாலைகளுக்கான அதிபர் பதவிக்குவிண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பத்தாரி பின்வரும் தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. தரம் II பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவையில் தரம் 2-II இற்கு மேற்பட்ட தரமுடையவர்கள் அல்லது இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-I இற்கு மேற்பட்ட தரமுடையவர்களும் தரம் III பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவையில் தரம் III இற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக அல்லது இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-I இற்கு மேற்பட்ட தரமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2.இலங்கை அதிபர் சேவையிலுள்ள அதிபர் கடமையாற்றாதவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். (இவர்களுக்கு பிரிவு 4 பொருத்தமாகாது)

3.வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.


4.விண்ணப்பத்தாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் ஆகக் குறைந்தது மூன்று வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றிருத்தல் வேண்டும்.

5.விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக் கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

6. இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களது பொருத்தமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் மாத்திரம் ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

7.விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 02.02.2015.

8.விண்ணப்பத்தாரிகள் நேர்முகத் தேர்விற்கு தோற்றுதல் வேண்டும் தேவையேற்படின் எழுத்துப் பரீட்சைக்கும் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப்பிரிவில் பெற்றுக் கொள்ளமுடியும். (இ




# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர்கள் இருவர் காயம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு முள்ளியான் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் பிறஜினி மற்றும் எஸ்.ஜீவன் ஆகிய இருவருமே படுகாயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தின் பின்னர் சம்பவ இடத்தினூடாகப் பயணித்துக் கொண்டிருந்த கலோறஸ்ற் மிதிவெடியகற்றும் பெண் பணியாளர்கள் விபத்தில் காயமடைந்த இளைஞர்களுக்கு முதலுதவிச் சிகிச்சை வழங்கிய பின்னர் அவர்களை அம்பன் வைத்தியசாலையில்சேர்த்தனர்.

அம்பன் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக மந்திகை வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான அம்புலன்ஸ் சேவையை பெற முடியாது போனதால் காயமடைந்த இளைஞர் ஒருவர் மாகாண சபை உறுப்பினர் த.சுகிர்தனுக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு அவரது வாகனத்தின் மூலம் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (இ-64)

# மிருசுவில் வைத்தியசாலையில் வழிந்தோடும் மலக்கழிவுகள்

## விடுதி நோயாளர்கள் அசௌகரியம்

(முக்கொம்பன்)

மிருசுவில் நாவலடிச் சந்தியில் அமைந்துள்ள கொடிகாம வைத்தியசாலை வளாகத்தில் சேமிக்கப்பட்டு வரும் மலக்கழிவுகள் களஞ்சிய அறைக்கு வெளியே வழிந்தோடி தேங்கி நிற்பதால் வைத்தியசாலை விடுதி நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மலக்கழிவுகளை சேகரிக்கும் களஞ்சியம் நோயாளர் விடுதிக்கு அருகாமையிலுள்ளதாகவும் இதனால் வெளியே தேங்கி நிற்கும் மலக் கழிவுகளால் சுகாதாரக் கேட்டிற்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி வைத்தியசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் களஞ்சியத்திலேயே தென்மராட்சிப் பிரதேச மலசலக்கூடக்கழிவுகள் கஞ்சியப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மேற்படி மலசலகூடக் களஞ்சியத்தை வேறு ஓர் இடத்திற்கு மாற்றம் செய்து தற்போது ஏற்பட்டுள்ள அசௌகரியத்தை நீக்குமாறும் சுகாதாரப் பகுதி அதிகாரிகள் இது விடயம் குறித்துக் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-283)

# மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)


வட்டுக்கோட்டை துணவி அரசடிப் பிள்ளையார் கோயில் மஹாகும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு நாளை புதன்கிழமை காலை 8.45 மணிதொடக்கம் மாலை 5.30 மணிவரை எண்ணெய்க் காப்பு வைபவமும் நாளை மறு தினம் வியாழக்கிழமை காலை 8.32 மணி தொடக்கம் 9.42 மணிவரை மஹாகும்பாபிஷேகமும் இடம் பெறவுள்ளது. (இ-5)

✦ ✦ ✦ ✦ ✦

மாவிட்டபுரம் தெற்கு கம்பன் சீமா ஸ்ரீ ஞானவைரவர் சுவாமி திருக்கோயில் மஹாகும்பாபிஷேகம் நாளை மறு தினம் வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரை இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை எண்ணெய்க்காப்பு வைபவம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

யாழ்.இந்துக்கல்லூரியின் 125 ஆவதுஆண்டு நிறைவையொட்டி 125 எனும்வடிவில் பானைகள் அடுக்கப்பட்டு கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற பொங்கல்தினவிழா கொண்டாட்டத்தின் போது... (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)








# மோட்டார் சைக்கிள் எரிக்கப்பட்டது

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மக்கள் சபை உறுப்பினரின் மோட்டார் சைக்கிள் இனம் தெரியாத நபர்களினால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியளவில் தீ வைக்கப்பட்டதாக மருதங்கேணி உப பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுபதிவு செய்யப்பட்டுள்ளதாக பளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மருதங்கேணிவடக்குதாளையடி பகுதியைச் சேர்ந்த சரவணபவானந்தன் சிவகுமார் (வயது-35) என்பவரினுடைய ஒரு இலட்சத்தி 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மோட்டார் சைக்கிலே இவ்வாறு எரிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பான விசாரணையை மருதங்கேணி உப பொலிஸ் நிலையப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-60)

# பாரவூர்திச் சங்க உறுப்பினர்கள் கொடுப்பனவுகளை பெறமுடியும்

யாழ். மாவட்ட பாரவூர்திச் சங்கங்களின் உறுப் பினர்களில் கடந்த கால கொடுப்பனவுகள் கிடைக்கப் பெறாதவர்கள் உரிய ஆவணங்களை தலைவரூடாக வழங்கினால் பரிசீலனை செய்யப்பட்டு கொடுப்பனவுகள் வழங்கப்படும் என மாவட்ட கூட்டுறவு அபிவிரு த்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார். யாழ். மாவட்ட பாரவூர்தி சங்கத்தினால் ஏற்பாடு செய் யப்பட்ட வருடாந்த ஒன்று கூடலும் மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில ஏற்பட்ட இன்னல்களைச் சந்தித்தும் பாரவூர்திச் சங்கம் தனது செயற்பாடுகளை முன் னெடுத்தமைக்கு நான் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

காலச்சூழலுக்கு ஏற்ப செயற பட்டு எமது கலாசார, பண்பாட்டு பொருளாதார விழுமியங்களுக்கு ஏற்ப புலமைப் பரிசில் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளை கௌரவிக்கும் செயற்பாட்டினை முன்னெடுப்பதும் வரவேற்கத்தக்கது.

இவ்வாறான செயற்பாடுகள தொடர்ந்தும் நடைபெற வேண்டும். அத்துடன் கடந்த காலங்களில் கொடுப்பனவுகள் வழங்கப்படாமல் பலர் உள்ளனர்.

எனவே கொடுப்பனவுகள் கிடைக்காதவர்கள தங்களிடமுள்ள ஆவணங்களை தலைவரிடம் சமர்ப்பிக்கவும். அவற்றைப் பரீசிலித்து கொடுப்பனவுகள் வழங்குவதறகு அனுமதி வழங்கப்படும்.

மேலும் பாரவூர்தி சங்கத்தினருக்கு மணல் ஏற்றி, இறககுதல் உட்பட இருக்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் மாவட்ட அரச அதிபருடன் விரைவில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படவுள்ளது. எனவே இருக்கின்ற பிரச் சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும். அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-23)

# யாழ்.மாநகர சபையினால் சிறப்புரிமை அட்டை அறிமுகம்

யாழ்.மாநகரசபையினால் குறித்த காலப்பகுதியினுள் மதிப்பீட்டு வரி செலுத்துபவர்களுக்காக சிறப்புரிமை அட்டை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் அட்டையானது கடந்த 3 வருடங்களில் ஜனவரி மாதத்திற்குள் மதிப்பீட்டு வரிகளைச் செலுத்தி நகர அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்த மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்திற்குள் வாழும் பிரஜைகளுக்கு வழங்கப்படவுள்ளது. குறித்த வருடத்திற்குரிய சோலைவரிக் கொடுப்பனவினை அந்த வருடம் ஜனவரி மாதம் 31 ஆம் திகதியினுள் நிலுவை எதுவுமின்றி செலுத்தும் அனைவரும் மாநகரசபையில் இவ்வட்டையினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சிறப்புரிமை அட்டையினைப் பெற்றுக் கொள்பவர்கள் மாநகர சபையினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக விசேட சலுகையினையும் பெற்றுக் கொள்ள முடியும். இச் சிறப்புரிமை அட்டைக்கு உரித்துடையவர்கள் மாநகர சபை நூலகங்களில் எந்த வித கட்டணங்களுமின்றி அங்கத்தவராக இணைந்து இலவசமாகப் புத்தகங்களை பயன்ப டுத்துவதோடு நூலகத்தினுள் இலவச இணைய சேவை வசதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் சபையினால் வழங்கப்படும் மண்டபப் பாவனைகள், வாகனப் பாவனைகள் தொடர்பில் அவற்றைப் பயன்படுத்தும் போது விசேட கட்டணக் கழிவுகள் வழங்கப்படும். கழிவகற்றல், நீர்வழங்கல் என எத்தகையதொரு தேவைக்காகவும் மாநகரசபையின் உதவியைப் பெற முயற்சிக்கும் போது அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசடிகள் குறித்து முறைப்பாடு செய்தால் சுதந்திரக் கட்சிக்கு அவப்பெயர் ஏற்படுமாம்

## முன்னாள் அமைச்சர் ஜகத் பாலசூரிய கூறுகிறார்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பல பேருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் செய்யப் பட்டால், கட்சியின் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படும் என முன்னாள் அமைச்சர் ஜகத் பாலசூரிய தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கேகாலை மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர் களின் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நல்லாட்சியை சரியான முறையில் முன்னெடுக்க வேண்டுமாயின் கட்சி தாவல்களை நிறுத்த வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

நல்லாட்சி பற்றி பேசி வருகிறோம். நல்லாட்சி முன்னெடுக்கப்பட வேண்டு மாயின் இரண்டு பிரதான கட்சிகள் தமது கட்சிகளில் இருந்து அங்குமிங்கும் தாவுவதை தடுத்து நிறுத்த வேண்டும்.

அமைச்சர் பதவிகள் ஏலம் விடப் படுவதாகவும் முன்னாள் அமைச்சர் பாலசூரிய மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)


# உயர்ஸ்தானிகராக கிறிஸ் நோனிஸ்?



இலங்கைக்கான பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராக கலாநிதி கிறிஸ் நோனிஸ் மீண்டும் நியமிக்கப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

இதற்கான உத்தரவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு விடுத்துள்ளதாகவும் அறிய வருகி ன்றது. கடந்த ஒக்டோபர் மாதத்தில் அமெரிக்காவுக்கு விஜயத்தை மேற்கொ ண்டிருந்த அப்போதைய வெளிவி வகார அமைச்சின் கண்காணிப்பு எம்.பி. சஜின்வாஸ் குணவர்த்தன உயர் ஸ்தானிகர் கிறிஸ் நோனிஸ் மீது தாக்குதல் நடத்தியதால் அதனை எதிர்த்து தனது பதவியை அவர் இராஜினாமா செய்திருந்ததோடு முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்த இராஜினாமாவை ஏற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பேசும் படம் - 02




இறைவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்...

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com

தபால் முகவரி : ஆசிரியர், பேசும் படம்,
வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது நேரில்.

# வடக்கில் ஒரு இலட்சம் பேரிடம் தேசிய அடையாள அட்டையில்லை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் ஆட்பதிவுத் திணைக் களத்தினால் வழங்கப்படுகின்ற அடையாள அட்டை ஒரு இலட்சம் பேருக்கு மேற்பட்டவர்களுக்கு இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாத காரணத்தினாலேயே அடையாள அட்டை பெறமுடியாத நிலை காணப்படுகின்றது என வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்விடயத்தில் விசேட அனுமதி மூலம் அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஆவன செய்ய வேண்டுமென வடமாகாண சபை கோரியுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் முதலாவது அமர்வு நேற்றுக் காலை 9.30 மணியளவில் கைதடியிலுள்ள பேரவைச் செயலக கட்டடத்தில் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இவ் அமர்வின் போதே ரவிகரனால் குறித்த பிரேரணை முன்மொழியப்பட்டு சபையில் நிறைவேற்றப்பட்டு பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப் படும் அடையாள அட்டை எமது மாகாணத்தில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்டவர்களுக்கு இல்லை. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாமலேயே பெரும்பாலும் அடையாள அட்டை பெற முடியாத நிலையில் பலர் உள்ளனர்.

எனவே விசேட அனுமதிகளின் மூலம் அடையாள அட்டை இல்லாதவர்கள் அனைவருக்கும் இது கிடைப்பதற்குரிய வழியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினை இச்சபை கோருகின்றது.

எமது மாகாணத்தில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு ஆட்பதிவுத் திணைக் களத்தினால் வழங்கப்படும் அடையாள அட்டை இல்லை. இதற்கு பின்வரும் காரணங்களைக் குறிப்பிடலாம்.

01. முன்பு பலர் பிறப்புப் பதிவு செய்யாமல் இருந்து விட்டார்கள்.

02. பின்பு யுத்த காலத்தில் பல இடங்களில் பிறப்புப் பதிவுப் புத்தகங்கள் அழிந்தோ, அழிக் கப்பட்டோ அதன் காப்புக்கொப்பிகள் இல்லாத நிலையில் இன்றும் பலர் அதனைப் பெறுவதற்கு அலைந்து கொண்டிருக்கின்றார்கள்.

03. வடமாகாணத்திலுள்ள மலையகப் பகுதி மக்களில் பலருக்கு பிறப்புப் பதிவு இல்லாத நிலையுள்ளது.

04. ஆரம்ப காலத்தில் அடையாள அட்டை பெற்றவர் அதன் இலக்கங்கள் அழிந்த நிலையில் திரும்பவும் புதிய அடையாள அட்டை பெறமுடியாமல் உள்ளனர். ஆரம்பித்தில் பிறப்புப் பத்திரம் இல்லாமல் கொடுத்தார்கள்.

இந்த விடயத்தில் எவ்வாறு இலகுவான வழிகளை காண முடியுமோ? அதன்மூலம் சத்தியவோலை மூலமும் உறுதிப்படுத்தியென்றாலும் இவை தீர்க்கப்பட வேண்டும்.

உதாரணமாக ஒரு விடயம் தாய் குழந்தை பெற்றுள்ளார். குழந்தைக்கு வைத்தியசாலையில் பிறப்பு பதிவு செய்யப்படுகின்றது. அந்தப் பதிவில் தாயின் பெயர் உண்டு. பிறந்த திகதி, மாதம், ஆண்டு பதியவில்லை. ஏனெனில் தெரியாது. ஏற்கனவே தாய் பதியவில்லை. இந்தக் குழந்தையின் தாய் என்பது உறுதிப்படுத்தப்படும் போது ஏன் அவருக்கு அடையாள அட்டை வழங்க முடியாது. இந்த விடயம் தந்தைக்கும் பொருந்தும். இவற்றை சத்தியவோலை மூலம் உறுதிப்படுத்தலாமோ? இப்படியான சில வழிகளையாவது இனங்கண்டு இவை தீர்க்கப்பட வேண்டும்.

நடமாடும் சேவைகள் மூலம் பிறப்புப் பதிவு பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கும் அவர்களால் கோரப்படும் ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாமல் உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# இது எப்படியிருக்கு!

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் போது மகிந்த, மைத்திரி என்ற இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கு அப்பால் பேசப்பட்ட ஆ.ஏ. சிறிசேன என்ற வேட்பாளரை, கொழும்பின் ஊடகம் ஒன்று செவ்வி கண்டபோது தம்மை தமது ஊர் மக்கள் தற்போது ஜனாதிபதி என்றே அழைப்பதாக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலின் போது மகிந்த, மைத்திரி என்ற இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கு அப்பால் பேசப்பட்ட ஒருவரே ஆ.ஏ. சிறிசேன என்ற வேட்பாளராவார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஒத்த உருவத்தைக் கொண்ட இவர், மைத்திரிபாலவின் வாக்குகளை சிதறடிப்பதற்காக மகிந்த ராஜபக்ஷ தரப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர், மகிந்த ராஜபக்ஷவின் மெதமுலன என்ற ஊரைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தேர்தலின் போது பலர் சிறிசேன என்ற பெயரை கண்டு இவருக்கும் வாக்களித்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் கொழும்பின் ஊடகம் ஒன்று அண்மையில் அவரை செவ்விகண்டபோது தம்மை தமது ஊர் மக்கள் தற்போது ஜனாதிபதி என்றே அழைப்பதாக குறிப்பிட்டார்.

இதேவேளை தம்மை யாரும் தேர்தலில் போட்டியிடுமாறு கோரவில்லை.

தாம் தொலைக்காட்சி நகைச்சுவை நாடகங்களில் மைத்திரிபால சிறிசேனவின் பாத்திரத்துக்கு நடித்து புகழ் பெற்றமையால் தேர்தலில் போட்டியிடவேண்டும் என்று விரும்பியதாக குறிப்பிட்டுள்ளார்.

தமது பிரசாரத்துக்காக 5 இலட்சம் ரூபாய்கள் செலவானதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தாம் தேர்தலில் 18ஆயிரத்து 174 வாக்குகளை பெற்றுள்ளமையால் தாமே நாட்டில் மூன்றாவது முக்கியமானவர் என்று நினைப்பதாகவும் சிறிசேன தெரிவித்துள்ளார். (இ-5)

# முன்னாள் பிரதியமைச்சர் துலிப் விஜயசேகர பிரதேசசபையின் தவிசாளர் ஆகியோர் கைது!

(கொழும்பு)

அனர்த்த முகாமைத்துவ முன்னாள் பிரதி அமைச்சர் துலிப் விஜயசேகர மற்றும் பிய கம பிரதேசசபை தலைவர் ஆனந்த ஞான பொல ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் தினத்தன்று சிலரை தாக்கிய குற்றச்சாட்டிற்காகவே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளரான மருத்துவர் வசந்த பண்டார உட்பட மேலும் மூவர் கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவுக்கு எதிரில் ஏற்பட்ட சம்பவம் தொடர்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாக செயலாளர் பீ.பி. மஹாகெதர பொலிஸில் செய்திருந்த முறைப்பாட்டுக்கு அமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 நாள் திட்டத்திற்கு ஒத்துழைப்பு இல்லை!

## வாசுதேவ அறிவிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 100 நாள் வேலைத்திட்டத்திற்கு எவ்விதமான ஒத்துழைப்பையும் வழங்கப் போவதில்லை என தெரிவித்த முன்னாள் அமைச்சரும் ஜனநாயக இடது சாரி முன்னணியின் தலைவருமான வாசுதேவ நாணயக்கார, பாராளுமன்றத்தில் தனது கட்சி ஏனைய இடது சாரி கட்சிகளுடன் இணைந்து தனியான எதிர்த்தரப்பாக இயங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக வாசுதேவ நாணயக்கார எம்.பி. மேலும் தெரிவிக்கையில், புதிய அரசியல் கட்சி எதனையும் நான் ஆரம்பிக்கவில்லை. எமது கட்சி ஜனநாயக இடது சாரி முன்னணியாகும் அது தொடர்ந்து இயங்கும்.

புதிய ஜனாதிபதியின் 100 நாள் வேலைத்திட்டத்திற்கு நாம் ஒத்துழைப்பு வழங்க மாட்டோம். ஏனென்றால் முதலாளித்துவ மேற்கத்தேய கொள்கையுடைய ஐ.தே.கட்சியுடனேயே ஜனாதிபதி உடன்பாடு கொண்டுள்ளார். எனவே இதற்கு ஒரு போதும் உடன்படமுடியாது.

அதேவேளை பாராளுமன்றத்தில் எமது கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி மற்றும் இடது சாரி கொள்கைகளைக் கொண்ட கட்சிகள் தனித்து சுயாதீனமாக செயற்படும். இது தொடர்பாக சபா நாயகருக்கு எதிர்வரும் நாட்களில் அறிவிக்கவுள்ளோம்.

தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால பொறுப்பேற்றுள்ளார். எனவே எதிர்வரும் 3 மாதங்களுக்கு பின்னர் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலின் போது தற்போதைய ஐ.தே. கட்சியுடனான கூட்டரசாங்கத்தில் முரண்பாடுகள் தலைதூக்கும்.

எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்பேற்கவுள்ள நிமால் சிறிபால டி சில்வா ஜனாதிபதியுடன் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதை எதிர்க்கவில்லை. ஆனால் ஐ. தே. கட்சியுடனான உடன்பாட்டிலிருந்து ஜனாதிபதி வெளியே வர வேண்டும். அவ்வாறானதொரு நிலையிலேயே உடன்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட வேண்டும். அந்த சூழ்நிலையில் நாம் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் வாசுதேவ நாணயக்கார எம்.பி. மேலும் தெரிவித்தார். (இ-5)

# பலம்வாய்ந்த பொருளாதாரத்துடன் வளமான நாடே எனது எதிர்பார்ப்பு

## ஜனாதிபதி தெரிவிப்பு



தேசிய மற்றும் மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை கட்டியெழுப்பி, பலம்வாய்ந்த பொருளாதாரத்துடனான வளமான நாடொன்றை கட்டியெழுப்புவதே தற்போதைய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தாய்நாடு தொடர்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றும் போது, மகாசங்கத்தினரின் 'அறிவுறுத்தல்கள் மற்றும் ஆலோசனைகளை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வரலாற்று சிறப்புமிக்க களனி ரஜமகா விஹாரைக்கு நேற்று முன்தினம் மாலை சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட சந்தர்ப்பத்திலேயே ஜனாதிபதி இதனைக் தெரிவித்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட அமைச்சர்கள் ,பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, களனி புண்ணிய பூமியை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை துரிதமாக ஆரம்பிப்பதாகவும் தெரிவித்தார். (இ-5)

# விபத்தில் மூவர் பலி

கட்டாரில் இடம்பெற்ற விபத்தொன்றில் மூவர் உயிரிழந்துள்ளனர்.நேற்று முன்தினம் சிறிய ரக வான் ஒன்று விபத்துக்குள்ளானதில் இவர்கள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவர்கள் இலங்கையிலிருந்து தொழில் நிமித்தம் கட்டாருக்கு சென்றவர்களாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்து தொடர்பாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் மங்கள ரன்தெனியவிடம் வினவியபோது, இலங்கை பணியாளர் ஒருவர் இந்த விபத்தில் உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

விபத்துக்குள்ளான வாகனம் தீபற்றியதில் உயிரிழந்த ஏனைய இருவரது சடலங்களும் கருகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் விபத்தில் பலியான ஏனைய இருவரையும் அடையாளம் காண்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த இரண்டு சடலங்களும் விபத்தில் உயிரிழந்த இலங்கையரின் நண்பர்களுடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# கோத்தா, பசிலுக்கு எதிரான முறைப்பாடு பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பிவைப்பு





கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக மேர்வின்சில்வா இரகசிய பொலிஸில் மேற்கொண்ட முறைப்பாடு, பொலிஸ்மா அதிபரின் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

கொலைகள், கடத்தல்கள், தாக்குதல்கள் மற்றும் நிதி மோசடிகள் உள்ளிட்ட குற்றச் செயல்களுடன் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் தொடர்பு கொண்டிருப்பதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தமது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும் இரகசிய பொலிஸாருக்கு கிடைக்கின்ற எந்த முறைப்பாடு தொடர்பிலும் விசாரணை செய்வதற்கு, பொலிஸ்மா அதிபரின் எழுத்து மூல அனுமதி தேவை என்ற அடிப்படையில், இந்த முறைபாடு பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# வடக்கு ஆளுநருக்கு ஒதுக்கப்பட்ட 8 மில்லியன் ரூபா மீளப்பெறப்பட்டது

வடக்கு மாகாண சபையின் வரவு செலவுத்திட்டத்தில் ஆளுநருக்கு ஒதுக்கப்பட்ட 8 மில்லியன் ரூபா நிதி பேரவைச் செயலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபையின் நிதியிலிருந்து ஆளுநருக்கு நிதியொதுக்கப்பட்டமைக்குஉறுப்பினர்கள்கடும் எதிர்ப்புத் தெரிவித்ததை யடுத்தே இந்த மாற்றம் செய்யப்பட் டுள்ளது.

வடக்கு ஆளுநரின் வவுனியா மற்றும் கிளிநொச்சியிலுள்ள விடுதிகள் மூடப்பட்டுள்ளதோடு கொழும்பில் அமைந்துள்ள ஆளுநர் மாளிகையும் மூடப்படுவதற்கான ஏற்பாடுகள்மேற்கொள்ளப்படவுள்ளன.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வின் போதே குறித்த தீர்மானம் சபையில் ஏகமனதாக எடுக்கப்பட்டுள்ளது.

இவ் அமர்வில் ஆளுநரின் நிதியொதுக்கீடு பற்றி அவைத்தலைவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2014 டிசெம்பர் 17, 18 ,19 ஆம் திகதிகளில் நடைபெற்ற வடக்கு மாகாணசபையின் அமர்வுகளின்போது பரிசீலிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட விவாதத்தின்போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு பிரமாண அடிப்படையிலான நன்கொடையிலிருந்து ஒதுக்கப்படும் அதேதொகை ஆளுநருக்கும் ஒதுக்கப்படுவது பற்றி நீண்ட நேரம் வாதப்பிரதி வாதங்கள் இடம் பெற்றன. அவற்றின் முடிவில் இந்த விடயத்தை நிர்வாக ரீதியாக கையாண்டு தீர்வு காணும் பொறுப்பு அவைத்தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த விடயத்தில் கிழக்கு மாகாணசபையின் பிரமாண அடிப்படையிலான ஒதுக்கீடுகளைப்பரிசீலித்த போது 2014 ஆம் ஆண்டுக்கு 9 மில்லியனும் 2015 ஆம் ஆண்டுக்கு 10 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதே நேரம் உறுப்பினர்களுக் கான ஒதுக்கீட் டு 3 மில்லியனாகவுள்ளதும் ஆளுநரது ஒதுக்கீட்டுக்கும் உறுப்பினர் களுக்கான ஒதுக்கீட்டுக்கும் நேரடித் தொடர்பு ஏதும் இருக்கவில்லை. ஆளுநருக்கான ஒதுக்கீடு மூலதனச் செலவுக்கானதாகவே காணப்படுகிறது.

வடக்கு மாகாணசபையின் ஆளுநருக்கான 2015 ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான ஒதுக்கீடு ரூபா 8 மில்லியன் ஆகும். இதில் 2 மில்லியன் ஆளுநர் செயலக மூலதனச் செலவுக்காகவும் நிர்ணயிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு ரூபா 6 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே இணைப்பு IIIஇல் உள்ள ரூபா 6 மில்லியனையும் படிவம் IIஇல் உள்ள ரூபா 2 மில்லியனுடக் சேர்த்து ரூபா8 மில்லியனாக நிர்ணயித்து ஆளுநர் செயலக மூலதனச் செலவுக்கானதென தீர்மானிக்கலாம்.

வவுனியா மற்றும் கிளிநொச்சி விடுதிகள் மூடப்பட்டுவிட் டன. கொழும்பில் மட்டும் கிழக்கு மாகாணசபையைப் போன்று ஆளுநரின் அலுவலகம் உள்ளது. என தெரிவித்தார்.

எனினும் இதற்கு மறுப்புத் தெரிவித்த உறுப்பினர்களான சர்வேஸ்வரன், சிவாஜிலிங்கம் ஆகியோர் வடக்கு மாகாணசபை ஆளுநருக்கு நிதி வழங்க முடியாது எனவும் கிழக்கு மாகாண சபையினை இதில் முன்னுதாரணமாக கொள்ளமுடியாது எனவும் வாதிட்டனர்.

உறுப்பினர்களின் எதிர்ப்பினையடுத்து ஆளுநருக்கு ஒதுக்கப்பட்ட நிதி பேரவைப் செயலகத்திகு மாற்றப்பட்டுள்ளது. (இ-4)

# வேலையற்ற பட்டதாரிகளை ஒன்று கூடுமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தைச் சேர்ந்த பட்டப் படிப்பினை முடித்த வேலையற்ற பட்டதாரிகள்நாளை புதன்கிழமை காலை 10 மணியளவில் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு அருகிலுள்ள பழைய பூங்கா முன்றிலில் அமைதியான முறையில் ஒன்று கூடவுள்ளனர்.

குறித்த ஒன்று கூடலில் வேலையற்ற பட்டதாரிகளின் கோரி க் கைகள் அடங்கிய மகஜர்கள் வடமாகாண முதலமைச்சர், வடமாகாண ஆளுநர், மாவட்ட அரசாங்க அதிபர்கள் ஆகியோரிடம் கையளிக்கப்படவுள் ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தினர் கேட்டுள்ளனர். (இ

## விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

உயர்தொழில்நுட்பவியல் நிறுவனங்களில் உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகளில் உள்ள பாடங்களை போதிப்பதற்கு தகுதியான வருகைதரு விரிவுரையா ளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விபரங்களை(www.sliate.ac.lk) எனும் இணையத்தளத்திலும் மற்றும் யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்திலும் பெற்றுக்கொள்ள முடியும் என நிறுவன உதவிப்பதிவாளர் அறிவித்துள்ளார். (இ

## 139 மாணவருக்கு கற்றல் உபகரணம்

யாழ்ப்பாணம் இளந்தளிர் கல்விச் சமூக அறவாரியம் அமைப்பினூடாக வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் 139 மாணவர்களுக்கு தலா 800 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கற்றல் உபகரணங்கள் வழங்கும் இந்நிகழ்வு நேற்றுக்காலை 10 மணிக்கு வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா கலையரங்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் பாடசாலை அதிபர் ,ஆசிரியர்கள் ,மாணவர்கள், பெற்றோர்உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-64)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்புடன் பேசி தீர்வுத்திட்டத்தை தயாரிக்க புதிய அரசாங்கம் தயாரா?

## உறுதிமொழிகள் மட்டும் போதாது-சுரேஷ் எம்.பி

நாம் பேச்சுவார்த்தைக்கு தயார் ஆனால் புதிய அரசு தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் பேசி தீர்வு திட்டத்தை உருவாக்க தயாராக உள்ளதா? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் எம்.பியுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பினார்.

**ஆட்சி மாற்றமும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும என்ற** தொனிப்பொருளிலும் வவுனியா வெளிவட்ட வீதியில் அமைந்துள்ள ஈழ மக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொது மக்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிக பெரிய மோசடிகளை செய்திருக்கின்றார். ஆகவே நாம் மைத்திரிபால சிறிசேனவில் குற்றங்கான வேண்டிய தேவை இல்லை. சுதந்திரக்கட்சியின் கூட்டம் இடம்பெற்றபோது தனது தம்பி மகிந்தவை தட்டிக்கேட்கும் அளவிற்கு எந்த அமைச்சர்களுக்கும் முதுகெலும்பு இருக்கவில்லை என சமல் ராஜபக்ஷ கூறியிருக்கின்றார்.

ஆட்சி மாற்றம் என்பது சிங்கள மக்களுக்கும் தேவையானதாக இருந்தது என்பதனையும் நாம் பார்க்கவேண்டும்.

வெறுமனே சிங்கள மக்கள் மாத்திரம் இந்த ஆட்சி மாற்றத்தை கொண்டு வரவில்லை. வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்கள் மற்றும் மலையக தமிழர்களுமாக இந்த மாற்றத்தை கொண்டு வந்துள்ளனர். எனவே சிங்கள மக்களுக்கு ஆட்சி மாற்றம் தேவையாக இருந்தாலும் சிறுபான்மையினருக்கு அதைவிட பல மடங்கு அதிகமாக ஆட்சி மாற்றம் தேவைப்பட்டது.

வந்துள்ளவர்கள் எவ்வாறு ஆட்சியை கொண்டு போகப்போகின்றார்கள் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

தற்போதைய அரசிலும் 100 நாட்கள் வேலைத்திட்டத்தில் ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்வுக்கான எந்த சொற்றொடரும் கிடையாது. குறைந்தது தமிழ் மக்களின் அன்றாட பிரச்சினைகளை தீர்க்கும் வேலைத்திட்டம் கூட அதில் கிடையாது.

ஆனால் தேர்தலுக்கு பிற்பாடு சம்பந்தன், சுமந்திரன் மற்றும் நான் உட்பட ஜனாதிபதியையும் ரணில் விக்ரமசிங்கவையும் சந்திரிகாவையும் சந்தித்தோம். அதன்போது எமது மக்களின் பிரச்சினைகளைப்பற்றி சொல்லியிருக்கின்றோம்.

இதில் இராணுவம் கையகப்படுத்திய மக்களின் காணி விடயங்களை கூறியிருக்கின்றோம். இதன் அடிப்படையில் தற்போது பாதுகாப்பு செயலாளர் எந்தெந்த காணிகளை மக்களுக்கு மீள் கொடுக்கலாம் என்ற பட்டியலை கேட்டிருக்கின்றார. அவர்கள் பட்டியலை கேட்கலாம். ஆனால் எங்களை பொறுத்தவரை எமது மக்கள் எங்கு எங்கு இருந்து விரட்டப்பட்டார்களோ அவர்கள் மீளவும் அந்த காணிகளுக்கு போக வேண்டும். இதுவே எமது நிலைப்பாடு.

ஆனால் தற்போது குறைந்த பட்சம் இராணுவத்திடம் அந்த பட்டியலையாவது கேட்டிருக்கின்றார்கள். இது ஒரு ஆரம்பம். எவ்வளவு காலத்தில் இது நடக்கும் நடக்காது என்ற விடயங்கள் எமக்கு இன்னும் தெரியாது.

இதேபோல் அரசியல் கைதிகள் விடயத்தையும் விடுதலை செய்யுமாறு கேட்டிருந்தோம். ஏறத்தாழ 400 அரசியல் கைதிகள் இருக்கின்றார்கள். தற்போது அரசு எங்களிடம் அந்த விபரங்களை கேட்கிறது. உண்மையில் அந்த விபரங்களை நீதி அமைச்சிலோ சிறைச்சாலை அமைச்சிலோ அந்த விபரங்களை எடுக்க முடியும். ஆனால் எங்களிடம் அதனை கேட்டிருக்கின்றார்கள்.

எனினும் இவை எல்லாம் நிறைவேற்றப்படுமா என்பதனை எல்லாம் நாம் பொறுத்திருந்து பார்க்கவேண்டும். ஏனெனில் இவர்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் அடுத்த தேர் தலுக்கு போகப்போகின்றார்கள். ஆகவே அந்த தேர்தலுக்கு போவதற்கு முன்பாக தமிழ் மக்களுக்கு ஏதாவது செய்து விட்டால் எதிர்தரப்பு நிச்சயமாக தனக்கு சாதாகமாக பயன்படுத்தும் என்ற நிலை இன்னும் இருக்கின்றது என அவர்கள் கருதுகின்றனர்.


இவ்வறான நிலையில் எமது கோரிக்கைகளுக்கு எவ்வாறான பதில் இருக்கப்போகின்றது என்று பார்த்தால் பதில் இல்லாமலேயேதான் இருக்கப்போகின்றது.

ஆகவே புதிய பாராளுமன்றம் உருவாகி அதன்போது ஆட்சி அமைக்கும் அரசின் நிலைப்பாடு தமிழ் மக்கள் தொடர்பில் என்ன நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றார்கள் என்பதனை வைத்துத்தான் நாம் எதனையும் சொல்லமுடியும்.

நாங்கள் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருக்கின்றோம். நாம் ஏற்கனவே தீர்வுத் திட்டத்தை கொடுத்திருக்கின்றோம்.


ஆனால் புதிய அரசாங்கம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் பேசி ஒரு தீர்வுத் திட்டத்தை உருவாக்க தயாராக இருக்கின்றார்களா?.

ரணில் விக்ரமசிங்க தமிழ் மக்களுக்கு அதிகப்படியான அதிகாரங்களுடன் சுயாட்சி கொடுப்பதாக கூறுகின்றார். ஆனால் அவர்கள் கூறுவது நடைமுறைக்கு வரவேண்டும். பேச்சுவார்த்தைகள் சரியான முறையில் நடைபெற வேண்டும். அதில் சரியான முடிவுகள் எட்டப்படவேண்டும். அவை இல்லாத பட்சத்தில் அது வெறும் கண் துடைப்பாகவே இருக்கும் என தெரிவித்தார். (அ-2-250)




# இரணைமடு விவகார மாற்றுத்திட்டத்தை ஏற்றுக்கொண்டது ஆசிய அபி.வங்கி

## வடக்கு விவசாய அமைச்சர் பெருமிதம்



(கிளிநொச்சி)

இரணைமடுக்குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டால் இரணைமடுக் குளத்தின் கீழ் செய்யப்படும் நெற்செய்கை மோசமாகப் பாதிப்பப்படும். இதனால் யாழ்ப்பாணத்துக்கான உணவுப் பாதுகாப்பும் கேள்விக்குறியாகும். இதனால் உணவுக்காக நாம் யாரிடமும் கையேந்தக்கூடிய சூழ்நிலை உருவாகக்கூடாது என்பதற்காகவே மத்திய அரசினால் முன்னெடுக்கப்பட்ட இரணைமடு யாழ்.குடிநீர்த்திட்டத்துக்குப் பதிலாக வடக்கு மாகாண சபையால் மாற்றுத்திட்டம் ஒன்றை முன்வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரணைமடுக்குளத் திட்டத்தின் நோக்கம், கிளிநொச்சி மாவட்டத்தின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வது மாத்திரம் அல்ல. யாழ்ப்பாணத்துக்கான உணவுப் பாதுகாப்பும் இரணைமடுக்குளத்திலேயே தங்கியுள்ளது. இதனால் தான், இரணைமடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிநீர் எடுத்து வரும் மத்திய அரசின் திட்டத்துக்குப் பதிலாக நாம் மாற்றுத் திட்டத்தை முன்வைக்க நேர்ந்தது .

இரணைமடுக்குள நீர்ப்பாசனத் திட்டம் 1920 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது இதன் பிரதான நோக்கமாக யாழ்ப்பாணத்துக்கான உணவுப் பாதுகாப்பே முன்னுரிமை பெற்றிருந்தது. கிளிநொச்சியில் நெல்லை விளைவித்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கும் நோக்கோடு இரணைமடு நீர்ப்பாசனத் திட்டம் இலங்கையின் முதலாவது திட்டமிடப்பட்ட நீர்ப்பாசனத் திட்டமாக உருவாக்கப்பட்டது. யாழ்ப்பாணத்துக்கான அரிசித் தேவையின் அதிகரிப்புக்கு ஏற்ப காலத்துக்குக் காலம் இரணைமடுக்குளத்தின் கொள்ளளவு அதிகரிக்கச் செய்யப்பட்டது. அத்தோடு யாழ்ப்பாணக் குடித்தொகையின் சனத்தொகையைக் குறைக்கும் நோக்கில் கிளிநொச்சியை மையமாகக் கொண்டு படித்தவாலிபர் திட்டம், குடியேற்றத்திட்டம் என்று குடிப்பரம்பல் செய்யப்பட்டு உற்பத்தி அதிகரிக்கப்பட்டது.

இப்போது இரணைமடுக்குளத்தின் கீழ் 22 ஆயிரம் ஏக்கருக்குப் பாசனவசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் 12ஆயிரம் ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கப்பட்வேண்டிய தேவையுள்ளது.

இந்நிலையில், இரணைமடுக் குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டால், இரணைமடுக்குளத்தின் கீழ் செய்யப்படும் நெற்செய்கை மோசமாகப் பாதிக்கப்படும். இதனால், யாழ்ப்பாணத்துக்கான உணவுப்பாதுகாப்பும் கேள்விக்குறியாகும். இதனால் உணவுக்காக நாம் யாரிடமும் கையேந்தக்கூடிய சூழ்நிலை உருவாகக் கூடாது என்பதற்காகவே மத்திய அரசால் முன்னெடுக்கப்பட்ட இரணைமடு யாழ். குடிநீர்த் திட்டத்துக்குப் பதிலாக வடக்கு மாகாண சபையால் மாற்றுத்திட்டம் ஒன்றை முன்வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இப்போது நாம் முன்வைத்த ஆலோசனைகளை ஆசிய அபிவிருத்தி வங்கியும், மத்திய அரசின் நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைச்சும் ஏற்றுக் கொண்டுளளது. இரணைமடுக்குள விவசாயி கள் எந்த அழுத்தங்களுக்கும் அடிபணியாமல் ஒற்றுமையாக நின்று உறுதியாகக் குரல் கொடு த்ததாலேயே இது சாத்தியமானது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# 70 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கு உதவிப் பணம்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் 70 வயதிற்கு மேற்பட்ட 457 முதியவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்படும் ஆயிரம் ரூபா உதவித் தொகையுடன் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட அதிகரித்த ஆயிரம் ரூபா உதவித் தொகையுமாக நடப்பாண்டு ஜனவரி மாதத்திலிருந்து 2 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

இதன்மூலம் 9 இலட்சத்து 14 ஆயிரம் ரூபா இம்முறை ஜனவரி மாதம் வழங்கப்பட்டுள்ளதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரதிச் செயலாளர் இ.குருபரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக் கையில்,

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிலுள்ள 27 கிராம சேவையாளர் பகுதிகளில் வசிக்கும் 70 வயதிற்கு மேற்பட்ட 457 முதியவர்களுக்கு இவ்வுதவித்தொகை தொடர்ச்சியாக மாதம்தோறும் வழங்கப்படவுள்ளது.

இவ்வுதவித்தொகையானது 70 வயதைக் கடந்த குடும்பத்தலைவர் அல்லது தலைவிக்கு வழங்கப்படுகின்றது.

இருவரும் வாழ்கின்ற பட்சத்தில் ஒருவர்மட்டும் இதனைப்பெறமுடியும்.

மேற்படி உதவித் தொகையானது சமூக சேவை அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய முதியோர் உரிமை மேம்பாட்டுச் செயலகத்தினால் வழங்கப்படுகின்றது.

இவ்வுதவித் தொகையினை பெற்றுக்கொள்வதற்கு இதுவரை விண்ணப்பிக்காத முதியவர்கள் இருப்பின் உடனடியாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சமூகசேவை அமைச்சின் முதியோர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தரிடம் வயதினை உறுதி ப்படுத்தும் ஆவணத்துடன்சென்று விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூர் த்தி செய்து ஒப்படைப்பதன் மூலம் உதவித் தொகையை பெற்றுக் கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-15)

# பறிபோனது கைபேசி

கையடக்கத் தொலைபேசியொன்று மோட்டார் சைக்கிளில் பயணித்த இனந்தெரியாத நபரினால் பறித்துச் சென்ற சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் கிளிநொச்சி திருநகர் வீதியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,திருநகர் வீதியில் பிரஸ் தாப நபர் கையடக்கத் தொலை பேசி யில் உரையாடிக் கொண்டிருந்த வேளை அவ்வழியாக மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவர் முகவரி தொடர்பில் அறிந்து கொள்வதற்காக அவரருகே நெருங்கி விசாரித்தார்.

கையடக்கத் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த நபர் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர்கள் விசாரித்த விடயம் குறித்து எதுவும் தெரியாது எனக் கூற , அவரது கையடக்கத் தொலைபேசியை பயணித்த நபர்களில் ஒருவர் திடீரென பறித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் பறந்து சென்றார்.(அ-2-271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

1045

# கிணற்றில் ஒரு புலி!

அடர்ந்த காட்டுப் பகுதியில் அவர்கள் மூன்று பேரும் நடந்தனர். முதலில் கையில் டார்ச்சுடன் போகிறானே அவன்தான மாணிக்கம். அவனுக்குப் பின்னால் போவது சந்திரா, அவளது கையைப் பிடித்தபடியே பயத்தோடு நடக்கும் ரவி, சந்திராவின் தம்பி.

காலடியில் காய்ந்த சருகுகள் சரசரவென்று ஒலி எழுப்பின. எங்கோ தொலைவில் ஒரு



நரியின் ஊளைச் சத்தம் கேட்டது.

"நெச மாவே நீ கேட்டியா மாணிக்கம்?" என்றாள் சந்திரா கண்களை அகல விரித்து.

"ஆமாங்கா, கரும்புத் தோட்டம் பக்கமா சாய்ந்தரம் அஞ்சு மணிக்கு வந்தப்பதான் புலியோட உறுமலைக் கேட்டேன்" என்றான் மாணிக்கம்.

அப்போது இருட்டில் புலியின் உறுமல் கேட்டது. இது வரை இருந்த அசட்டுத் தைரியம் ஓடிப் போய் விட்டது. கையில் இருந்த டார்ச் விழுந்ததுகூடத் தெரியாமல் மாணிக்கம் சிட்டாகப் பறந்தான். சந்திராவும் தம்பியின் கையைப் பிடித்துக்கொண்டு வீட்டை நோக்கி ஓடினாள்.

புலியின் உறுமலைப் பற்றிய தகவலை சந்திரா தன் தந்தையிடம் தெரிவித்தாள். "ஏன் தனியாகப் போனீர்கள்?" என்று அவர் கடிந்து கொண்டார். "இரவில் காட்டுக்குள் போவது நல்லதல்ல, காலையில் ஆட்களைச் சேர்த்துக்கொண்டு செல் வோம்" என்றார்.

மறுநாள். வனத் துறைக்குத் தகவல் கொடுத்துவிட்டு, 50இற்கும் மேற்பட்டவர்கள் ஆளுக்கு ஒரு கம்பு, கட்டையுடன் கிளம்பினார்கள். அந்தக் கிராமத்துக்குப் பக்கத்தில் மிகப் பெரிய சரணாலயம் இருக்கிறது. அங்கேயிருந்து சில சமயம் புலி, சிறுத்தை போன்ற விலங்குகள் ஊருக்குள் வருவதுணடு. அப்படித்தான் இந்தப் புலியும் வந்திருக்க வேண்டும்.

"யாரும் புலியை அடிக்காதீங்க, அதைக் கொல்லக்கூடாது. வலை போட்டுப் பிடிச்சு, சரணாலயத்துல சேர்த்திடலாம்" என்று அவர்களிடம் கண்டிப்பாகச் சொன்னார் சந்திராவின் அப்பா. பயத்தோடும் பெரிதாக ஏதோ நடக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்போடும் ஊரை ஒட்டியிருந்த முள்வேலங்காட்டுக் குள் கூட்டம் சென்றது.

"அதோ தெரியுதே கிணறு... அங்கேதான் உறுமலைக் கேட்டேன்" என்றான் மாணிக்கம்.

"நேத்து நாங்க இந்த இடம் வரைக்கும் வந்தோம்" என்றாள் சந்திரா.

"இருட்டுல புலி இருக்கிற இடத்துக்குத் துணை இல்லாம வரலாமா? இனிமே இப்படி அசட்டுத்தனமாச் செய்யாதீங்க" என்று எல்லோரும் அவர்களைக் கடிந்து கொண்டனர்.

பாழடைந்த கிணற்றை அவர்கள் நெருங்கியபோது, உள்ளேயிருந்து உறுமல் கேட்டது. கைப்பிடி இல்லாத அந்தக கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தனர். குட்டையாகத் தேங்கியிரு நத தண்ணீரில், ஒரு சிறிய பாறையின் மீது புலி ஒன்று படுத்து இருந்தது. மேலே தலை கள் தெரிவதைப் பார்த்ததும் உறுமியது. சிவந்த வாயும், கூர்மையான பற்களும் அவர்களை குலைநடுங்க வைத்தன.

அதற்குள் வனத்துறையினரும் தீய ணைப்புப் படையினரும் வந்து சேர்ந்த னர். கால்நடை மருத்துவர் குழு ஒன்றும் சேர்ந்துகொண்டது. சரணாலயத்துக்கும் தகவல் தரப்பட்டது. கூட்டத்தில் இருந்த ஒருவன் திடீரென்று, "நேத்து ராத்திரி இந்தப் புலி பக்கத்துக் கிராமத்து முனுசாமியோட பசுமாட்டை அடிச்சுக் கொன்னு டுச்சாம்" என்றான்.

இதைக் கேட்ட மாணிக்கமும், சந்திராவும், ரவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். உடனே கூட்டத்தைவிட்டு நழுவி, சைக்கிளை எடுத்துக்கொண்டு பக்கத்துக் கிராமத்தை நோக்கி விரைந்தனர்.

முனுசாமியின் வீட்டை அடைந்து, புலியைப் பற்றி விசாரித்தனர். "நேத்து ராத்திரி 10 மணிக்கு அந்தப் புலி இங்கே வந்து கொட்டாயில கட்டியிருந்த பசுவின் கழுத்தைக் கடிச்சு கொன்னுட்டுது" என்று முனுசாமி அழுதார்.

மாணிக்கம் அவரை நம்பாமல் முறைத்தான். சந்திராவின் உள்ளுணர்வு, "இவர் எதையோ மறைக்கிறார்" என்றது. ரவி மெதுவாக தோட்டத்துப் பக்கமாக வந்தான். குப்பைமேட்டில் ஒரு மருந்துப் பாட்டில் கண்களில் பட்டது. அதை எடுத்து காற்சட்டைப் பையில் பத்திரப் படுத்திக் கொண்டான். சிறிது நேரம் பேசி விட்டு, அவர்கள் கிளம்பினார்கள்.

"அக்கா, இவர் எதையோ மறைக்கிறார். தோட்டத்துல இந்த மருந்துப் பாட்டில் கிடைச்சுது" என்று சொல்லி பாட்டிலை அவளிடம் கொடுத்தான்.

சில நிமிடங்கள் அதைப் பார்த்த சந்திரா. "இது மாடுங்க அதிகமா பால் கறக்கப் போடுற ஊசி மருந்து" என்றாள்.

சற்று நேரத்தில் அவர்கள் புலி இருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கேயிருந்த கால்நடை மருத்துவரை அணுகி, சந்திரா என்னமோ பேசினாள்.

கிணற்றுக்குள் இறங்கி புலியை வெளியே தூக்கும் முயற்சியில் ஆட்கள் ஈடுபட்டார்கள். நான்கு பேர் கிணற்றுக்குள் இறங்கி, வலையை வீசியபோதும் புலி பாயவில்லை. கயிற்றால் கட்டி மேலே இழுத்தார்கள். மருத்துவர் புலிக்கு மருந்து ஒன்றைச் செலுத்தினார்.

"ஆச்சரியமா இருக்கே... புலிக்கு மயக்க ஊசி போடாமலேயே பிடிச்சுட்டீங்க எப்படி?" என்றார் சந்திரா வின் அப்பா.

"முனுசாமியைக் கூட்டிட்டு வாங்க... எல்லா விவரமும் தெரியும்" என்றார் கால்நடை மருத்துவர்.

முனுசாமியை அழைத்து வந்து விசாரித்தனர். முதலில் மறு த்தார் முனுசாமி. "புலியை விஷம் வெச்சுக் கொல்ல முயற்சி செய்த குற்றத்துக்காக உன்னைக் கைது செய்யலாம் தெரியுமா?" என்று சொன்னதும் மிரண்டு போனார்.

"பசுவுக்கு அடிக்கடி அந்த ஊசி மருந்தை நான் போடுவேன். அதனால் பால் நிறையக் கறக்கும். ரெண்டு நாள் முன்னால அப்படி ஊசி போட்டப்ப பசு செத்துப்போச்சு. அதை யாருக்கும் தெரியாமல் ராத்திரியில் புதைக்கிறதுக்காக மாட்டுக்கொட்டாயில் வெச்சிருந்தேன். ராத்திரி அங்கே புலி வந்து மாட்டைக் கடிச்சது. சத்தம் கேட்டு வந்து பார்த்தப்ப ஓடிப்போயிருச்சு. ஊசி மருந்து போட்டுப் பசுவை சாகடிச்சிட்டதா யாரும் என்னைத் திட்டக்கூடாதுன்னு புலி மேல பழிபோட்டேன். ஆனால, இந்தப் பசங்க உண்மையைக் கண்டுபிடிச் சுட்டாங்க" என்றார் முனுசாமி.

"ஊசிமருந்து பசுவின் உடம்புல ரொம்ப நாளாக் கலந்து விடயமாகி இருக்கு. அதைச் சாப்பிட்ட புலிக்கு விஷம் ஏறி இருக்கு. அதனால் தான் சோர்ந்து இருந்துச்சு.

நல்ல வேளை, சரியான நேரத்துல சந்திராவும் ரவியும் மருந்து விடயத்தை என்கிட்டச் சொன்னாங்க. நானும் மாத்து ஊசிபோட்டு புலியைக் காப்பாத்திட்டேன்" என்றார் மருத்துவர்.

"உன்னை மாதிரி சில ஆளுங்க அதிகம் பால் கறக்கும்னு மாட்டுக்கு வைத்தியம் பார்க்க ஆரம்பிச்சா இப்படித்தான் உள்ளதும் போயிரும். உன் மேலே வழக்குப் பதிவு பண்ணனும்" என்றார் வனத்துறை அதிகாரி.

சந்தரா, மாணிக்கம் மற்றும் ரவியை எல்லோரும் பாராட்டினர். ஆனா மயக்க நிலையில் இருந்த புலியை சரணாலயத்துக்கு அனுப்ப டிரக்கில் ஏற்றியபோது, அது இவர்களைப் பார்த்த பார்வை நன்றி சொல்வதுபோல் இருந்தது.

01.2015

20

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1265 - இங்கிலாந்து நாடாளுமன்றம் தனது முதலாவது கூட்டத்தை வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையில் நடத்தியது.
- 1523 - இரண்டாம் கிறிஸ்டியான் டென்மார்க், நோர்வேயின் மன்னர் பதவியில் இருந்து அகற்றப்பட்டான்.
- 1783 - பெரிய பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின ஆகியன புரட்சிப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு அமைதி உடன்பாட்டில் கைச்சாத தி ட்டன.
- 1795 - பிரெஞ்சுப் படைகள் ஆம்ஸ்டர்டாமைக் கைப்பற்றின.
- 1839 - யூங்கே என்ற இடத்தில் பெரு மற்றும் பொலீவியா கூட்டுப் படைகளுடன் இடம்பெற்ற சமரில் சிலி வெற்றி பெற்றது.
- 1841 - ஹாங்காங் தீவு பிரித்தானியாவினால் கைப்பற்றப் பட்டது.
- 1892 - முதலாவது அதிகாரபூர்வமான கூடைப்பந்தாட்ட விளையாட்டு மசாசுசெட்சில் இடம்பெற்றது.
- 1913 - யாழ்ப்பாணம், உடுவிலில் இராமநாதன் பெண்கள் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- 1936 - எட்டாம் எட்வேர்ட் ஐக்கிய இராச்சிய மன்னனாக முடி சூடினார்.
- 1945 - ஹங்கேரி இரண்டாம் உலகப் போரில் தனது பங்கை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.
- 1969 - முதலாவது துடிமீன் கிராப் விண்மீன் தொகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.
- 2001 - பிலிப்பீன்சில் இடம்பெற்ற புரட்சியில் தலைவர் ஜோசப் எஸ்ட்ராடா பதவியகற்றப்பட்டு குளோரியா மக்க பாகல்-அறாயோ தலைவரானார்.

### பிறப்புகள்

- 1873 - ஜொஹன்னஸ் வில்ஹெம் ஜென்சென், இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (இ. 1950)
- 1920 - பெடெரிக்கோ ஃபெலினி, இத்தாலியத் திரைப்பட இயக்குனர் (இ. 1993)
- 1930 - எட்வின் ஆல்ட்ரின், அமெரிக்க விண்வெளி வீரர்
- 1931 - டேவிட் லீ, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர்
- 1956 - பில் மேகர், அமெரிக்க மேடைச் சிரிப்புரையாளர்

### இறப்புகள்

- 1838 - ஒசியோலா, அமெரிக்க தொல்குடி போர்த் தலைவன் (பி. 1804)
- 1936 - ஐந்தாம் ஜார்ஜ், இங்கிலாந்தின் மன்னன் (பி. 1865)
- 1987 - [illegible] (பி. 1908)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு...

..படத்தின் வெற்றியைக் கண்ட வேணுச் செட்டியார் நான்காவது வாரமே என் வீட்டிற்கு வந்தார். மகேந்திரா உங்கிட்டே கோபப் பட்டதற்கு என்னை மன்னிசிருப்பா. இந்தா பிளாங்க் செக். எவ்வளவு தொகை வேணுமானாலும் எழுதிக்கொள் என்று செக்கை நீட்டினார்.

நான் அன்போடும், நன்றியோடும் மறுத்து, இப்படி ஒரு வித்தியாசமான படம் இயக்கும் வாய்ப்பைத் தந்ததே பல்லாயிரம் கோடிகளுக்குச் சமம். இந்த செக்கை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினேன்.

**"முள்ளும் மலரும்"** படத்தை, பத்திரிகைகள் அனைத்தும் முழு மனதோடு பாராட்டின. சினிமா என்பது செவிக்கு விருந்தளிப்பதல்ல. கண்ணுக்கு விருந்தளிப்பது என்பதை நிரூபித்த தமிழ்ப்படம் என்று விமர்சித்தன. இவ்வாறு மகேந்திரன் கூறியுள்ளார்.


டைரக்டர் கே.பாலசந்தரால் திரை உலகுக்கு அறிமுகப்படுத்தப் பட்ட ரஜினிகாந்த், சூப்பர் ஸ்டாராக உயர்ந்த பிறகு பாலசந்தரின் டைரக்ஷனில் நடித்த படம் **"தப்புத்தாளங்கள்."**

**"முள்ளும் மலரும்"** படத்திற்கு பின் ரஜினி நடித்த படம் ஏ.பீம்சிங் டைரக்ஷனில் உருவான **இறைவன் கொடுத்த வரம்.**

இந்தப் படத்தின் கதை, திரைக்கதை, வசனத்தை ஆர்.பாலகிருஷ்ணன் எழுதியிருந்தார். ரஜினிகாந்துடன் விஜயகுமார், ஸ்ரீகாந்த், சோ, சுமித்ரா, படாபட் ஜெயலட்சுமி, ஜெயதேவி, எம்.பானுமதி ஆகியோர் நடித்திருந்தனர். 22-09-1978 இல் வெளியான இப்படம், பெரிதாக வெற்றிபெறவில்லை.

### தப்புத்தாளங்கள்

டைரக்டர் பாலசந்தர் 1978 இல் **"தப்புத்தாளங்கள்"** என்ற கதையை உருவாக்கி, தமிழிலும், கன்னடத்திலும் ஒரே சமயத்தில் தயாரிக்க



"எந்த வேடமானாலும், பிச்சு உதறுவேன்" ("படம் தப்புத்தாளங்கள்")

## மீண்டும் பாலசந்தர் டைரக்ஷனில் ரஜினி

முடிபு செய்தார்.

அதில் பிரதான கதாபாத்திரமான ரவுடி கேரக்டரில், ரஜினியை நடிக்க வைக்க எண்ணினார். அதே சமயத்தில், "ரஜினி இப்போது மிக உயர்ந்த உயரத்துக்குப்போய்விட்டார். நிறைய படங்களில் நடித்துக்கொண்டு இருக்கிறார். கால்ஷீட் கிடைக்குமோ, கிடைக்காதோ? என்ற சந்தேகமும் இருந்தது.

ஆயினும், அவர் ரஜினிக்கு போன் செய்ததும், தப்புத்தாளங்களில் நடிக்க மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டார்.

படப்பிடிப்பு ஆரம்பமாயிற்று. கதாநாயகியாக (தாசி வேடத்தல்) சரிதா நடித்தார். தமிழில் இதுதான் அவருக்கு முதல் படம்.

### பாலசந்தர் தயக்கம்

ரஜினியை முதன் முதலாக அறிமுகப்படுத்தியதுடன், மூன்று படங்களில் நடிக்க வைத்தவர், பாலசந்தர். அந்தக் காலக்கட்டத்தில் ரஜினியை அவர் ஒருமையில் அழைப்பது வழக்கம். "டேய், சிவாஜி! இங்கே வா! என்றெல்லாம் அழைத்திருக்கிறார்.

"இப்போது ரஜினிகாந்த் சூப்பர் ஸ்டாராகிவிட்டார். அவரை முன்போல் ஒருமையில் அழைக்கலாமா! அவர் அதை தவறாக எண்ணுவாரா? நடிப்பில் திருப்தி இல்லாவிட்டால், மீண்டும் "டேக்" எடுக்கலாமா? கண்டித்து திருத்தலாமா? என்றெல்லாம் இப்போது பாலந்தர் எண்ணினார்.

தன் மனதில் உள்ள சந்தேகத்தை ரஜினியிடம் சொன்னார். அதைக்கேட்டதும், ரஜினிகாந்த் விழுந்து விழுந்து சிரித்தார்.

"என்ன சார் சொல்றீங்க! இந்த வாழ்க்கை நீங்க போட்ட பிச்சை! என்னை திருத்தவோ, கண்டிக்கவோ மட்டுமல்ல, அடிக்கக்கூட உரிமை உள்ள ஒரே டைரக்டர் நீங்கள்தான்! என்னைப்போய் இப்படி வித்தியாசமாக நினைக்கலாமா சார்! என்றார், ரஜினி. அப்போது அவர் கண்களில் நீர் துளிர்த்தது. பாலசந்தரும் கண்கலங்கி விட்டார்.

"ரஜினி, மை பாய்! நீ என்றைக்கும் என்னுடைய ரஜினியாகவே இருப்பது கண்டு நிஜமாகவே ரொம்பப் பெருமைப்படுகிறேன் என்றார், நெகிழ்ச்சியுடன். இந்தப் படத்தில் முரட்டுத்தனமான கேரக்டரில் ரஜினி திறமையாக நடித்தார்.

சரிதா நடிப்பும் சிற ப்பாக இருந்தது. கன்னட "தப்பித தாளா" 6-10-1978-லும், தமிழ் "தப்புத் தாளங்கள்" 30-10-1978-லும் வெளியாயின.

படம் "பிரமாதம்" என்று சொல்லும்படி அமையாவிட்டாலும், ரசிக்கும்படி இருந்தது. *(தொடரும்)*

# கருவாச்சி காவியம்



## வைரமுத்து- 53

....ஒண்ணுஞ்சாப்பிடப் புடிக்கல; ஒறப்பு; புளிப்பும் தேடிச் சப்புக் கொட்டி நிக்கிது நாக்கு. புளியங் கொழுந்த உருவிப் பச்ச மொளகா வச்சு அரச்சு யார் கொடுத்தாலும் கடவுளேன்னு கால்ல விழுந்திரலாம் போல இருக்கு. சோறு செல்லல; ஆனா ஊற வச்ச அரிசின்னா உசுராயிருக்கு.

திருநீறு கெடைச்சாத் தின்னே தீக்குறா நாயன்மார் அறுபத்திமூணு பேரும் ஆயுசு பூராக் கொழச்சுப் பூசின திருநீற அஞ்சே நாள்ல இவ திண்டுபுட்டா.

சாம்பல் சாப்பாடுன்னு ஆகிப்போச்சு. மாங்கா தொட்டுக்கன்னு ஆகிப் போச்சு. இந்த நாலஞ்சு மாசத்துல அவ அள்ளித் தின்ன சாம்பல் இருக்கே அத கரட்டுக்காட்டுக்கு ஓரமா அடிச்சிருந்தா பருத்தி வெடிச்சு பவுனா விழுந்திருக்கும்.

பான தலையில; கொடம் இடுப்புல. கெணத்துல தண்ணியெடுத்துப் பொடி நடையா வாரா கருவாச்சி.

ஏந்தாயி! சடையத் தேவர் வீடு எங்கிட்டு இருக்கு?

தண்ணிப்பானையத் தலையில வச்ச மேனிக்கு எல்லாரையும் நின்னு நிதானிச்சுப் பாக்குறா கருவாச்சி. ஆணும் பெண்ணுமாப் பத்துப் பதினஞ்சுபேர் கொண்ட கூட்டம் எதுக்க நிக்கிது.

இப்படியே இடதுகைப் பக்கம் போனிங்கன்னா சாவடி வரும்; சாவடியைத் தாண்டி வேப்பமரம். வேப்ப மரத்துலயிருந்து மூணாம் வீடு.

வந்தவுக பூரிச்சுப் போனாக. அவ



வழி சொன்னதுக்கு இல்ல. நிறை குடம் எதுக்க வந்தா நல்ல சகுனமாம்; சம்பந்தம் கூடி வருமாம் அதுக்கு.

அன்னைக்கே பாதிக் கல்யாண வீடாகிப் போச்சு சடையத்தேவர் வீடு. தெருவெல்லாம் ஊர்வலம் போயித் திரும்ப திரும்ப வருது சமயல் வாசனை.

கல்யாணம் பேசவரவகளுக்குக் கறிச்சாப்பாடு போடறதில்ல.

போடறதாயயிருந்தா கெடையில காணாமப் போயிருக்கும் ஏழெட்டுக் கெடா.

பொண்டாட்டி தீட்டா இருக்கிற வீட்ல மாமியாகாரி வந்து பரிமாறது மாதிரி கறி இல்லையெங்கிற கொறைய லேசா ஈடுகட்டும் நெய்யி.

அஞ்சாறு ஊர்கள்ல சொல்லி வச்சு வாங்கி உருக்கிவச்ச நெய்யிருக்கும் ஒரு மரக்கா.

நெய்யில நீச்சலடிக்கலாம்யா சடையத்தேவன் வீட்லன்னு பெருமைபேசி அலையுது பெருசுக.

உக்காந்து வாழை எலையிலயும் சாப்பிடலாம் வாழை எலையிலயே உக்காந்து சாப்பிடலாம்; பெருங்கொண்ட எலைக.

வாசலப் பெருக்கி வைக்கோல் போட்டு வைக்கோல் மேல சமக்காளம் போட்டு சம்பந்தம் அப்பறம் பேசுவோம். மொதல்ல சாப்பிடுங்கப் பான்னு எல்லாரையும் உக்கார வைக்க உள்ள வாராக உருமாப்பெருமாத் தேவரும் காவக்காரச் சக்கணனும் சுப்பஞ் செட்டியாரும்.

அவுக மூணுபேரையும் பாத்து மூஞ்சி செத்துப் போன சடையத் தேவரு வாங்கப்பா! நீங்களும் ஒக்காருங்க பந்தியிலன்னு சொன்னாரு ஒப்புக்கு.

சடையத் தேவன் வீட்ல சாப்பாடு என்ன மெதமாவா இருக்கும்? சாப்பிடுவோம்; பேசிட்டுச் சாப்பிடுவோம்.

என்னப்பா பேச்சு ஒரு இழுவையா இருக்கு. சாப்பிட வந்தீகளா சண்ட புடிக்க வந்தீகளா?

நல்ல காரியம் நடக்கட்டுமப்பா. அப்பறம் வாரோம். நீங்க வந்ததச் சொல்லலேன்னா நாங்க வெந்ததத் திங்க முடியாதப்பா. வந்த சோலியச் சொல்லுங்க. *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவிக்காலம் முடிந்த பின்னரே றோ தலைவர் வெளியேறினார்

## மகிந்தவின் குற்றச்சாட்டைச்சாட்டை முற்றாக மறுத்தது இந்திய மத்திய அரசு

(கொழும்பு)

**இலங்கைக்கான றோ உளவு அமைப்பின் தலைவரால் தான், இம் மாதம் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோல்வி அடைந்தார் என்ற குற்றச்சாட்டை இந்திய மத்திய அரசு முற்றாக மறுத்துள்ளது.**

கொழும்பிலிருந்த றோவின் தலைவர், அவரது மூன்று வருட பதவக்காலம் நிறைவடைந்த நிலையிலேயே நாடு திரும்பியுள்ளார். இதேவேளை, இலங்கை அரசாங்கம் அவரை நாட்டைவிட்டு வெளியேற்றியதாக கூறப்பட்டமை தவறாகும் எனவும் இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது. மைத்திரிபால சிறிசேன உட்பட பல நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்திலிருந்து வெளியேற தூண்டியமை மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடாது இருக்க தீர்மானிக்க வைத்து, வெல்லக்கூடியவரும் இந்தியாவுடன் ஒத்துபோகக்கூடியவருமான ஒருவரை களத்திலிறக்க உதவினார் என்று இலங்கைக்கான றோவின் தலைவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்ததாக ரொயிட்டர் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஜே.வி.பி கோரிக்கை

ஸ்ரீலங்கா கிரிக்கட் நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பான காகிதாதிகளை இடம் மாற்ற வேண்டாம் என்று மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி .கட்சி)கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

ஸ்ரீலங்கா கிரிக்கட் நிறுவ னத்தின் தலைவருக்கு இது தொடர்பான கடிதம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான காகிதாதிகளை இடம் மாற்ற யாரேனும் முயற்சித்தால், அவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந் தவினால் பதுக்கி வைக்கப்பட்ட பொருட்கள் தற்போது மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பித்தக்கது. (இ-5)

# வடக்கில் இருந்து படையினரை விலக்கி கொள்ள போவதில்லை

தேசிய பாதுகாப்பு கருதி வடக்கில் இருந்து படையினரை விலக்கிக் கொள்ளப் போவதில்லை என்று இலங்கையின் புதிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இது தொடர்பில் தெளிவான அறிவித்தலை விடுத்துள்ளதாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவன விஜயவர்த்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்ற பின்னர், வடக்கில் இருந்து படையினரை விலக்கிக் கொள்ளப் போவதாக செய்திகள் வெளியாகின.

எனினும் அதில் உண்மையில்லை என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கண்டியில நேற்று முன்தினம் மல்வத்த மகாநாயக்கரை சந்தித்தபோது அமைச்சர் இத னைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# க.பொ.த.உயர்தரத்திற்கு தோற்றவுள்ளவர்களின் விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கை ஆரம்பம்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு இவ்வருடம் தோற்றவுள்ள மாணவர்களின் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி வரை தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஆர். எம்.எஸ். சரத்குமார தெரிவித்தார்.

பாடசாலை பரீட்சார்த்திகள் தத்தமது பாடசாலை அதிபர்கள் ஊடாக விண்ணப்பங்களை விரைவாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இதன் பிரகாரம் மாணவர்களின தேசிய அடையாள அட்டைகளை உரிய நேரத்தில் விநியோகிக்க முடியும் என்றும் ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

விண்ணப்பங்களை விரைவில் அனுப்பிவைப்பதன் மூலம், தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதில் இறுதித் தருணத்தில் ஏற்படுகின்ற சிரமங்களையும், தாமதங்களையும் தவிர்த்துகொள்ள முடியும் என்றும் அவர மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# நல்ல தூக்கம் வர செய்ய வேண்டியவை

இரவு வேலை செய்பவர்கள், உடலில் வெளிச்சம் படாதவாறு வீட்டுக்குச் செல்வது நல்லது. பேருந்து மூலம் வீட்டுக்குச் செல்பவர்கள் கைக்குட்டையை வைத்துக் கண்களை மறைத்தவாறு செல்லலாம். உறக்கக் கலக்கத்தில் செல்வதால் நேரிடும் அசம்பாவிதங்களைத் தவிர்க்க தனியாகச் செல்லாமல், நண்பர்களோடு சேர்ந்து செல்லலாம்.

காலை வீட்டுக்கு வந்தவுடன் பால், பாண், பழங்கள் முதலான இரவு நேர உணவை உண்டு

உணவு டிப்ஸ்
நைட் ஷிப்ட் வேலை செய்பவர்களுக்கு...

| | |
|---|---|
| மாலை | காலை உணவுகளான இட்லி,தோசை,பொங்கல்,சட்னி சாம்பார் போன்றவற்றை வயிறு நிரம்பச் சாப்பிட வேண்டும். |
| இரவு 11.30 மணி | கிரீன் டீ, பழங்கள் |
| இரவு 2 மணி | சரிவிகித சத்துக்கள் நிறைந்த மீல்ஸ் 70% வயிறு நிரம்பச் சாப்பிட வேண்டும். |
| காலை 6 மணி | இடியாப்பம்,இட்லி,சப்பாத்தி முதலான இரவு நேர உணவு வகைகள் - அரை வயிறு உணவு. |

விட்டு படுக்கையறைக்குச்செல்லவும்.

படுக்கையறையில் சூரிய வெளிச்சம் வராதவாறு ஜன்னல்களை அடைத்துவைக்க வேண்டும். உடல் மேல் சூரிய வெளிச்சம் படாமல் தூங்கினால்தான் மெலட்டோனின் நன்றாகச் சுரக்கும். மேலும் செல்போனைக் கட்டாயம் தூரம் வைக்க வேண்டும்.

மாலை நான்கு மணிக்கு எழுந்து, மாலை வெயிலில் நடைபயிற்சி அல்லது உடற்பயிற்சி செய்யவும், அப்போதுதான் வற்றமின்சத்துஉடலுக்குக்கிடைக்கும்.

**உடலில் வலி இருப்பவர்களுக்கு...**

உடலில் ஏற்படும் சிறுகாயங்களால் வரும் தூக்கமின்மைப் பிரச்சினை, சில நாட்களில் சரியாகிவிடும். மருத்துவரின் பரிந்துரையுடன் வலி நீக்கும் மாத்திரைகளை எடுத்துக்கொள்ளலாம். புற்றுநோய், சிறுநீரகக் கற்கள், தீராத மூட்டு வலி முதலான நோய் பாதிப்பின் காரணமாகத் தூக்கம் வராமல் தவிப்பவர்கள், தூக்க மாத்திரைகளை அவர்களே வாங்கிச் சாப்பிடக் கூடாது. உடலில் எந்த நோய் காரணமாக தூக்க மின்மை ஏற்படுகிறதோ, அந்த நோயைக் குணப்படுத்த வேண்டுமே தவிர, தூக்கத்திற்காக மாத்திரைகளை எடுத்துக்கொள்ளக்கூடாது. உடற்பயிற்சி, தியானம், பிடித்த பொழுதுபோக்கு போன்றவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம், வலி உணர்வில் இருக்கும் கவனத்தைத் திசை திருப்ப முடியும். மனவலிமையை அதிகரித்துக்கொள்ள வேண்டும்.

**நன்றாகத் தூங்க எளிய வழிகள்**

**உடற்பயிற்சி அவசியம்**

உடற்பயிற்சி செய்யும்போது உடலில் உள்ள தசைகள் வலுவடையும். தேவையற்ற பதற்றத்தைத் தவிர்க்கலாம். சிலர் நடைப் பயிற்சி, உடற்பயிற்சி செய்துவிட்டு, உடல் சோர்வடையும் போது தண்ணீர் குடித்துவிட்டு படுத்து உறங்கி விடுவார்கள். இது மிகவும் தவறு. உடற்பயிற்சி வரைமுறையின்றி எல்லா நேரமும் செய்யக்கூடாது. படுக்கைக்குச் செல்வதற்கு மூன்று மணி நேரத்திற்கு முன்பே உடற்பயிற்சி செய்துவிட வேண்டும்.

**ஓய்வு அவசியம்**

தூங்குவதற்கு முன்னர் தேவையற்ற சண்டை சச்சரவுகளைத் தவிர்க்க வேண்டும்.

மனதை அமைதிப்படுத்த பிடித்த இசையைக் கேட்கலாம்.


தொலைக்காட்சியில் வன்முறை நிறைந்த படங்களையும், மனதில் குழப்பங்களைத் தோற்றுவிக்கும் நாடகங்களையும் பார்ப்பதை நிறுத்திக் கொள்ளவேண்டும்.


வீட்டில் உள்ளவர்களிடம் மனம் விட்டு அன்பாகப் பேசவேண்டும்.

யோகா அல்லது தியானம் செய்யலாம். அதன் பிறகு, படுக்கைக்குச் செல்லுங்கள்.

**மனக் கடிகாரத்தை முறைப் படுத்துங்கள்**

உடல் என்பது இயந்திரம் போன்






றது. குறிப்பிட்ட நேரத்துக்கு இயக்கி குறிப்பிட்ட நேரத்துக்கு ஓய்வு கொடுத்துவிட வேண்டும்.

இரவு எத்தனை மணிக்கு உறங்கச் செல்ல வேண்டும் மற்றும் காலை எத்தனை மணிக்கு எழ வேண்டும் என்பதை மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

தினமும் குறிப்பிட்ட நேரத்திற்குப் படுக்கைக்குச் செல்வதைப் பழக்கிக்கொண்டால், இரவு படுத்தவுடன் தூக்கம் வந்துவிடும்.

**வேலைகளை மாற்றுங்கள்**

படுக்கையில் படுத்தவுடன் தூக்கம் வரவில்லை, புரண்டு புரண்டு படுக்கிறீர்கள். அப்போதும் தூக்கம் வரவில்லையா? உடனே படுக்



கையில் இருந்து எழுந்து அந்த அறையைவிட்டு வெளியேறி மற்றொரு அறைக்குச் சென்று உங்களுக்குப் பிடித்த புத்தகங்கள் படியுங்கள், பாடல்கள் கேளுங்கள். உங்களுக்குச் சோர்வாக இருப்பது போல் தோன்றினால், உடனே மீண்டும் படுக்கைக்குச் சென்று விடுங்கள். தூக்கம் நன்றாக வரும்.

**உணவில் கவனம் தேவை**

இரவு படுக்கைக்குச் செல்லும் போது எக்காரணம் கொண்டும் பசியுடன் செல்லக் கூடாது. உறங்கச் செல்வதற்கு, இரண்டு மணி நேரம் முன்பே, உணவை முடித்துவிட வேண்டும்.

இரவு உணவில் பிரைட் ரைஸ முதலான விரைவு உண வுகள், மசாலா மற்றும் காரம் நிறைந்த உணவுகள் மற்றும் செரிமானத்திற்கு அதிக நேரம் எடுத்து கொள்ளும் உணவுகள் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும.

ஆவியில் வேகவைத்த இட்லி, இடியப்பம் அல்லது பழங்கள் இரவு உணவுக்கு ஏற்றவை.

இரவு எப்போதும் நிறைய சாப்பிடாதீர்கள், அசைவ உணவுகளையும் அதிகம் எடுத்துக்கொள்ள வேண்டாம்.

**மூச்சுப்பயிற்சி செய்யுங்கள்**

இரவு படுக்கைக்குச் செல்வதற்கு அரை மணி நேரம் முன்பு மூச்சுப்பயிற்சி செய்வது உடலுக்கும் மனதுக்கும் நல்லது.

தரையில் அமர்ந்தோ, கதிரையில் அமர்ந்தோ, படுக்கையில் அமர்ந்தோ மூச்சுப்பயிற்சி செய்யலாம். ஒன்று முதல் ஆறு எண்ணும் வரை முதலில் மூச்சை உள்ளிழுக்க வேண்டும். பிறகு, மெல்ல மெல்ல மூச்சுக்காற்றை வெளியே விடவேண்டும்.

கோப்பி, ரீ, சொக்லேட், கோலா பானங்கள், சமிபாட்டை கடைப்பிடிக்க எடுத்துக் கொள்ளும் செயற்கை மருந்துகள், சில வகை வலி நிவாரணி மாத்திரைகள் போன் றவற்றை உட்கொள்வதைத் தவிரத்திடுங்கள். இவற்றை உட்கொள்வதால் நரம்புகள் விழிப்படைகின்றன. நரம்புகள் ஓய்வெடுக்க நேரமாகும் என்பதால், தூக்கம் வராமல் தவிக்க நேரிடும்.

புகைபிடிப்பவர்கள் உடலில் நிக்கோட்டின் என்ற வேதிப் பொருள் செல்வதால், இது தூக்கத்தைக் கெடுக்கும். குறைந்த நேரத்தில் தூக்கம் கலைந்து விழிப்பு வந்துவிடும்.

இரவு நேரத்தில் போதைப் பொருட்களை உட்கொள்பவர்களுக்கு, நீண்ட நேரம் தூங்குவது போல உணர்வு இருக்கும். ஆனால் அவர்கள் ஆழ்ந்த நிலை தூக்கத்தை அடைவது இல்லை. இதனால் தூங்கி எழுந்தால் புத்துணர்ச்சியாக இருக்காது.

இரவு உறங்கச் செல்வதற்கு முன் புகைபிடிப்பது,மது அருந்துவது, கோப்பி அருந்துவது போன்றவற்றைத் தவிர்க்கவும்.

**சூரிய வெளிச்சம் வரும் வரை உறங்குங்கள்**


சூரியன் உதிக்கும் வரை உறங்குவதற்கும், சூரியன் உதிக்கும்போதே தூக்கம் கலைந்து எழுவதற்கும் பழகிக்கொள்ளுங்கள். இரவு பத்து மணி முதல் காலை ஆறு மணி வரை உறங்குவது நல்லது.

**படுக்கையில் மட்டும் தூங்குங்கள்**

இரவு படுக்கையில் படுத்தவுடன் சில நிமிடங்களில் தூக்கம் வராவிட்டால், வேறு அறைக்குச் சென்று மனதுக்குப் பிடித்ததை செய்யலாமே தவிர, வேறொரு இடத்தில் தூங்க முயலக் கூடாது. எப்போதும் படுக்கையைத் தவிர்த்து மற்ற இடங்களில் உறங்காதீர்கள். வேறு செயல் செய்யும போது உறக்கம் வருவதுபோல தோன்றினால், உடனே மீண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவை பொதுத் தேர்தலில் நிறுத்தி வெற்றிபெறச் செய்வதற்கு சிலர் முயற்சி



## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்வரும் பொதுத்தேர்தலில் முன்னிலைப்படுத்தி வெற்றி பெறுவதற்கு சிலர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இது ஒருபோதும் வெற்றியளிக்கப் போவதில்லை. அம்முயற்சியை தகர்த்து தவிடுபொடியாக்குவோம் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

பசில், கோத்தபாய என மகிந்த ராஜபக்ஷவினர் தொடர்பாக மக்கள் மத்தியில் காணப்பட்ட வீரர்கள் என்ற மாயைக்கு மக்கள் தேர்தலில் பாடம் புகட்டி அவர்களை சிறிய மனிதர்களாக்கியுள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடக்கின் ஆளுநராக பதவி வகித்த மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வாக்களிப்பதை தடுக்க முனைந்தார்.

அரச அதிகாரியான அவர் தனது கடமைகளை மறந்து அரசியலில் ஈடுபட்டார். இது கவலைக்குரிய விடயம்.

எனவே பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டமை நியாயமானதாகும். கோத்தபாய, பசில் மற்றும் மகிந்த குடும்பத்தினர் வீரம் மிக்கவர்கள் என்ற மாயை நாட்டு மக்கள் மத்தியில் பரப்பப்பட்டிருந்தது. அவையனைத்தையும் கடந்த தேர்தலில் மக்கள் தகர்த்து தவிடு பொடியாக்கி விட்டனர்.

மகிந்த ராஜபக்ஷ தொடர்பாக ஒரு விடயத்தை கூற வேண்டும். பிரதமர் ரணில் விக்ரமசிங்க சில அதிகாரிகளை அலரிமாளிகையை பார்வையிடுவதற்காக அனுப்பி வைத்துள்ளார். அதன்போது அங்கு கைவிடப்பட்ட நாயொன்று ஒரு அறைக்குள் இருந்து குரைத்துக் கொண்டு வெளியே வந்துள்ளது. பின்னர் அந்நாய்க்கு உணவு வழங்கி கூடொன்றில் அடைத்து வைத்துள்ளனர்.

இதேபோன்று தான் மகிந்த அடுத்த தேர்தலில் போட்டியிடுவார். வெற்றி பெறுவார். பிரதமராவார் எனக் கூறுபவர்களும் மேற்கண்ட கைவிடப்பட்ட நாய்களைப் போன்றவர்களே ஆவார்கள். இந்த முயற்சிகள் ஒருபோதும் வெற்றியளிக்கப் போவதில்லை.

பிரிவினை வாதத்தை பிரசாரம் செய்து மீண்டும் அரசியலுக்கு வருவதற்கு மகிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களும் மேற்கொள்ளும் முயற்சிகள் எதுவும் வெற்றி பெறப்போவதில்லை. தேசிய பாதுகாப்பிற்கு முதலிடம் வழங்கப்படும். பிரிவினைவாதம் தலை தூக்க இடமளிக்கமாட்டோம். மக்களின் சுதந்திரத்தை மதிக்கின்றோம்.

ஆனால் அதற்குள் மறைந்து கொண்டு அடிப்படை வாதம் பிரிவினை வாதத்தை விதைப்பதற்கு இடமளிக்க மாட்டோம் என்பதை பொறுப்புடன் கூறிக்கொள்ள விரு ம்புகிறேன் என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (இ-5)

# புத்ததாசவிடம் 500 மில்லியன் நட்டஈடு கோரும் விமல் வீரவன்ச

ஊடகங்களில் தன்னைப் பற்றி பொய் தகவல் வெளியிட்ட கடுவல முதல்வர் புத்ததாசவிற்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

புகைப்படங்கள் காட்டி பொய் தகவல் வெளியிட்டு அபகீர்த்தி ஏற்படுத்தியமைக்காக புத்ததாசவிடம் 500 மில்லியன் நட்டஈடு கோரியே விமல் வீரவன்ச கடிதம் அனுப்பியுள்ளார்.

இது தொடர்பில் மேலதிக தகவல் அறிய கடுவல முதல்வர் புத்ததாசவுடன் தொடர்பினை ஏற்படுத்த முயன்றபோதும் அது பலனளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 240 | 220 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 600 | 800 | 600 |
| தக்காளி | 220 | 120 | 200 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 50 | 60 |
| கோவா | 140 | 150 | 200 |
| கரட் | 200 | 180 | 240 |
| பூசணி | 50 | 50 | 60 |
| புடோல் | 200 | 120 | 140 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 110 | 90 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 |
| பாகற்காய் | 400 | 280 | 300 |
| வெண்டிக்காய் | 200 | 140 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 200 | 240 | 200 |
| லீக்ஸ் | 350 | 300 | 400 |
| பீற்றூட் | 200 | — | 240 |
| கறிமிளகாய் | 400 | 400 | 240 |
| முருங்கைக்காய் | 800 | — | — |
| போஞ்சி | 250 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 200 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 100 | 70 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 35-40 | 40-50 |
| இராசவள்ளி | 140 | 120 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 258

சிவம் சக்தி





அசோக் குமார்





புவி புவி




இரத்தினசபாபதி பாலராஜா




ராஜமணி சுப்பிரமணி




அருண்ணியா புவேனந்திராஜா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறுப்பு அரசியல் வேண்டாம் - பழ.நெடுமாறன்

ஆக்டோபசு படர்வதற்கு பல கைகள் இருப்பதைப் போல, வெறுப்பு அரசியலில் அவதூறானப் பேச்சு, கெட்ட எண்ணத்துடன் கூடிய எழுத்து, எதிரணியினர் மீது வழக்கு தொடர்தல், கொலை செய்தல், தாக்குதல் போன்ற பல்வேறு கெட்ட விழுதுகள் படர்ந்துள்ளன.

ஓர் அரசியல் கட்சி என்பது எதிர்க்கட்சியாகத்தான் இருக்க முடியுமே தவிர, பகைகொண்ட எதிரிக்கட்சியாக இருக்கக் கூடாது. கட்சிகளுக்கிடையே வளர்ந்து வரும் பகையின் விளைவாக மக்கள் நலன்களை மறந்துவிடுகிறார்கள்.

ஒருவர் தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சர் ஆக பதவியேற்கும்போது, பதவியை இழந்த முன்னாள் முதலமைச்சர் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில்லை. நாகரிகமான அரசியல், வன்முறை, பகைமை அரசியலாக மாற்றப்பட்டு விட்டது. ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதே முக்கிய நோக்கமாகிவிட்டது. இதனால் பாதிக்கப்படுவது ஜனநாயகமும் அப்பாவி மக்களும்தான்.

பெரும்பாலான அரசியல் கட்சிகளின் தலைவர்கள் வாரிசு அடிப்படையிலேயே வருகிறார்கள். தலைவர்களின் குடும்ப உறுப்பினர்கள், அவர்களது வாரிசுகள் அடுத்தத் தலைவர்களாக வருகின்றனர்.

ஜனநாயக வழியில் ஆரோக்கியமான, நாகரிகமான அரசியலை மேற்கொள்ள தங்களின் தொண்டர்களுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் அறிவுரைகளை வழங்கி அவர்களை வழிநடத்த வேண்டும்.

"தலைவர்கள், சுய கட்டுப்பாடு, மாண்பு, நாகரிகம் உள்ளிட்டவற்றை வெளிப்படுத்த வேண்டும். தலைவர்கள் இவ்வாறு செயற்படவில்லை என்றால், அசிங்கமான அரசியல் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது.

அவதூறாகப் பேசும் அரசியல்வாதிகளை அவர்கள் சார்ந்துள்ள கட்சிக்ளிலிருந்து நீக்க வேண்டும்" என உயர்நீதிமன்ற நீதிபதி என். கிருபாகரன் வேதனையுடன் தனது தீர்ப்புரை ஒன்றில் கடுமையாகச் சாடியுள்ளார்.

தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் சிலரின் செயற்பாடு அவர் உள்ளத்தில் எத்தகைய வேதனையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை இந்தத் தீர்ப்பு எடுத்துக்காட்டுகிறது.

அவரது தீர்ப்புரையில் "கடந்த கால அரசியல் நாகரிகம் என்பது வரலாறுபோல் காட்சி தருகிறது" என்று குறிப்பிட்டிருப்பது முக்கியமானதாகும்.

கடந்த தலைமுறை தலைவர்களான் ராஜாஜி, பெரியார், திரு.வி.க. காமராசர், ஜீவானந்தம், பி. ராமமூர்த்தி, அண்ணா போன்றோர் எத்தகைய நாகரிகமான அரசியலை நடத்தினார்கள் என்பதை நீதிநாயகம் நினைவுபடுத்தியிருக்கிறார்.

எத்தகைய கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஒருவர் மற்றொருவர் மீது வைத்திருந்த மதிப்பு, நட்பு ஆகியவற்றை அவர்கள் ஒருபோதும் மறக்கவில்லை.

இராஜாஜியும் பெரியாரும் காலமெல்லாம் கருத்து மோதலில் ஈடுபட்டிருந்த போதிலும் ஒருவர் மீது மற்றொருவர் வைத்திருந்த அன்பு அளப்பரியது. இராஜாஜி காலமானபோது அவருக்கு இறுதி மரியாதை செலுத்த, நடமாட முடியாத நிலையில் தள்ளுவண்டியில் வந்த பெரியார் கதறிக்கதறி அழுதுகொண்டே வந்ததை நான் பார்த்து மனம் உருகி இருக்கிறேன். அதைப்போலவே, இராஜாஜியுடன் காமராசருக்கு இருந்த கருத்து முரண்பாடு அனைவரும் அறிந்ததே.

தான் வளர்த்த காங்கிரசை ஒழித்தே தீருவது என கங்கணம் கட்டிக்கொண்டு தனது முதிய வயதில் களத்தில் இறங்கிய ராஜாஜி, காமராசர் அகில இந்திய காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின், தில்லியிலிருந்து தமிழகத்திற்கு வந்தபோது அவர் வருவதற்கு முன்னாலேயே சத்தியமூர்த்தி பவனுக்கு வந்து நீண்ட நேரம் காத்திருந்து அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துவிட்டுச் சென்றார்.

"நானே வந்து உங்களிடம் ஆசிபெற்றிருப்பேனே நீங்கள் வரவேண்டுமா" என காமராசர் நெஞ்சம் நெகிழ்ந்தார்.

பெரியாரிடம் கருத்து வேறுபாடு கொண்டு அண்ணா பிரிந்து தி.மு.க.வை உருவாக்கிய போது, பெரியார் மிகக்கடுமையாக அவரைச் சாடினார்.

1967 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தி.மு.க.வுக்கு எதிராக கடும் பிரச்சாரத்தை மேற்கொண்டவர் பெரியார். ஆனாலும், அண்ணா முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன் நேரடியாக திருச்சிக்கு சென்று பெரியாரைக் கண்டு அவரது வாழ்த்தைப் பெறத் தவறவில்லை. பெரியாரும் உள்ளம் நெகிழ்ந்தும் மனமுவந்தும் அவரை வாழ்த்தினார்.

1952ஆம் ஆண்டு ராஜாஜி முதலமைச்சரானபோது சட்டப்பேரவையில் கம்யூனிஸ்டு கட்சி வலுவான எதிர்க்கட்சியாக இருந்தது. "எனது முதலாவது எதிரி கம்யூனிஸ்டுகளே" என சட்டப்பேரவையிலேயே வெளிப்படையாக அறிவிக்க ராஜாஜி தயங்கவில்லை.

ஆனால், முல்லைப் பெரியாறு அணை நீரிலிருந்து மின்சாரம் தயாரிக்க அப்போது கேரள முதலமைச்சராக இருந்த பட்டம் தாணுப்பிள்ளையைச் சந்தித்து அனுமதி பெறுவதற்காக ராஜாஜி யாரைத் தேர்ந்தெடுத்தார் தெரியுமா?

யாரை தனது முதல் எதிரி என்று கூறினாரோ அந்த கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான பி. இராமமூர்த்தியையே. அவரும் சென்று அந்தப் பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக முடித்து தமிழகத்திற்கு மின்சாரம் கிடைக்க வழிசெய்தார்.

அதே சட்டப்பேரவையில் கம்யூனிஸ்டு கட்சியின் துணைத் தலைவரான ஜீவானந்தம் தனது தொகுதியில் உள்ள குறைகளையெல்லாம் சுட்டிக்காட்டிப் பேசியபோது, ராஜாஜி குறுக்கிட்டு "ஜீவா சர்வதேசியம் பேசுபவர். கேவலம் ஒரு தொகுதியைக் குறித்துக் கவலைப்படுகிறாரே" என கிண்டல் செய்தார்.

ஜீவா "உண்மைதான். நாங்கள் சர்வதேசியவாதிகள்தான். ஆனால், ஒரு தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவைக்கு வந்திருக்கிறேன். எனவே அந்த மக்களின் குறைகளைக் கூறவேண்டியது எனது கடமை. ஆனால், மாண்புமிகு முதலமைச்சருக்கு அந்தக் கடமை கிடையாது. எந்தத் தொகுதியிலிருந்தும் மக்களால் அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆளுநரால் நியமிக்கப்பட்டு வந்திருக்கிறார். எனவே, ஆளுநருக்கு மட்டும் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்" என்று கூறியபோது, ராஜாஜி உட்பட அனைவரும் வாய்விட்டு சிரித்ததால் சபையே கலகலத்தது.

1954 ஆம் ஆண்டில் காமராசர் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றபோது சட்டப்பேரவையில் உறுப்பினராக இருக்கவில்லை. எனவே, குடியேற்றம் தொகுதியில் அவர் சட்டப்பேரவை உறுப்பினராகப் போட்டியிட்டார். அவரை தி.மு.க. உட்பட அனைத்துக் கட்சிகளும் ஆதரித்தபோது, கம்யூனிஸ்டு கட்சி மட்டும் அவரை எதிர்த்து வேட்பாளரை நிறுத்தியது.



காமராசர் வெற்றிபெற்று முதலமைச்சராக இருந்தபோதுதான் நீண்டகால சிறை தண்டனை பெற்றிருந்த கம்யூனிஸ்டுத் தலைவர்களான பாலதண்டாயுதம், ப. மாணிக்கம், ஆர். நல்லகண்ணு உட்பட பலரை விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

பி. இராமமூர்த்தி, ஜீவானந்தம் போன்ற தலைவர்கள் காமராசருடன் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்தார்கள். ஆனாலும், அரசியலில் அவரை மிகக்கடுமையாக விமர்சிக்க அவர்கள் தயங்கியதில்லை.

தாம்பரத்தில் குடிசை வீடு ஒன்றில் ஜீவா வசித்த போது, முதலமைச்சராக இருந்த காமராசர் அவர் வீட்டிற்கே சென்று அவர் வாழ்ந்த நிலையைப் பார்த்து நெக்குருகிய வரலாறு அனைவரும் அறிந்தது.

காமராசருக்கும், இந்திரா காந்திக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்தபோது, இருவருக்குமிடையே தூது சென்று இருவரையும் ஒன்றுபடுத்த முயற்சி மேற்கொண்டவர் பி.இராமமூர்த்தி என்பதை நான் நேரடியாகவே அறிந்தவன்.

காங்கிரஸ் கட்சி பிளவுபட்டால், அது தனது கட்சிக்குத்தானே ஆதாயம் என்று பி. இராமமூர்த்தி நினைக்கவில்லை. அதுபோலவே, மாற்றுக்கட்சியைச் சேர்ந்த பி. இராமமூர்த்தி தங்களுக்கிடையே சமரசம் ஏற்படுத்த முயன்றபோது, அதை சந்தேகக் கண்கொண்டு காமராசரும், இந்திராவும் பார்க்கவில்லை. அவர் மீது முழுமையான நம்பிக்கை வைத்திருந்தார்கள்.

தமிழ்நாட்டுப் பிரச்சினைகளிலும் அந்தத் தலைவர்கள் ஒன்றுபட்டு நின்றார்கள். ஆந்திர மாநிலம் பிரிந்தபோது, சென்னை நகரின்மீது ஆந்திர மக்கள் உரிமை கொண்டாடினார்கள். அப்போது முதலமைச்சராக இருந்த ராஜாஜி சென்னை நகரம் தமிழர்களுக்கே சொந்தமானது என்பதில் உறுதியாக இருந்தார்.

இரு மாநிலங்களுக்கும் பொதுவான தலைநகரமாக சென்னை இருக்கட்டும் என நேரு யோசனை கூறியபோது, ராஜாஜி அதை ஏற்க மறுத்து "இதுதான் உங்கள் முடிவு என்று சொன்னால் இந்தக் கடிதத்தையே எனது பதவி விலகல் கடிதமாக வைத்துக் கொள்ளலாம்" என ராஜாஜி நேருவிற்கு எழுதினார்.

அவரின் நிலையை பெரியார், காமராசர் அண்ணா, ம.பொ.சி. ஆகியோர் ஆதரித்து உறுதியாக நின்றார்கள். அதன் விளைவாக சென்னை நகரம் தமிழர்களுக்குச் சொந்தமாயிற்று.

அதைப்போலவே தட்சிணப் பிரதேசம் அமைக்க பிரதமர் நேரு முயற்சி செய்த போது, முதலமைச்சர் காமராசர் அதை ஏற்கவில்லை. அவருடைய நிலையை பெரியார், அண்ணா, ம.பொ.சி. போன்றவர்கள் ஆதரித்து நின்று தட்சிணப் பிரதேசத் திட்டத்தைத் தகர்த்தார்கள்.

1967 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் காமராசர் தோற்றபோது அண்ணா மிக வருந்தினார். அதை பகிரங்கமாக வெளியிட அவர் தவறவில்லை. அதைப்போலவே, அண்ணாவின் உடல்நிலை பாதிக்கப்பட்டபோது அவரைச் சென்று பார்த்த காமராசர் மனம் கலங்கி உடனடியாக மருத்துவர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்ததோடு, முதல்வரின் உடல்நிலைக் குறித்து அவ்வப்போது மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என தி.மு.க. தலைவர்களிடம் அன்புடன் கடிந்து கொண்டார்.

சென்னையில் 2 ஆவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது, இராஜாஜி, பெரியார், ஜீவா, ம.பொ.சி. உள்ளிட்ட தலைவர்களை, முதலமைச்சராக இருந்த அண்ணாவே நேரில் சென்று அழைத்தார். இந்த உயர்ந்த பண்பாடு பிற்காலத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடுகளில் காணப்படவில்லை.

அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் தி.மு.க. தலைவர்கள் கலந்துகொள்ளவில்லை. தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது நடந்த மாநாட்டில் அ.தி.மு.க. கலந்துகொள்ளவில்லை.

தமிழக சட்டப்பேரவையும் மக்கள் பிரச்சினைகளைக் குறித்த தரமான விவாதங்கள் நடைபெறும் இடமாக இல்லாமல், தரங்கெட்ட வகையிலும், தங்களது பகைமையை வெளிக்காட்டும் வகையிலும் தி.மு.க. அ.தி.மு.க. மோதல் களமாக மாற்றப்பட்டுவிட்டது.

இரு கட்சித் தலைவர்களும் முதல்வராக இருந்தால் மட்டுமே சட்டப்பேரவைக்குச் செல்வது, இல்லாவிட்டால் செல்வதில்லை என்ற ஜனநாயக விரோதப் போக்கை கடைப்பிடிக்கிறார்கள்.

சட்டப்பேரவைக்குச் செல்ல விரும்பாவிட்டால், பதவியை விட்டு விலகி வேறு ஒருவர் அந்தத் தொகுதி மக்களின் பிரதிநிதியாக செல்வதற்கு வழிவிட வேண்டுமே தவிர, பதவியையும் விடமாட்டேன், சட்டப் பேரவைக்கும் போகமாட்டேன் என்று சொல்வது ஜனநாயகத்தை மதிக்காத போக்காகும்.

சட்டப்பேரவைக்கு உள்ளே மட்டும் அல்ல, வெளியேயும் இந்த இரு கட்சிகளும் ஒன்றுக்கொன்று எதிரிக்கட்சியாக நடந்து கொள்கின்றன. இதன் விளைவாக இந்த தீய அரசியல் போக்கு மற்ற கட்சிகளுக்கும் பரவுகிறது.

தமிழ்நாட்டு அரசியல் தலைமை, இந்திய அரசியலுக்கு வழிகாட்டிய நிலை போய் விட்டது. இன்று தமிழக அரசியலைப் பார்த்து இந்தியாவின் பிற மாநில அரசியல்வாதிகள் எள்ளி நகையாடும்போக்கு பெருகி விட்டது.

இவற்றைக் கண்டு மனம் பொறுக்காத நிலையில்தான் உயர்நீதிமன்றத்தில் நீதிநாயகம் கிருபாகரன் தனது வேதனையை வடித்திருக்கிறார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேட்டை ஆரம்பம்

## ஜே.வி.பி.தலைவர் சூளுரை

(கொழும்பு)

**முன்னைய ஆட்சியில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பில் தொடர்ச்சியான முறைப்பாடுகளை தற்போதைய புதிய அரசாங்கம் மூலம் வெளிப்படுத்தும் நடவடிக்கை தொடர்கின்றது. முன்னைய ஆட்சியில் முக்கிய பிரமுகர்கள் பலரின் ஊழல்கள் தொடர்பிலான ஆதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன. ஊழலுக்கு எதிரான எமது வேட்டை ஆரம்பமாகிவிட்டது என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**



முன்னைய அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர்களான பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கும் எதிரான பாரிய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் இது தொடர்பில் ஜே.வி.பியின் செயற்பாடுகள் எவ்வாறு அமையுமென வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த பத்து ஆண்டுகளில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் மக்களின் சொத்துக்கள், நாட்டின் வளங்கள் எவ்வாறு சூறையாடப்பட்டன என்பது தொடர்பில் தற்போது அறியக்கிடைக்கின்றன.

கோடிக்கணக்கான சொத்துக்களை ஒரு குடும்பம் மட்டும் சூறையாடி அனுபவித்து வந்துள்ளது. இலங்கைக்குள் பல ஏக்கர் நிலப்பரப்பில் ஆடம்பர வீடுகளும் சொகுசு ஹோட்டல்களும் அமைத்து சுகபோக வாழ்க்கையினை இவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். அரசாங்கத்திற்குள் இருந்தும் அமைச்சர்கள் தற்போது ஆட்சி மாற்றத்தின் பின்னர் நடந்த உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வருகின்றனர்.

இலங்கையின் பிரபல ஊடகவியலாளர்களின் கொலை தொடர்பிலும் கடத்தல்கள் தொடர்பிலும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேரடியான தொடர்பினை கொண்டுள்ளார் என்ற குற்றச்சாட்டானது மிகவும் பாரதூரமானது. நாட்டின்ஜனநாயகத்திற்காக போராடும் ஊடகவியலாளர்களை கொலை செய்ய அரசாங்கம் திட்டம் தீட்டியிருக்குமாயின் அதுவே மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் அராஜகத்தினை வெளிச்சத்திற்கு கொணடு வரும் செயற்பாடாகும்.

அதேபோல் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தின் முக்கிய உறுப்பினர்கள் சிலருக்கு எதிராக ஊழல் மோசடி குற்றச்சாட்டினை நாம் முன்வைத்திருந்தோம்.அவை தொடர்பான ஆதாரங்கள் அனைத்தும் எம்மிடம் உள்ளன. ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் பழைய விடயங்களை மறைத்து மக்களை ஏமாற்றும் நடவடிக்கையை இத்தோடு முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணி தனது வேட்டையினை ஆரம்பித்து விட்டது. நூறு நாட்களில் தேசிய அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது என்பது எமக்கு தெரியாது. ஆனால் மக்கள் விடுதலை முன்னணி தனது கடமையினை செய்யும். மக்களின் சொத்துக்களையும் நாட்டின் சொத்துக்களையும் தனி நபர்கள்சூறையாடுவதை நாம்வேடிக்கை பார்க்க மாட்டோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# தமிழக அரசுடன் நட்புறவை வலுப்படுத்துவது அவசியம்

## லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

இந்தியாவுடனான நட்புறவை கடந்த அரசாங்கம் முறித்துக் கொண்ட நிலையில் புதிய அரசு நட்புறவை புதுப்பித்துக்கொள்ள எடுக்கும் நடவடிக்கைகள் வரவேற்கப்படுவதற்குரியதாகும் எனத் தெரிவித்த பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, எமது எதிர்கால பொருளாதார மேம்பாட்டுக்கு இந்தியாவின் பங்களிப்பு அத்தியாவசியமானதாகுமென்றும் தெரிவித்தார்.



தமிழக அரசாங்கத்துடனும் நட்புறவை வலுப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவிக்கையில்,

அயல் நாடான இந்தியாவுடன் நெருங்கிய நட்புறவை பேணுவது என்பது எமது வெளிநாட்டுக் கொள்கையின் முக்கியத்துவமானதாகும்.ஆனால் கடந்த அரசாங்கம் இந்தியாவுடனான நட்புறவை முறித்துக்கொண்டது.

இலங்கை பின்பற்றிய அணி சேரா கொள்கையை கைவிட்டு பிழையான வெளிநாட்டுக் கொள்கையை கையாண்டது.இதனால் உலகில் தனித்து விடப்பட்ட இராச்சியமாகவும் அரசியல் கலாசாரம் மழுங்கடிக்கப்பட்ட நாடாகவும் எமது நாடு மாறியது.

புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசு இந்தியாவுடன் நட்புறவை மேம்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளது.அதன் முதற்கட்டமாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளார். இது வரவேற்புக் குரியதாகும்.

இதன்மூலம் எமது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும்.தெற்காசியாவின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கும் இரு தரப்பு நலலுறவு அத்தியாவசியமானதாகும்.

அதேவேளை தமிழ் நாட்டு மாநில அரசுடனும் நட்புறவை வலுப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## சுற்றுச் சூழல்

மனிதனிடமிருந்து மனிதனைக் காப்பாற்றுவது எப்படி என்ற கவலைபோய், மனிதனிடமிருந்து பூமியை காப்பாற்றுவது எப்படி என்பதுதான் இன்றைய கவலையாக உள்ளது.

தற்போது பூமியின் வெப்பம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரண கர்த்தா மனிதன்தான். இன்னும் 25 வருடத்தில் பூமியின் வெப்பம் மிகமிக அதிகரிக்கும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆனால் இது சாதாரணமான விடயமல்ல. இதனால் பல பாதக விளைவுகள் ஏற்படும்.

பூமியின் வெப்பம் அதிகரிக்கும் போது வடதுருவத்திலும் தென்துருவத்திலும் உள்ள பிரமாண்டமான பனிக்கட்டிகள் உருக ஆரம்பிக்கும். இதனால் கடல்மட்டம் உயரும் பல தீவுகள் மூழ்க வேண்டிய நிலை கூட ஏற்படும். கடலின் ஓரப்பகுதிகள் நீரினுள் மூழ்கக் கூடும்.

உதாரணத்திற்கு கடல்மட்டம் ஒரு மீற்றர் உயர்ந்தால் பங்களாதேஷ் நாட்டில் 4 இலிருந்து 8 கோடி மக்கள் வேறு இடம் தேட வேண்டிய நிலை ஏற்படும். பூமி வெப்பமடைதலுக்கான காரணம் என்ன?

இயற்கையின் சமநிலை மனிதனால் குழப்பமடைவதே இதற்கான காரணமாகும். நாம் ஒட்சிசனை உள்ளெடுத்து காபனீரொட்சைட்டை வெளிவிடுகின்றோம். மரம், செடி, கொடி போன்றன காபனீரொட்சைட்டை உள்ளெடுத்து ஒட்சிசனை வெளியேற்றுகின்றன. இந்த சமநிலை ஒழுங்காக நடந்தால் ஒருவித பாதகமும் ஏற்படாது.

ஆனால் மனிதன் காடுகளை அழிக்கின்றான். இதனால் காற்றில் காபனீரொட்சைட்டின் அளவு அதிகரிக்கின்றது. இதைவிட, வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை. தொழிற்சாலைகள் விடும் புகை என்பனவும் காற்றில் கலக்கின்றன.

இதனால் சூரியனிலிருந்து வெளியாகும் அல்ரா வயலட் கதிர்களிடமிருந்து நம்மைப் பாதுகாக்கும் ஓசோன் படை தேய் வடைகிறது.

குளோரோ புளோரோ காபன் (CFC) என்னும் இரசாயனம் குளிரூட்டிகள். எயார்கண்டிஷனர். தீயணைப்புக் கருவிகள் போன்றவற்றில் குளிர்ச்சியை ஏற்படுத்த பயன்படுகின்றது. இதுதான். (CFC) ஓசோன்படை தேய்வடைவதற்கான முக்கிய காரணியாகும். ஒரு மூலக் கூறு குளோரோ புளோரோ காபன் (CFC) ஆனது ஒரு இலட்சம் ஓசோன் ($O_3$) மூலக் கூறுகளை அழிக்கவல்லதாம். இதற்கு ஒரு மாற்றுப் பொருள் கண்டுபிடிக்க வேண்டும்.

இயற்கையுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தன் அவசியத்தை இப்பொழுது உலகத்தலைவர்களெல்லாம் ஒன்று கூடி ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந்தியாவின் குஜராத் வடபகுதியில் ஆரவல்லிக்குன்று சரிவின் மையத்தில் மிருகங்கள், பறவைகளுக்கென்று ஒரு கோயில் உள்ளது. அதில் பறவைகளினதும் மிருகங்களினதும் சிற்பங்கள் இருக்கின்றன. கர்ப்பக் கிரகத்திலும் அதே சிலைகள் தான் உள்ளன. அங்கு வணங்கப்படும் தெய்வங்கள், பறவைகளும், விலங்குகளும் தான். இவற்றின் மதிப்பைப் புரிந்து கொள்வதற்காக தெய்வீகக் கதைகளில் கூட தெய்வங்களின் வாகனமாக பறவைகளும் மிருகங்களும் இருக்கின்றன.

கி.பி.17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நீதிசாரம் என்ற நூல் “ மரம் வளர்த்தால் நரகம் இல்லை”என்று எழுதப்பட்டிருக்கின்றது. அந்தக் காலத்திலேயே இவற்றின் மகிமையைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

நாம் எல்லாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இயற்கையின் படைப்புக்களை அழிப்பதற்கு முயற்சி செய்யக் கூடாது. சிலபேர் எதற்கும் கவலைப்படுவதில்லை. எதிலும் அலட்சியமாக இருப்பார்கள். அலுவலக நண்பர் ஒருவரிடம் நான் இதைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தேன்.

“இப்படியே போய்க் கொண்டிருந்தால் ஒருநாள் பெரிய பிரளயமே வந்து விடும். கடல் கொந்தளிக்கும், சூறாவளி, எரிமலை , பூகம்பம் போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும்” என்றேன். அவர் ரொம்ப சாவகாசமாக என்னைப் பார்த்து, “அன்றைக்காவது ஒபீஸ் லீவு விடுவாங்களா சேர்?” என்கிறார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றம் காணப்போகும் படைக் கட்டமைப்புக்கள்!



ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்சவுக்கு ஏற்பட்ட தோல்வி இலங்கையில் ஒட்டுமொத்த நிர்வாக கட்டமைப்புகளையுமே, மாற்றியமைக்கும் நிலைக்குத் தள்ளியுள்ளது.

காரணம் ஒன்பது ஆண்டுகளாக ஆட்சி செலுத்திய மகிந்த ராஜபக்ஷ தனது செல்வாக்கை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எல்லாக் கட்டமைப்புகளிலுமே தனக்கு ஆதரவானவர்களையும், விசுவாசமானவர்களையும் நியமித்திருந்தார்.

பாதுகாப்புக் கட்டமைப்பைப் பொறுத்தவரையில் எதிர்க்கேள்விக்கு இடமற்ற வகையில் அது ராஜபக்ஷமயமாக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவின் தோல்வியை அடுத்து அவருக்கு நெருக்கமாக இருந்த மூத்த இராணுவ அதிகாரிகள் அனைவரும் பதவி நீக்கப்பட்டனர் அல்லது பதவியிலிருந்து விலக நிர்ப்பந்திக்கப்பட்டனர்.



இதன் பின்னர் ராஜபக்ஷ குடும்பத்துக்கு விசுவாசமாகச் செயற்படக் கூடிய அதிகாரிகளே எல்லா மட்டங்களிலும் முதன்மை பெற்றனர். முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டனர். பாதுகாப்பு அமைச்சு அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவிடமே இருந்தாலும் அதனை கோத்தபாய ராஜபக்ஷவே தனது முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.

பாதுகாப்புக் கட்டமைப்பில் தமக்கு சாதமாகச் செயற்படக் கூடிய அதிகாரிகளையே நியமித்து, தமது தீர்மானங்கள் அனைத்தும் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தார் கோத்தபாய ராஜபக்ஷ.

ஆனால் என்னதான் தனக்கு விசுவாசமானவர்களை பாதுகாப்புக் கட்டமைப்புகளுக்கு தலைமை தாங்க அவர் நியமித்திருந்தாலும், கூட கடந்த 9 ஆம் திகதி அதிகாலையில் அவர்களுக்கு உதவ பாதுகாப்பு உயர்மட்டம் முன்வரவில்லை என்பது அவர்களின் துரதிர்ஷ்டம் என்றுதான் கூற வேண்டும். இதன் காரணமாக, பதவியிலிருந்து நீங்க வேணடிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார் மஹிந்த ராஜபக்ஷ.

அதையடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் நிச்சயம் பாதுகாப்புத் துறையிலும் மாற்றங்கள் நிகழ்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது.

புதிய அரசாங்கம் உடனடியாக அரசியல் மற்றும் நிர்வாகத் துறைகளில் மாற்றங்களைச் செய்து வருகிறது. மைத்திரிபால சிறிசேனவின் புதிய அரசாங்கம் பாதுகாப்புத் துறையில் உடனடியாக கை வைகக வில்லை. எவ்வாறாயினும் குறிப்பிடத்தக்க சில மாற்றங்கள் இடம் பெற்றுள்ளன. அதில் முதலாவதும் முக்கியமானதுமான மாற்றம் பாதுகாப்புச் செயலர் பதவிக்கு நிர்வாக சேவை அதிகாரியான பஸ்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளதாகும்.

இதுவரை காலமும் இந்தப் பதவி ஜனாதிபதிக்கு அடுத்த நிலையில் இருந்தவரான கோத்தபாய ராஜபக்சவினால் கையாளப்பட்டது. அதற்கு அவர் முன்னாள் இராணுவ அதிகாரியாக இருந்தது மட்டுமன்றி, மகிந்த ராஜபக்ஷவின் சகோதரராகவும் இருந்தே முக்கிய காரணம்.

ஆனால் புதிய பாதுகாப்புச் செயலர் அந்தளவுக்கு வலுவானவராக ஒருபோதும் இருக்க முடியாது. அவர் ஒரு முன்னாள் இராணுவ அதிகாரியும் அல்ல. மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் அல்லது உறவினரும் அல்ல.

அதேவேளை பாதுகாப்பு அமைச்சராக சரத் பொன்சேகா பொறுப்பேற்கவுள்ளதாக முன்னர் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்க முன்னரே தன்னைப் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்க வேண்டும் என்றும், பழையபடி குடியுரிமை மற்றும் இராணுவ பட்டங்கள், விருதுகள் மீள அளிக்கப்பட வேண்டும் என்றும், 'பீல்ட் மார்ஷல்' பட்டம் தரப்பட வேண்டும்என்றும்நிபந்தனை விதித்திருந்தார் சரத் பொன்சேகா.

ஆனாலும் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவி யேற்ற பின்னரும், பாதுகாப்பு அமைச்சு சரத் பொன்சேகாவிடம் வழங்கப்படவில்லை. அதற்குக் காரணம், பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடமே இருக்க வேண்டும் என்பது விதிமுறையாக உள்ளது. அடுத்து சரத் பொன்சேகா இப்போது குடியுரிமை பறிக்கப்பட்டுள்ள ஒருவர். அவரது குடியுரிமை உள்ளிட்ட பறிக்கப்பட்ட அனைத்து உரிமைகள், சலுகைகள், பதக்கங்கள், பட்டங்கள் அனைத்தையும், மீள வழங்குவதற்கான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும் அது இன்னமும் வர்த்தமானி மூலம் வெளியிடப்படவில்லை. குடியுரிமை இல்லாத ஒருவரை அமைச்சராகவோ பிரதி அமைச்சராகவோ நியமிக்க முடியாது. மூன்றாவது சரத் பொன் சேகா ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் அல்ல.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரைத்தான் அமைச்சராக நியமிக்கலாம். இந்த மூன்று காரணங்களாலும்தான், சரத் பொன்சேகா பாதுகாப்பு அமைச்சையோ பிரதிப் பாதுகாப்பு அமைச்சையோ பெற முடியவில்லை.

எனினும், அவர் பாதுகாப்புத் துறையில் முக்கியமான முடிவுகளை எடுக்கும் ஒருவராகவே இருக்கப் போகிறார். அவருக்கு ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகர் பதவி அளிக்கப்படும் என்று தெரிவிக்கப் படுகிறது.

அது சிலவேளைகளில், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவிக்கு நிகரானதாக தரமுயர்த்தப்படும் வாய்ப்புகளும் உள்ளன. அதன் ஊடாக பாதுகாப்புக் கட்டமைப்பில் சரத் பொன்சேகா தனது அதிகாரத்தை நிலை நிறுத்த வழியேற்படுத்தப்படலாம்.

சரத் பொன்சேகா பாதுகாப்பு உயர்மட்டத்துக்கு வருவதையிட்டே முன்னாள் ஜனாபதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கோத்தபாய ராஜபக்சவும் கவலை கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையே மகிந்த ராஜபக்ஷ தோல்வி கண்டவுடன், பதவியிலிருந்து விலகியவர்களில் முக்கியமானவர் அரச புலனாய்வுச் சேவையின் தலைவரான மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண. அவர் கடந்த 9 ஆம் திகதியே தனது பதவி விலகல் கடிதத்தை அனுப்பிவிட்டார்.

மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண கடந்த ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சில் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அடுத்த நிலையில் சக்தி வாய்ந்தவராக இருந்து வந்தவர். விடுதலைப் புலிகளுக்கு எதிராக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு நடவடிக்கைகளுக்கு அவரே பொறுப்பாக இருந்தவர்.

ஆழ ஊடுருவும் படையணியை இராணுவத்தில் உருவாக்குவதில் முக்கிய பங்காற்றியவர். விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதில் இவர் மிகப் பெரியளவிலான பங்களிப்பை செய்தவர். ஆனால் போருக்குப் பிந்திய இவரது நடவடிக்கைகள், அவரை அரசியல் சார்புடையவராக மாற்றிவிட்டது.

அதனால்தான், அவர் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன், பதவி விலக நேரிட்டுள்ளது. மைத்திரிபால சிறிசேனவின் புதிய அரசாங்கம், முப்படைத் தளபதிகள், கூட்டுப்படைகளின் தளபதி உள்ளிட்டோரையும் வீட்டுக்கு அனுப்பும் என்றே கருதப்படுகிறது.

மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட இவர்கள், பெரும்பாலும் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர்கள். இதனால் இவர்களை உயர் படைத் தளபதிகளாக வைத்திருப்பதற்கு புதிய அரசாங்கம் விரும்பவில்லை எனத் தெரிகிறது.

விமானப்படைத் தளபதியின் பதவிக்காலம் இன்னும் சில நாட்களில் முடிவடையவுள்ளது. அதன் பின்னர் புதிய தளபதி நியமிக்கப் படுவார். இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் தயா ரத்நாயக்க, தேர்தலின் போது, ஜனாதிபதிக்கு சார்பாக பிரசாரம் செய்தவர் என்று குற்றம்சாட்டப்பட்டவர்.

எனினும் கடந்த 9 ஆம் திகதி அதிகாலையில் இராணுவப் புரட்சிக்கு ஒத்துழைக்க அவர் மறுத்து விட்டதால் அவர் தனது பெயரைக் கொஞ்சம் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். இதனை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர செய்தியாளர் மாநாட்டில் வெளிப்படையாகவே கூறியிருந்தார். இதனால் இராணுவத் தளபதி உடனடியாக மாற்றப்படுவாரா என்பதில் சந்தேகம் நிலவுகிறது.

எனினும் கடற் படையிலும் விமானப்படையிலும் உயர் மட்டத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படலாம். அதைவிட, இராணுவத்தின் டிவிசன் மட்டங்களிலுள்ள தளபதிகளும் மாற்றப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.



பொதுவாகவே வருடத் தொடக்கத்தில் இத்தகைய மாற்றங்கள் அறிவிக்கப்படுவதுண்டு.

இந்த ஆணடில் அத்தகைய மாற்றங்கள் ஏதும் இன்னமும் இடம்பெறவில்லை. எனவே விரைவில் அத்தகைய மாற்ற அறிவிப்பு வெளிவரக்கூடும்.

குறிப்பாக கோத்தபாய ராஜபக்ஷவுக்கு நெருக்கமான கஜபா படைப் பிரிவு அதிகாரிகள் பலர் முக்கியத்துவமற்ற பதவிகளுக்கு நியமிக்கப்படக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

இதற்கிடையே, மஹிந்த ராஜபக்ஷவின் தோல்வியைத் தொடர்ந்து சரத் பொன்சேகாவுக்கு நெருக்கமான முன்னாள் இராணுவ அதிகாரிகள் நாடு திரும்பத் தொடங்கியுள்ளனர்.

தேர்தல் முடிந்த மூன்றாவது நாளே மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவும் பிரிகேடியர் கெப்பிட்டிவலன்னவும் நாடு திரும்பினர்.

சரத் பொன்சேகா 2010 ஆம் ஆணடு ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றதும் இவர்கள் இராணுவத்தை விட்டு கட்டாயமாக ஓய்வு பெற வைக்கப்பட்டனர்.

இவர்களுடன் சேர்த்து 14 மூத்த இராணுவ அதிகாரிகள் சேவையிலிருந்து விலக நேரிட்டது. அவர்களில் பலரும் வெளிநாடுகளில் தஞ்சமடைந்திருந்தனர்.

அவுஸ்திரேலியாவில் தஞ்சமடைந்த மேஜர் ஜெனரல் சமந்த சூரியபண்டார அண்மையில் மரணமாகி விட்டார்.

இவ்வாறு வெளிநாடுகளில் தஞ்சமடைந்த சில படை அதிகாரிகள்தான், சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு சாட்சியமளித்துள்ளதாகவும் கூறப்பட்டது.

மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, புலிகளுக்கு எதிரான போரில் சரத் பொன்சேகாவுக்கு வலதுகரமாக விளங்கியவர்.

விசேட நடவடிக்கைப் பணிப்பாளராகவும், திட்டமிடல் பணிப்பாளராகவும் இருந்தவர் அவர். அவர் மீளத் திரும்பியிருப்பது, மீண்டும் இராணுவ சேவையில் அவர் உள்ளீர்க்கப்படும் வாய்ப்புகளை எதிர்பார்த்தே என்று கருதப்படுகிறது.

எவ்வாறாயினும, புதிய அரசாங்கத்தில் பாதுகாப்பு விவகாரங்களில் முக்கிய இடத்தை தான் வகிக்கப் போவதாக சரத் பொன்சேகா வெளிப படையாகவே ரைம்ஸ் ஒவ் இந்தியாவுக்கு கூறியிருக்கிறார்.

அவர் தனக்கு நம்பிக்கையானவர்களைக் கொண்டு படைக் கட்டமைப்பை வலுப்படுத்த முனைவார் என்பதில் சந்தேகமில்லை.

இதனால், வரும் நாட்களில் பாதுகாப்புக் கட்டமைப்புகளில் மாற்றங்கள் இடம்பெறுவது தவிர்க்க முடியாத விட யமாகவே இருக்கும்.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதிகளின் தாக்குதலில் சிக்கி விமானம் விழுந்து நொறுங்கியது

## 35 இராணுவத்தினர் உடல் கருகிப்பலி!

**(பெய்ரூட்)**

**சிரியாவில் தீவிரவாதிகளின் தாக்குதலில் நாளுக்கு நாள் பல நூற்றுக்கணக்கானவர்கள் பலியாகிவரும் நிலையில் நேற்று முன்தினம் மாலை வேளை அந்நாட்டு இராணுவத்திற்கு சொந்தமான விமானம் ஒன்று ஆயுதங்களை ஏற்றிச் சென்ற போது தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகி விழுந்து நொறுங்கியதில் அதில் பயணித்த 35 இராணுவத்தினர் உடல் கருகி சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளமை அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சிரியாவில் கட்லிப் மாகாணத்தில் இராணுவ சரக்கு விமானம் ஒன்று பறந்து கொண்டிருந்தது. அதில் இராணுவ வீரர்கள் மற்றும் கருவிகள், வெடிபொருட்கள், ஆயுதங்கள் இருந்தன. அந்த விமானம் அபு அல்துகர் இராணுவ விமான தளத்தில் தரை இறங்க தயாரானது.

அப்போது நடுவானில் திடீரென இயந்திரக் கோளாறு ஏற்பட்டது. எனவே தரையில் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 35 இராணுவ வீரர்கள் பலியாகினர். மோசமான வானிலை காரணமாக கடும் பனிப்பொழிவு ஏற்பட்டது.

இதனால் அந்த விமானம் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



ஆனால் இதை அல் கொய்தாவின் கிளை அமைப்பான அல் நுஸ்ரா தீவிரவாதிகள் மறுத்துள்ளனர். அந்த விமானத்தை தாங்கள் சுட்டு வீழ்த்தியதாக டுவிட்டர் இணைய தளத்தில் தெரிவித்துள்ளனர்.

மேலும் விழுந்து நொறுங்கிய விமானத்தின் பாகங்கள் மற்றும் விபத்தில் பலியானவர்களின் உடலகளையும் புகைப்படம் எடுத்து வெளியிட்டுள்ளனர்.

சிரியாவில் இராணுவத்துக்கு எதிராக தீவிரவாதிகள் செயற்பட்டு வருகின்றனர். இராணுவ ஹெலிகொப்டர் மற்றும் விமானங்களை சுட்டு வீழ்த்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# குழந்தைகள் விபச்சாரத்தில் ஈடுபட கடவுள் ஏன்தான் அனுமதிக்கிறார்?

## போப்பாண்டவரிடம் கண்ணீர் விட்டழுதபடி சிறுமி கேள்வி



© AP Photo/Bullit Marquez



கடந்த 12ஆம் திகதி முதல் கருணையே நோக்கம் எனபதை வலியுறுத்தி ஆசிய நாடுகளில் ஆறு நாட்கள் சுற்றுப் பயணத்தை போப்பிராணசிஸ் தொடங்கினார்.

முதற்கட்டமாக இலங்கைக்குச் சென்ற அவர் மூன்று நாட்கள் அங்கு தங்கியிருந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். பின்னர் அங்கிருந்து கடந்த 16ஆம் திகதி பிலிப்பைன்ஸ் சென்றார். அங்கு நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலநது கொண்ட அவர் நேற்று முன்தினம் இறுதி நிகழ்ச்சியாக ரிசால் பூங்காவில் நடைபெற்ற திறந்தவெளி பிரார்த்தனை கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இந்த பிரார்த்தனை கூட்டத்திற்கு சுமார் ஆறு மில்லியன் மக்கள் அலைகடல் என திரண்டு வந்திருந்தனர். அப்போது போப்பை சந்தித்த ஆதரவற்ற சிறுமி ஒருவர், உலகையே கூனிக்குறுக வைக்கும் கேள்வி ஒன்றை கேட்டார்.

க்ளிசெல்லெ ஜரிஸ் பலோமர் என்ற அச்சிறுமி, போப்பை சந்தித்து ஆசி பெற்ற போது, பல குழந்தைகளை பெற்றோர்கள் கைவிட்டு விடுகின்றனர். இதனால் பாதிக்கப்படும் அவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாவது, விபச்சாரத்தில் ஈடுபடுவது போன்ற கேடான நிகழ்வுகளை சந்திக்க நேர்கிறது. ஒரு பாவமும் அறியாத சிறு குழந்தைகளுக்கு இப்படிப்பட்ட துன்பங்கள் நிகழ கடவுள் ஏன் அனுமதிக்கிறார். அப்படி பாதிக்கப்பட்டஎங்களை போன்றவர்களுக்கு ஏன் சில மனிதர்கள் மட்டுமே உதவுகின்றனர் என்ற கேள்வியை எழுப்பியவாறு கண்ணீர் விட்டு கதறி அழுதாள்.

அந்த சிறுமியை கருணையுடன் ஆசீர்வதித்த போப், அவளை கட்டியணைத்து ஆறுதல் கூறினார். உடனே கூடியிருந்த மக்களை பார்த்து பேசிய அவர், பதில் கூற முடியாத கேள்வியை இச்சிறுமி கேட்டுள்ளார். வார்த்தைகளால் விபரிக்க முடியாததால் கண்ணீரின் மூலம் அப்பெண் குழந்தைகளுக்கு நேரும் கொடுமையை விபரித்துள்ளார்.

ஏன் குழந்தைகள் இவ்வாறு அவதிப்பட வேண்டும். இதுபோன்ற கேள்விகளை உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். உணவில்லாமல் தவிக்கும் குழந்தையை பார்க்கும் போதும், வீதியில் ஒரு குழந்தை போதைவஸ்துவை உபயோகிக்கும் போதும், வீடில்லாமல் ஒரு குழந்தை தவிக்கும் போதும், பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தையை காணும் போதும், குழந்தைகளை அடிமையாக நடத்தும் சமூகத்தை காணும்போதும் எப்படி நாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதை கற்றுக்கொள்ளுங்கள் என்று கூறினார்.

குழந்தைகளை நாம் வரவேற்கவேண்டிய பரிசாக பார்க்கவேண்டும். அவர்களை நேசத்துடன் பாதுகாக்க வேண்டும் என்று கூறிய போப், சிறு குழந்தைகள் மற்றும் இளம் வயதினரை நாம் நன்கு கவனித்து, அவர்கள் நம்பிக்கை தளராமலும், வீதியில் வசிக்கும் நிலை வராமலும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

போப்பிடம் கேள்வி கேடட சிறுமி பலோமர் பெற்றோர்களால் கைவிடப்பட்டு அநாதையாக குடிசை ஒன்றில் இருந்தபோது தேவாலயத்தை சேர்ந்த சிலரால் கண்டெடுத்து வளர்க்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-5)




## இந்தோனேசியாவின் மரண தண்டனை பிரேஸில்,நெதர்லாந்து கடும்கண்டனம்

### தூதுவர்களையும் மீளப்பெற்றது

போதைப்பொருள் கடத்தல் குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த தமது பிரஜைகளுக்கு இந்தோனேசியா துப்பாக்கிச் சூடு நடத்தி நேற்று முன்தினம் தண்டனை நிறைவேற்றியதைத் தொடர்ந்து, பிரேஸிலும் நெதர்லாந்தும் தங்களின் தூதுவர்களை மீள அழைத்துக் கொண்டுள்ளன.

இந்தோனேசியாவின் புதிய ஜனாதிபதி ஜோக்கோ விடோடோவின் ஆட்சியின் கீழ் வியட்நாம், மலாவி, நைஜீரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூவருக்கும் போதைப் பொருள் குற்றங்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தோனேசிய பெண்ணொருவரும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டவர்களில் ஒருவர்.

பிரேஸிலும் நெதர்லாந்தும் மேற்கொண்டிருந்த இறுதிநேர மேன்முறையீட்டு முயற்சிகளும் நிராகரிக்கப்பட்டன.

2003ஆம் ஆண்டில் இந்தோனேசியாவுக்குள் 13 கிலோவுக்கும் அதிகமான கொகேய்ன் போதைப்பொருள் கடத்தியதாக பிரேஸில் பிரஜை கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதால் ஆத்திரமடைந்துள்ளதாக பிரேஸில் ஜனாதிபதி டில்மா ரோஸெஃப் கூறியுள்ளார். போதைப்பொருள் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த குற்றத்திற்காக நெதர்லாந்து பிரஜையான ஆங்கியெம் சோய்க்கு மரண தண்டனைநிறைவேற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## போகோஹறாம் தீவிரவாதிகள் அட்டூழியம்; மேலும் 80 பேரை கடத்திச் சென்றுள்ளனர்

நைஜீரியாவில் கமரூன் நாட்டின் எல்லையில் அதாவது வடகிழக்கு பகுதியில் சில நகரங்கள் மற்றும் கிராமங்களை தங்கள் கட்டுப்பாட்டில் போகோஹறாம் தீவிரவாதிகள் வைத்துள்ளனர். இது கமரூன் நாட்டுக்கு பெரும் இடையூறாக உள்ளது. எனவே அங்கு இராணுவமும், பொலிஸாரும் அவர்களுக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர்.

இதனால் ஆத்திரம் அடைந்த அவர்கள் நேற்று முன்தினம தங்கள் கட்டுப்பாட்டு பகுதி எல்லையில் உள்ள கமரூன் கிராமங்களுக்குள் புகுந்தனர். அங்கு வீடுகளுக்கு தீ வைத்தனர். அதில் 80 வீடுகள் எரிந்து சாம்பலாகின. பின்னர் அங்கிருந்து 80 பேரை கடத்தி சென்றுவிட்டனர். அவர்களில் 30 பேர் குழந்தைகள். 80 பேர் பெரியவர்கள். கடத்தப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள்.

கடத்தப்பட்டவர்களில் தப்பிக்க முயன்ற 4 பேரை போகோஹறாம் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர்.

இத்தகவலை கமரூன் தகவல் தொடர்பு அமைச்சர் இஸ்சா ஹிரோமா பகாரி உறுதி செய்துள்ளார். அதைத்தொடர்ந்து அப்பகுதியில் கமரூன் ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்களை பாதுகாப்புக்காக குவித்துள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றிக்காய்ச்சலால் 11 பேர் உயிரிழப்பு!

(புதுடில்லி)

ஆந்திராவில் பன்றிக் காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. புத்தாண்டு தொடக்கத்தில் இருந்து நேற்று முன்தினம் வரையிலான 2 வார காலத்தில் பன்றி காய்ச்சலுக்கு 11 பேர் பலியானார்கள்.

இவர்களில் 7 பேர் காந்தி அரசு வைத்தியசாலை யிலும், 4 பேர் தனியார்வைத்திய சாலை யிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழுந்துள்ளனர்.

மேலும், பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு 136 பேர் வைத்திய சாலையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் 8 பேர் ஐதராபாத் காந்தி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இது தவிர தனியார் வைத்தியசாலைகளிலும் பலர் சேர்க்கப்பட்டனர். தெலுங்கானா மாநிலத்தில் தான் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டோர் அதிக அளவில் உள்ளனர்.

தற்போது குளிர்காலம் என்பதால் நோய் தாக்கல் அதிகமாக இருப்பதாக கூறிய டாக்டர்கள் உணவுகளை சூடாக சாப்பிடுமாறு அறிவுறுத்தி உள்ளனர். (இ-5)




# மத்திய அமைச்சர் அருண் ஜேட்லி ஜெயலலிதாவுடன் முக்கிய சந்திப்பு

மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி நேற்று முன்தினம் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை அவரது போயஸ் தோட்ட இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் மாலை விமானம் மூலம் சென்னை வந்தார். அங்கிருந்து நேரடியாக போயஸ் தோட்டத்துக்கு சென்ற அவர், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பு 40 நிமிடங்கள் நடந்தன. இது, அரசியல் வட்டாரத்தில் முக்கிய நிகழ்வாக கருதப்படுகிறது.

சொத்து குவிப்பு வழக்கில் தண்டனை பெற்று, பின்னர் பிணையில் வெளிவந்த ஜெயலலிதா, இதுவரை எந்த முக்கிய பிரமுகரையும் சந்திக்கவில்லை. அரசியல் உள்ளிட்ட



எந்த பொது நிகழ்ச்சியிலும் பங்கேற்கவில்லை. அ.தி.மு.க. நிறுவனரும், முன்னாள் முதல்வருமான எம்.ஜி. ஆரின் பிறந்த நாள் மற்றும் நினைவு நாளில் இல்லத்தில் இருந்தபடியே புகைப்படத்துக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இந்த நிலையில் முதன் முறையாக ஜெயலலிதாவை பா.ஜ.க. மூத்த தலைவரும், நிதி அமைச்சருமான அருண ஜேட்லி போயஸ் தோட்ட த்துக்கு நேரில் சென்று சந்தித்துப் பேசியிருப்பது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

# ஒபாமா வருகையின்போது ஓவரா வாலாட்டக்கூடாது

## பாகிஸ்தானுக்கு கடிவாளம் போட்டது அமெரிக்கா

(புதுடில்லி)

**அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் இந்திய பயணத்தின் போது எல்லை தாண்டிய பயங்கரவாதத்தில் பாகிஸ்தான் ஈடுபடக் கூடாது என அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.**

எதிர்வரும் 26ஆம் திகதி டில்லியில் நடக்கவுள்ள சுதந்திர தின விழாவில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார். இதை முன்னிட்டு தலைநகர் டில்லியில் உச்சக்கட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சுமார் 1 இலட்சம் பொலிஸார் 7 அடுக்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் ஒபாமாவின் இந்திய பயணத்தின் போது பாகிஸ்தான் தரப்பிலிருந்து எல்லையில் எவ்வித தீவிரவாத தாக்குதலும் நடைபெறக்கூடாது என அமெரிக்கா எச்சரித்துள்ளது. எச்சரிக்கையையும் மீறி பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினால் மோசமான



பின்விளைவுகளை அந்நாடு சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் அமெரிக்கா எச்சரித்துள்ளது. அத்துடன் தீவிரவாதிகளை தீவிரமாக கண்காணிக்குமாறு ஆப்கானிஸதானிலுள்ள அமெரிக்க இராணுவத்திற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி இந்தியாவிற்கு வரும் போதெல்லாம் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் கட்டவிழ்த்துவிடுவது வழக்கமான ஒன்று என்பதால் இம்முறை பாகிஸ்தானுக்கு கடும் எச்சரிக்கையை அமெரிக்கா விடுத்துள்ளதாக குறிப்பிடத்தக்கது. (இ-5)


# "பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது"

## ஜெ.- ஜேட்லி சந்திப்பு குறித்து கருணாநிதி

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை, மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி சந்தித்தது குறித்து தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை பெற்றுள்ள ஜெயலலிதாவை அவருடைய வீட்டிற்கே சென்று மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி சந்தித்துப் பேசியிருக்கிறார். பெரியார் தான் அடிக்கடி "பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது" என்று கூறுவார்! இப்போது அந்தச் சொற்றொடர் தான் நினைவுக்கு வருகின்றது.

வருமான வரித் துறையினர் தொடர்ந்த வழக்கை 18 ஆண்டு காலமாக இழுத்தடித்துவிட்டு, மத்தியில் பா.ஜ.க. அரசு புதிதாக அமைந்த பிறகு, அதுவும் இந்த வருமான வரித் துறைக்கு, அருண் ஜேட்லி அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, அவரை டில்லியில் ஜெயலலிதா நேரில் சந்தித்த பிறகு தான் அபராதத் தொகையைக் கட்டி சமரசமாகி விடுவதாகவும், வழக்கினைத் திரும்பப் பெற வேண்டுமென்றும் கோரிக்கை வைக்கிறார் என்றால் நடந்த நிகழ்வுகளை இணைத்து நாட்டு மக்களுக்கு நியாயமான சந்தேகம் வருமா? வராதா?



அதுவும் ஏடுகளில் அருண் ஜேட்லி பிரதமரின் ஒப்புதலோடு தான் சென்றதாகவும் செய்தி வந்துள்ளது. பிரதமரும் இதற்கெல்லாம் உடந்தையோ என்ற சந்தேகம் எல்லோருக்கும் எழுந்துள்ளதே?

ஜெயலலிதாவின் வருமான வரித் துறை வழக்கினைத் திரும்பப் பெற்றது பற்றி நாட்டு மக்கள் மத்தியில் எழுந்த சந்தேகங்களே இன்னும் தீராமல் இருக்கிற போது, மத்திய அமைச்சர் தற்போது ஜெயலலிதாவின் வீட்டிற்குச் சென்று பேசியிருப்பது, நான் தொடக்கத்தில் குறிப்பிட்ட பெரியாரின் பொன்மொழியான "பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது" என்பதை மெய்ப்பிக்கும் வகையிலே அல்லவா இருக்கிறது என்று கூறியுள்ளார். (இ-5)

# டில்லியில் கடும் பனிப்பொழிவு 21 விமான சேவைகள் இரத்து

(சென்னை)

டில்லியில் நேற்று முன்தினம் காலை நிலவிய கடும் பனி மூட்டம் காரணமாக 21 விமான போக்குவரத்து சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதோடு 47 விமான சேவைகள் காலதாமதமாகியுள்ளன.

இது தொடர்பில் மேலும், தெரிய வருவதாவது,டில்லியில் தற்போது கடுமையான பனிப்பொழிவு மற்றும் குளிர்மையான காலநிலை நிலவுகின்றது. இதனால், விமான நிலைய பகுதிகளில் 50 மீற்றர் தூரத்திற்கு மட்டுமே காட்சிகள் தெரிகின்றன. பரிதாபாத், நொய்டா மற்றும் காசியாபாத் ஆகிய நகர்ப் புறப் பகுதிகளிலும் கடும் பனிமூட்டம் காணப்படுகிறது. நேற்று காலை 5.30 மணிக்கு 8 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளது. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், வட மாநிலங்களான பஞ்சாப், ஆரியானா, டில்லி, மேற்கு உத்தரப்பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் தொடர்ந்து கடும் பனிமூட்டம் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# குழு மோதலில் மூவர் உயிருடன் எரிப்பு

பீகார் மாநிலத்தில் உள்ள முசாபர்பூர் என்ற இடத்தில் இரு பிரிவினருக்கு இடையே ஏற்பட்ட மோதலில் 3 பேர் உயிரோடு எரித்துக்கொல்லப்பட்டனர் இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவுகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக 14 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.பாட்னாவில் இருந்து 55 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள முஸ்லிம் மதத்தவர்கள் அதிகம் வசிக்கும் ஆசிஸ்பூர் என்ற கிராமத்தில் முஸ்லிம் பெண் ஒருவரை அருகாமையில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த 19 வயது இந்து இளைஞர் காதலித்து வந்தார். இதனிடையே கடந்த சில தினங்களுக்கு முன் காதலர்கள் இருவரும் வீட்டை விட்டு ஓடிவிட்டனர்.

இந் நிலையில், நேற்று முன்தினம் அந்த இளைஞர் உடல் மட்டும் இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த இளைஞரின் கிராமத்தினர் , அந்த பெண்ணின் கிராமத்திற்குள் புகுந்து அங்குள்ள வீடுகள் மற்றும் வாகனங்களுக்கு தீ வைத்தனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற பலமணிநேரம் ஆகியும் அங்கு பாதுகாப்பு படையினர்,அதிகாரிகளோ யாரும் வரவில்லை. இதனால் கிராமத்தினர் பலர் நேற்று தப்பி ஓடிவிட்டனர்.

"அங்கு நிலைமை மிகவும் பதற்றமாக உள்ளது இருப்பினும் கட்டுப்பாட்டுக்குள்தான் உள்ளது" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் உயர் அதிகாரிகளும் பெருமளவில் பொலிஸ் படைகளும அங்கு குவிக்கப்பட்டுள்ளன. கலவரத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு 5 இலட்சம் இழப்பீடு வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த பொங்கல் தினத்தன்று வர்ணம் கிரியேவின்ஸ் வெளியீடான கவிஞர் கு.வீராவின் இரண்டாம் உயிர் கவிதை நூல், கண்ணடிக்கும் காலம்– நூல், இரண்டாம் உயிர் ஒலிக்கவிதை இறுவெட்டு ஆகிய முப்படைப்புக்களின் வெளியீட்டு விழா இணுவில் சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் ஒலிக்கவிதை இறுவெட்டு வெளியீடு யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் இடம்பெறுவதையும் பேராசிரியர் தி.வேல் நம்பி, ஓய்வுநிலை பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, கவிஞர் சோ.பத்மநாதன், திருமதி கோகிலா மகேந்திரன், கவிஞர் கு.வீரா உள்ளிட்டோர் உரையாற்றுவதை படங்களில் காணலாம்.



மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையமான கருவி அதன் பயனாளிகளுக்கு அண்மையில் வாழ்வாதார உதவிகளை வழங்கியது. இதில் 7 பேருக்கு கடனுதவிகளும் மற்றும் 6 பேருக்கு உபகரணங்களும் வழங்கப்பட்ட போது...

நிகழ்வின் நிழல்கள்




வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் தைப்பொங்கல் தினத்தன்று சாவகச்சேரி மறவன் புலோ பிரதேசத்தினை சேர்ந்த மாணவி ஒருவருக்கு கற்றல் நடவடிக்கையை ஊக்குவிக்கும் நோக்கோடு புதிய துவிச்சக்கர வண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. மேற்படி துவிச்சக்கரவண்டியை சங்க தலைமை காரியாலயத்தில் வைத்து சங்கத் தலைவரும் சட்டத்தரணியுமான க.சுகாஸ் அன்பளிப்பாக வழங்கினார்.

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் மாணவர்களின் கல்வித்தேவைக்கென இதுவரை 140 துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



சம்பத் வங்கியின் சுன்னாகக் கிளையின் பொங்கல் தின விழாவின் போது...



கோண்டாவில் ஞானவீர முன்பள்ளியின் வருடாந்த கலைவிழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது நல்லூர் பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த.மலர்மகள் பரிசில் வழங்குவதையும் முன்பள்ளி மாணவர்களின் காவடி நடனத்தையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகள் எதுவுமின்றி வாழ்கின்றோம் எமக்கு காணி வழங்க முன்வாருங்கள்

## துணுக்காய், மாந்தை கிழக்கு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுகளில் 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கும் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும் காணிகள் இன்றி இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவர்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் காணிகளில் வீடுகள் அமைத்து வாழ்ந்து வருவதுடன் அவர்களிடம் குத்தகை அடிப்படையில் காணிகளைப் பெற்று விவசாயம் செய்யும் நிலையில் வாழ்வதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

துணுக்காய்,மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் போரின் பின்னர் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில், துணுக்காயில் 3 ஆயிரத்து 555 குடும்பங்களும் மாந்தை கிழக்கில் 2 ஆயிரத்து 700 குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் பலருக்கு குடியிருப்பதற்கும் விவசாய நடவடிக்கை மேற்கொள்வதற்கும் சொந்தக் காணிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

மேற்படி இரு பிரதேச செயலக பிரிவிலும் 1958 ஆம் ஆண்டு படித்த வாலிபர் திட்டம் என்ற காணி வழங்கும் திட்டத்தின் ஊடாக வவுனிக்குளம் நீர்ப்பாசனக் குளத்தின் கீழும் பின்னர் 1970, 1980 ஆம் ஆண்டுகளில் சிறு குளங்களின் கீழ் குடியேற்றத் திட்டத்தின் மூலமும் மக்கள் குடியேற்றப்பட்டனர்.

நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரமான 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் தென்பகுதியிலிருந்தும் மலையகத்தில் இருந்தும் விரட்டப்பட்டபோது இப் பிரதேச செயலக பிரிவுகளில் தஞ்சம் அடைந்தனர்.

இவர்களில் மீளவும் திரும்பிச் சென்றவர்கள் போக, மீதியாக இருந்த மக்கள் தேராங்கண்டல், பொன்னகர், சிராட்டிகுளம், அம்பாள் குளம், அனிஞ்சியன் குளம் ஆகிய இடங்களில் காணிகள் வழங்கப்பட்டு குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட போர் நிலை காரணமாக காணிக்கச்சேரிகள் நடைபெறவில்லை.

இதனால் தந்தைவழிக் காணிகள் பிள்ளைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டமையால் குடியிருக்கும் காணிகளும், விவசாயக் காணிகளும் துண்டாடப்பட்டுள்ளன.

இதனையடுத்து பல குடும்பங்கள் பொருளாதார நிலையில் பின் தங்கியுள்ளதுடன் சொந்தக் காணி இல்லாது வாழ்ந்து வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் இவ் விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கையை துரிதமாக மேற்கொண்டு உதவவேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள இப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-15)

## குளவி கொட்டியதில் எழுவர் வைத்தியசாலையில்

வவுனியா, புதுக்குளம் மகாவித்தியாலயத்தில் குளவி கொட்டியதில் பாதிப்படைந்த 7 பேர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நேற்று காலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வவுனியா, புதுக்குளம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிக்கு பாண்ட் வாத்திய அணிவகுப்பு பயிற்சி இடம்பெற்றுள்ளது. பாண்ட் வாத்திய அதிர்வால் பாடசாலை மைதானத்தின் அருகில் உள்ள கட்டடத்தின் கூரையில் இருந்த குளவிகள் பறந்து வந்து ஆசிரியர்களையும் மாணவர்களையும் தாக்கியுள்ளன.

இதன் காரணமாக நான்கு ஆசிரியர்களும மூன்று மாணவர்களும் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்(அ-2)




# நெற் களஞ்சியசாலையை தூய்மைப்படுத்துங்கள்

வவுனியா பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு சொந்தமான நெற்களஞ்சியசாலை அமைந்துள்ள பகுதியை தூய்மைப்படுத்தி கட்டடத்தை பாதுகாக்க வேண்டுமென வவுனியா பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினர் க.அமிர்தலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொட்ர்பில் அவர் கூறுகையில்,

வவுனியா மாந்தை பகுதியில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக பல இலட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட வவுனியா பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு சொந்தமான நெற்களஞ்சியசாலைக்காக அமைக்கப்பட்ட 3 கட்டடத்தொகுதிகள் கவனிப்பாரற்ற நிலையில் பற்றைக்காடுகள் வளர்ந்த சூழலில் காணப்படுகின்றது.

பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு சொந்தமான இக் கட்டடத்தில் வருடாவருடம் அரசாங்க அதிபரின் நிதியுதவியினால் நெல் அளகப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டு நெல்லை விற்பனை செய்து எமது கடன்களை செலுத்தி வந்துள்ளோம்.

இவ்வாறான கட்டடம் தற்போது பற்றை சூழ்ந்து காடாக காணப்படுகின்றது. தற்போது நெல் அறுவடை இடம்பெறுவதனால் அப் பிரதேசத்தை துப்புரவு செய்து பெற்றோல் நிலையத்திற்கான வீதியையும் சீர் செய்து தரவேண்டும் என பொது முகாமையாளார் மற்றும் சங்கத்தின் தலைவரிடம் கேட்டு கொள்கின்றேன்.

இதேவேளை இக் களஞ்சியசாலையில் நெல் காயவிடும் தளம் அமைக்கப்பட்டுள்ளதுடன் அத்தளம் பயன்படுத்தப்படாத நிலையில் மாடுகள் தங்குமிடமாகவும் மாறியிருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இக் கட்டடத்தில் நெல் அரைக்கும் ஆலையையும் அமைத்து தரும் பட்சத்தில் விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்ட வவுனியா மக்களுக்கு மிகப்பயனுள்ளதாக அமையும் என தெரிவிக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-250)

# கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரைகளில்லை

## கோணாவில் மக்கள் நெருக்கடியில்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி, கோணாவில் கிராமத்தில் கால்நடைகள் வளர்ப்போர், அவற்றுக்கான மேய்ச்சல் தரவைகள் இல்லாமையால் பெரிதும் சிரமப்பட்டு வருகின்றனர்.

குறித்த கிராமத்தில் வசிக்கின்ற ஆயிரத்து 100 குடும்பங்கள் வசிக்கின்றன. இவர்களில் பெரும்பாலானவர்கள் கால்நடை வளர்ப்பை தங்கள் வாழ்வாதார தொழிலாகக் கொண்டுள்ளனர்.

இந்தக் கிராமத்தில் 600இற்கும் மேற்பட்ட கால்நடைகள் காணப்படுகின்றன. அக்கராயன் குளத்தின் கீழ் தற்போது காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதன் காரணமாக இக் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதில் கால்நடை வளர்ப்போர் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

கோணாவிலை சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்கள் அண்மைக் காலமாக துணுக்காய் அமதிபுரம் பகுதிக்கு தங்கள் கால்நடைகளை மேய்ச்சலுக்காக கொண்டு சென்றனர்.

எனினும் அமதிபுரம் காட்டுப்பகுதியில் சிறிய மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருவதால் அங்கு கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடவேண்டாம் என வனவளத் திணைக்களம் தடை விதித்துள்ளது.

இந்தப் பிரச்சினை தொடர்பில் அண்மையில் நடைபெற்ற கரைச்சி பிரதேச செயலக பிரதேச அபிவிருத்திக் கூட்டம், மாவட்ட அபிவிருத்திக் கூட்டம் என்பவற்றில் சுட்டிக்காட்டப்பட்ட போதும், தரவை நிலங்களை இனங்கண்டு கொடுப்பதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர். (அ-2)

# முழங்காவில் பிரதேசத்தில் இராணுவ சோதனை சாவடி

## மக்கள் மத்தியில் குழப்பம்

(மல்லாவி)

பூநகரியிலிந்து மன்னார் பயணிக்கும் பிரதான வீதியின் இரு இடங்களில் இராணுவத்தினர் வீதித்தடைகளை ஏற்படுத்தி பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளைத் தவிர்ந்த ஏனைய வாகனங்களைச் சோதனையிடுவதுடன் பதிவுகளை மேற்கொண்டு வருவதால் பொதுமக்கள் மத்தியில் அச்ச உணர்வு காணப்படுகின்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பூநகரியிலிருந்து மன்னார் செல்லும் பிரதான வீதியில் முழங்காவில் பகுதியிலிலுள்ள 54 ஆவது கிலோ மீற்றர் மைல் கல்பகுதியிலும் மற்றும் வெள்ளாங்குளம் சந்தியிலும் வீதித்தடைகளை ஏற்படுத்தி இராணுவத்தினர் சோதனை நடவடிக்கையிலும் வாகனப் பதிவுகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

வெள்ளாங்குளத்திலுள்ள வீதிச் சோதனை சாவடியில் மட்டும் பொலிஸார் ஒருவரும் இராணுவத்தினருடன் இணைந்து சோதனையிடும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

முழங்காவில் பகுதியிலுள்ள வீதித்தடைச் சோதனைச்சாவடியில் பொலிஸார் எவரும் பணியில் அமர்த்தப்படவில்லையென பொது மக்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

மிக அண்மைக்காலத்திலேயே இவ்வீதி சோதனைக் சாவடிகள் அமைக்கப்பட்டு சோதனையிடும் நடவடிக்கை இடம் பெறுவதால் ஏன் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என பொது மக்களாலும் பயணிகளா லும் கேள்வி எழுப்பப்படுகின்றது.

வன்னி யுத்தம் இடம்பெற்று ஐந்து வருடங்கள் கடந்துள்ள நிலையில் இராணுவ முகாம்களும், வீதிச் சோதனைச் சாவடிகளும் அகற்றப்படும் என புதிய அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், மக்களுக்கு இடையூறாக புதிய சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது பொதுமக்கள் மத்தியில் குழப்ப நிலையை தோற்றுவித்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (அ-2-15)

# நிர்மாணப்பணிகள் முடிவுற்றும் திறப்பாரின்றி சிறுவர் பூங்கா

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முக்கொம்பன் கிராமசேவையாளர் ஆளுகைக்குட்பட்ட முக்கொம்பன் சந்தியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா இதுவரை திறந்து வைக்கப்படவில்லையென அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அப்பகுதி கிராம அபிவிருத்தி சங்க உப-தலைவர் தெரிவிக்கையில்,

சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டு அனைத்து வேலைகளும் பூர்த்தி அடைந்து ஒரு வருடம் கடந்துள்ளது. அத்துடன் இப்பூங்காவினுள் சனசமூக நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

பூங்கா அமைக்கப்பட்ட வளாகம் முக்கொம்பன் கிராம மக்களின் உதவியுடன் மூன்று தடவைகள் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

தற்போது இவ் வளாகம் பற்றைகள் சூழ்ந்து காணப்படுவதுடன் சிறுவர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு உபகரணங்கள், ஊஞ்சல் என்பன துருப்பிடிக்க ஆரம்பித்துள்ளதாக பொது மக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இப்பூங்கா திறந்து வைத்தால் அப்பகுதி சிறுவர்கள் பெரும் நன்மை அடைவார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிக விரைவில் கவனமெடுத்து அமைக்கப்பட்டு சேவைகள் அனைத்தும் பூர்த்தியான நிலையில் உள்ள இப்பூங்காவை சிறார்களின் பயன்பாட்டிற்கு திறப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென முக்கொம்பன் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2-283)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சைக்காரன் புண்மாறுவதை விரும்ப மாட்டான். - ஓர் அறிஞர்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

# அடைக்கோழிக்கு காவோலை கட்டும் கலாசாரம்

சில அடைக்கோழிகள் தொடர்ந்தும் அடைகிடப்பதையே விரும்புகின்றன. எனினும் கோழி வளர்ப்பவர்கள் அதற்கு அனுமதி கொடுப்பதில்லை. எனவே, அடையை மாற்ற வேண்டும். இதற்கு வேறுபட்ட நடை முறைகள் உண்டு.

இந்த நடைமுறையில் ஒன்று அடைக்கோழியின் வாலில் காவோலைத்துண்டை கட்டி விடுவதாகும். காவோலை கட்டப்பட்ட அடைக்கோழி நடக்கத் தொடங்கும் போது ஓலையின் சத்தம் கேட்கும். தன்னை ஏதோவொன்று துரத்துவதாக நினைத்து அந்தக் கோழி ஓடத்தொடங்கும். ஓட ஓட ஓலைச் சத்தத்தின் சலசலப்பும் கூடிக் கொள்ளும்.

சாப்பிடுவதற்கும் தண்ணீர் குடிப்பதற்கும் கூட எழும்பப் பஞ்சிப்பட்ட அடைக்கோழி; இப்போது ஓடிக் களைத்துப்போக, வாலில் கட்டப்பட்ட காவோலை அகற்றப்படும்; கோழியின் அடை மாறி விடும்.

கோழியின் அடையை மாற்றுவதற்கான கிராமிய வைத்தியம் இது. கோழியின் அடையை மாற்றுவதற்கான இந்த முறை ஜீவகாருண்யத்திற்கு உகந்ததல்ல என்று வாதிடுவோரும் உளர். என்ன செய்வது? வேறு எந்த முறையைக் கையாண்டும் சரிவரவில்லை என்ற கட்டத்தில் இப்படியொரு முடிவை எடுத்தாகவேண்டியுள்ளது.

கோழியின் அடையை மாற்றுவதுதான் நோக்கமே அன்றி, கோழியைத் தொடர்ந்து ஓடச் செய்வது நோக்கமல்ல என்பதால் கோழியின் களைப்போடு ஓலையைக் கழற்றி விடவேண்டும். எனினும் சிலருக்கு கோழியை தொடர்ந்து ஓட வைப்பதே விருப்பமாகவுள்ளது. இந்த விருப்பத்தை இலங்கையின் அரசியலிலும் நிறையக் காண முடிகிறது.

இலங்கை அரசியல் என்று கூறும்போது சிங்கள இனத்தை மட்டும் நாம் கூறவில்லை. தமிழ், முஸ்லிம் இனங்களையும் உள்ளடக்கியதாகவே இலங்கை அரசியல் என்ற சொற்பதம் அமையும்.

அந்த வகையில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருக்கக்கூடிய சிலருக்கு கோழியின் அடை மாறுவதை விட, கோழியைத் தொடர்ந்து ஓட வைப்பதே நோக்கமாக இருக்கின்றது.

இத்தகையவர்களின் நோக்கம் கோழிக்கும் ஆபத்தாவதோடு கோழி வளர்ப்பவனுக்கும் நட்டமாக முடியும். எனவே யார் எதைக்கூறினாலும் முதலில் அவர்கள் தமது நோக்கத்தை தெளிவுபடுத்த வேண்டும்.

இப்போது நாட்டில் அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அரசியல் மாற்றத்தோடு நினைத்துப் பார்க்க முடியாத சம்பவங்கள் அரங்கத்திற்கு வருகின்றன.

இதன் பின்னணியில் சர்வதேசத்தில் வல்லமை பொருந்திய நாட்டின் காய்நகர்த்தல் உள்ளதென்பதை முதலில் நாம் உணர்ந்தாக வேண்டும். எனவே அந்த நாட்டின் காய்நகர்த்தல் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட செய்ம்மதி, வெற்றிகரமாக இலக்கை அடைந்தது போல அமையும்.

புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தான் யாரையும் பழிவாங்க மாட்டேன் என்று தெளிவுபடக் கூறியுள்ளார். எனினும் சட்டம் எவரையும் விட்டு விடாது; அதைத் தடுக்க ஜனாதிபதி மைத்திரியாலும் முடியாது என்ற அடிப்படையிலேயே நிகழ்ச்சி நிரல் நடந்து கொண்டிருக்கிறது.

ஆகையால், ஓர் ஒழுங்கு முறையில் நகரும் நிகழ்ச்சி நிரலை யாரும் குழப்பி விடாமல் பாதுகாப்பது பொது மக்களின் தலையாய கடமை. வன்னியில் நடந்த போர்க் குற்றச்சாட்டுகளுக்கு முன்னதாக அதனோடு சம்பந்தப்பட்டவர்கள் சிறைகளில் அடைக்கப்பட வேண்டும். அதன்பின்னரே போர்க்குற்ற விசாரணை. இதுவே நிகழ்ச்சி ஒழுங்கு.

ஆக, தயவுசெய்து இந்த ஒழுங்கமைப்பபை எவரும் குழப்பி விடாதீர்கள். அவரை மாற்று; இவரை மாற்று என்று நாம் கேட்கிறபோது நாங்களும் உதவத்தவர்கள் என்றொரு உணர்வு வல்லவனிடம் ஏற்பட்டுவிடும். அத்தகையதொரு உணர்வு ஏற்பட்டால் எல்லாம் போய் விடும்.

ஆகையால்கோழியின் அடை மாற்றப்பட வேண்டும்என்பதே நம் நோக்கம். எனவே நோக்கம் நிறைவேறுவதற்கு நாங்கள் யாபேரும் நிதானமாக நடப்பது அவசியம்.

# மகிந்தவின் யாழ்.வருகை அழுத்தத்தால் உடைந்த கட்டிடங்களிற்கும் வர்ணம் பூசப்பட்டது

## வடக்கு கல்வியமைச்சர் தகவல்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவின் யாழ்.வருகையின் போது அரசியல் அழுத்தம் காரணமாக உடைந்த கட்டிடங்களுக்கும் வர்ணம் பூசப்பட்டன என வடக்கு மாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் கடந்த வருட இறுதி அமர்வில் மகிந்தவின் வருகையின் போது வடக்கு மாகாண கல்வியமைச்சு எந்த நிதியினை செலவு செய்தது ஏன் செலவு செய்தது என உறுப்பினர் சர்வேஸ்வரன் கேள்வியெழுப்பியிருந்தார்.

இக்கேள்விக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் கல்வியமைச்சர் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல் அழுத்தம் காரணமாக மகிந்தவின் வருகையின் போது உடைந்த கட்டடங்களுக்கும் வர்ணம் பூசப்பட்டன.

இவ்வாறு யாழ்.இந்து, நெல்லியடி இந்து, கிளிநொச்சி இந்துக் கல்லூரிகளுக்கு பணம் செலவளிக்கப்பட்டன.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து 9.49 மில்லியன் ரூபாயும், மூலதன நிதியிலிருந்து 8.79 மில்லியன் ரூபாயும், ஜனாதிபதியின் யாழ்.விஜயத்துக்கு செலவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிதி அமைச்சரவை அனுமதியுடன் நிதி ஆணைக்குழுவிடம் பெறப்பட்டு செலவு செய்யப்பட்டது.

இந்நிதியை நாம் அனுப்பாவிட்டால் வடக்கு மாகாணத்தின் முன்னைய ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நாம் ஒதுக்கிய நிதியிலும் பார்க்க கூடியளவு தொகையை நேரடியாக அனுப்பியிருக்க வாய்ப்பு உண்டு என்பதனால்தான் நாமே இந்நிதியை அனுப்பியிருந்தோம்.

பாடசாலைகளின் முன்னேற்றங்களை கருத்தில் கொண்டு இந்நிதியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார் அமைச்சர்.

தேசிய பாடசாலைகளுக்கு மாகாண சபை நிதியொதுக்குவதனை ஏற்றுக் கொள்ள முடியாது. மக்களை குசிப்படுத்துவதற்காக உடைந்த கட்டிடங்களுக்கு வர்ணம் பூசுதல் பணத்தை வீண் விரயம் செய்வதற்கு ஒப்பானதாகும்.

மக்கள்பிரதிநிதிகள் உண்மைநிலையை அறிய வேண்டுமாயின் அவ்வவ் விடயங்கள் அப்படியே இருக்க வேண்டும்.

எமக்கு அதிகாரங்கள் போதாத நிலையில் அவற்றை கேட்டுப் பெறும் நிலையிலுள்ளோம். அகையால் அவர்கள் சொல்வதற்கு எல்லாம் நாம் தலையாட்டிக் கொண்டிருக்க முடியாது என உறுப்பினர் சர்வேஸ்வரன் தெரிவித்தார். (செ-4)

# பதவி இன்றியும் சேவை - சரத்

நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களுக்கு சேவையாற்றுவேன் என முன்னாள் இராணுவத் தள்பதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் தாக்குதலுக்கு இலக்கான படைவீரர் ஒருவரின் நலன விசாரிக்க நேற்று சென்றிருந்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2012-ம் ஆண்டு நான் சிறையிலிருந்து விடுதலையான போது 2015ம் ஆண்டளவில் தெற்கு பயங்கரவாதியிடமிருந்து நாட்டை மீட்டு எடுப்பதாக கூறியிருந்தோம். நாம் அதனை நிறைவேற்றியுள்ளோம்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் நான் மக்களுக்காக சேவையாற்றுவேன் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (செ-11)

# வடக்கின் 38 கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது

வடமாகாணத்தை சேர்ந்த 38 கலைஞர்களுக்கு 2014ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியம் வழங்கப்பட்டது. வடமாகாண கல்வி, கலாசார, இளைஞர் விவகார பேரவையின் ஏற்பாட்டிலான கலை, கலாசார நிகழ்வும் கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வும் கைதடியில் அமைந்துள்ள வடமாகாண சபை கட்டிடத் .தொகுதியில் நேற்று காலை இடம்பெற்றது.

வடமாகாண கல்வி, கலாசார, இளைஞர் விவகார அமைச்சால் முன்வைக்கப்பட்டு, வடமாகாண கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 38 கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

மாதாந்தம் 5ஆயிரம் ரூபாய் வழங்கும் இந்த ஓய்வூதியத்திட்டத்தில் 2014 ஆம் ஆண்டுக்கான 60 ஆயிரம் ரூபாய் மற்றும் இந்தாண்டு ஜனவரி மாதத் தொகை என்பன சேர்த்து ஒவ்வொரு கலைஞருக்கும் 65 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

தைப்பொங்கல் தினத்தை கொண்டாடும் வகையில் வடமாகாண சபையில் இந்த கலாசார நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டு நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

# கால்கோள் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தோப்பு அருள்நந்தி வித்தியாலயத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான கால்கோள்விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை முதல்வர் மு.ராஜவரோதயம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் போ.வரதராஜமூர்த்தி கலந்துகொள்ளவுள்ளார். (இ-5)

# 100 சாராயப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டன

100சாராயப் போத்தல்களை ஆட்டோ ஒன்றில் எடுத்துச்சென்ற போது பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் அவை கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 7 மணியளவில் பருத்தித்துறையிலிருந்து நாகர்கோவில் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்ட 750 மில்லி லீற்றர் கொள்ளளவு கொண்ட 100 போத்தல்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. (இ

# தை அமாவாசை தினம் திருக்கேதீஸ்வரத்தில்

(மன்னார்)

யாழ்ப்பாணம் அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கத்தின் ஏற்பாட்டில் தை அமாவாசை தினம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 6மணிக்கு திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறுமென இச்சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.

அன்றையதினம் திருக்கேதீஸ்வர நாதனுக்கு அபிஷேகம் இடம் பெற்று, அதன் பின்னர் விஷேட பூசையும் வசந்த மண்ட பூசையும் நடைபெறும்.

அதனைத்தொடர்ந்து எம்பெருமான் கௌரி அம்பாள் சகிதம் பாலாவி தீர்த்தக் கரையில் தீர்த்தம் ஆடுவார்.

இந்நிகழ்வில் அடியார் அனைவரையும் கலந்து கொண்டு திருக்கேதீஸ்வரநாதனின் அருளைப் பெறுமாறு கேட்கப்படுகின்றனர். (அ-2)

# கனகசபாபதி-நாகேஸ்வரனின் 6 நூல்கள் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சப்பிரமுவ பல்கலைக்கழக மொழித்துறையின் முதுநிலை விரிவுரையாளரும் 2014இல் அரச சாகித்திய மண்டல இலக்கிய விருது பெற்ற தமிழியலாய்வாளரும் கலாபூசணம் அரச விருது பெற்றவருமான சித்தாந்த பண்டிதர் கலாநிதி க.நாகேஸ்வரன் எழுதிய ஆறு நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15.02.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி முதல் கொழும்புத் தமிழ்சங்கத்தில் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்ச்சி பேராசிரியர் சி.தில்லைநாதன் தலைமையில் நடைபெறும். புத்தக பூங்கா நிறுவுனர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் முன்னிலை வகிப்பார். கௌரவ விருந்தினராக கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் ரகுபதி பாலஸ்ரீதரன், சிறப்பு விருந்தினர்களாக திருப்பணித்தவமணி எஸ்.தியாகராசா, ப.க.பரமலிங்கம், தொழிலதிபர் பம்பேமணியம் தம்பதியர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். பேராசிரியர் சோ. சந்திரசேகரன் வாழ்த்துரை வழங்க, கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம், திருமதி. பவானி முகுந்தன், டாக்டர். ஜின்னாஹ் ஷரிபுத்தீன் ஆகியோர் விமர்சனவுரை ஆற்ற வுள்ளனர். (இ

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## முன்னேறு மேலே!

❖ உழைக்கத் தொடங்குங்கள். உலகில் தோன்றியதன் அறிகுறியாக ஏதேனும் நல்ல அடையாளத்தை நாம் விட்டுச் சென்றாக வேண்டும்.



❖ தைரியம், விடாமுயற்சி கொண்டிருங்கள். துணிவுடன் செயலாற்றினால் வெற்றி உறுதி. எதற்காகவும் எள் அளவும் விட்டுக் கொடுத்தல் கூடாது.

❖ வஞ்சனையால் எதையும் செய்திட முடியாது. நேர்மை, உண்மை, ஆர்வமும் படைத்தவனே செயலாற்றும் சக்தி படைத்தவன். ஆண்மையும், அன்பும் கொண்டு பணியாற்றுங்கள்.

❖ பலமற்ற மூளையை முதலில் பலப்படுத்துங்கள். பலமுடைய மனிதனை ஞானம் பின்தொடர்ந்து வரும்.

❖ உள்ளுக்குள் இருக்கும் தெய்வத்தன்மையை வெளியே புலப்படுத்துங்கள். அதைச் சுற்றி ஒவ்வொன்றும் இசைவாக ஒழுங்குபடத் தொடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவிண்டில் கலைமதி வி.கழகத்தின் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி





## வதிரி டயமன்ஸ் வெற்றி

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்திய ஏழுபேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் வடமராட்சியின் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆரம்பத்திலிருந்தே வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் அதிரடி காட்டியது.

முதல் பாதியில் பீமாவின் உதவியோடு அதிரடியாக அடுத்தடுத்து 2 கோல்களைப் போட்டது..

பதிலுக்கு உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் கோல் போட முயற்சித்தும் கோல்களைப் பெற முடியவில்லை.

இரண்டாவது பாதியில் மீண்டும் எழுச்சி கொண்ட வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் பீமாவன் உதவியுடன் மேலும் இரண்டு கோல்களைப் போட பதிலுக்கு உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாடடுக் கழகம் கோலொன்றைப் போட்டது.

இதன் மூலம் 4-1 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகி 8 அடி வெற்றிக் கேடயத்தை கைப்பற்றி மீண்டும் வடமராட்சியின் வைரங்களாகியது.

இப் போட்டியில் அதிரடியாக விளையாடி நான்கு கோல்களையும் போட்ட ம.பிரேம்குமார்(பீமா) சிறந்த ஆட்டநாயகன் கேடயத்தை தட்டிக்கொண்டார். (க-23)

# தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு

## வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்



தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்திய பொங்கல் விழாவில் தமிழர் நம் வீர பாரம்பரியத்தை பறை சாற்றும் விளையாட்டுப்போட்டிகள் நடத்தபட்டன.

இவற்றில் தாச்சி போட்டிகளும் மரதன் ஓட்டப்போட்டிகளும் ஏற்கனவே நிறைவடைந்த நிலையில் தைப்பொங்கல் தினத்தன்று பட்டம் ஏற்றல் போட்டிகளும் ஏனைய பாரம்பரிய போட்டிகளும் இடம்பெற்றன.

பாரம்பரிய விளையாட்டுப்போட்டிகள் வாலி பத்திடலில் கோலாகலமாக நடைபெற்றன.

இதில் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் என அனைவருக்குமான போட்டிகள் நடத்தப்பட்டன.

அந்தவகையில் ஆண்களுக்கான சறுக்குமரம் ஏறும் போட்டி, தயிர் முட்டி உடைக்கும் போட்டி, தலையணை சண்டை, கயிறிழுத்தல் என் பனவும், பெண்களுக்கான சங்கீதக் கதிரை, கிடுகு பின்னுதல் என்பன வும், சிறுவர்களுக்கான யானைக்கு கண் வைத்தல், இலக்கு நோக்கி பந்து எறிதல், பலூன் உடைத்தல் என்பனவும் சங்க உறுப்பினர் களுக்கான சங்கீத கதிரை என் பனவும் அதிக போட்டியாளரகளுடன் விமர்சையாக இடம்பெற்றது. (க-23)

விளையாட்டுச் செய்திகள்



## டென்னிஸ் தரவரிசை சானியா மிர்சா முன்னேற்றம்

இந்திய முன்னணி டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா இரு தினங்களுக்கு முன்பு சிட்னி சர்வதேச போட்டியில் அமெரிக்காவின் பெதானி மாடக்குடன் இணைந்து சம்பியன் பட்டத்தை வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் இரட்டையர் தரவரிசையில் சானியா மிர்சா தற்போது 5 ஆவது இடத்திற்கு முன்னேறி இருக்கிறார்.

இதன்மூலம் முன்னைய தனது சிறந்த தரநிலையையும் அவர் சமன் செய்துள்ளார். ஏற்கனவே கடந்த ஆண்டு ஜுலை மாதமும் அவர் 5 ஆவது இடத்தில் இருந்தார்.

இது வியப்புக்குரிய சாதனை. காயத்தில் சிக்காமல் தொடர்ந்து விளையாடும் பட்சத்தில் வருகிற மாதங்களில் இன்னும் ஏற்றம் காண முடியும் என்று சானியா குறிப்பிட்டார்.

அவுஸ்திரேலியா ஓபனில் சானியா மிர்சா சீனத்தைபே வீராங்கனை சு.வெய் ஹுய்சையுடன் இணைந்து களம் இறங்க இருக்கிறார். (க)

## மரதனோட்டப் போட்டிக்கு விண்ணப்பிக்குக

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 125ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஏற்பாட்டில் மாபெரும் மரதனோட்டப் போட்டியொன்று இடம்பெறவுள்ளது.

இம் மாபெரும் மரதனோட்டப் போட்டி ஜனவரி 31 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் இருபாலாரும் பங்குபற்ற முடியும் என்பதுடன் பங்குபற்ற விரும்புபவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, பழைய மாணவர் சங்க அலுவலகம், யாழப்பாணம் என்னும் முகவரியில் தொடர்பு கொண்டு விண்ணப் பப்படிவங்களைப் பெற்று 25.01.2015 இற்கு முன்னர் பங்குபற்றுவதை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு ஏற்பாட டாளர்கள் கேட்டுள்ளனர்.

வெற்றி பெறும் போட்டியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதோடு. போட்டித் தூரத்தை குறித்த நேரத்திற்குள் ஓடி முடிக்கும் போட்டியாளர்கள், தூரத்தை ஓடி முடிக்கும் போட்டியாளர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-23)

# கொம்மாந்தறை வி.கழகத்தின் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## கொக்குவில் காமாட்சி சம்பியன்




கொம்மாந்தறை விளையாட்டுக் கழகம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளை நடத்தியது. இதில் 8 ஓவரகள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் காமாட்சி விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

இப் போட்டி மின்னொளியில் கொம்மாந்தறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகமும் கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழகமும் மோதியது.

முதலில் துடுப்பாடிய குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகம் சகல விக்கெட்டுகளையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது.

இதல் தேசிகன் 23 ஓட்டங்களையும் செல்ரன் 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.பந்துவீச்சில் கொக்குவில் காமாட்சி விளை யாட்டுக் கழகம் சார்பில் நிக்சன் 3 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் சிந்து 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

71 ஓட்டங்கள் என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய காமாட்சி துடுப்பாட்டம் ஜெயரூபனின் அதிரடி கைகொடுக்க 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் ஜெயரூபன் 27 ஓட்டங்களையும் சிந்து 22 ஓட்டங்களையும பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகம் சார்பில் உதயா மற்றும் அஜன் தலா 2 விக்கெட்டு களைக் கைப்பற்றினர். இதன் மூலம் கொக்குவில்காமாட்சி விளையாட்டுக் கழகம் 2 வக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று கிண்ணத்தினை சுவீகரித்தது.

போட்டியின் ஆட்டநாயகனாகவும் போட்டித் தொடரின் நாயகனாகவும் கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழகத்தின் சிந்து தெரிவானார்.(க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - நியூசிலாந்து இன்று பலப்பரீட்சை



இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 4ஆவது ஒருநாள் போட்டி இன்று ஆரம்பமாகிறது.

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அங்கு 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்குபற்றுகிறது.

இதுவரை நிறைவடைந்துள்ள 3 போட்டிகளின் நிறைவில் தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.

இந்நிலையில் 4ஆவது ஒருநாள் போட்டி இன்று நியூசிலாந்தின் நெல்சனில் இலங்கை நேரப்படி அதிகாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

**அணிவிபரம்:**

**இலங்கை:**

அஞ்சலோ மத்யூஸ் (அணித் தலைவர்), டில்சான், ஹேரத், கருணாரட்ண, லக்மல், ஜீவன் மெண்டிஸ், பிரசாத், சேனநாயக்க, சண்டிமல், சமிந்த எரங்க, மஹேல ஜெயவர்த்தன, குலசேகர, மாலிங்க, திஸார பெரேரா, சங்கக்கார, லஹிரு திரிமன்னே.

**நியூசிலாந்து:**

பிரெண்டன் மக்கலம் (அணித் தலைவர்), போல்ட், கப்ரில், மக்லேனகேன், மில்ஸ், றோஞ்சி, றெய்லர், அண்டர்சன், எலியேட், லதம், நேதன் மக்கலம், மில்ன், சௌதி, வெட்டோரி. (க)

# இந்தியா - இங்கிலாந்து இன்று மோதல்

இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய 3 நாடுகள் பங்கேற்கும் மும்முனை கிரிக்கெட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது.

ஆரம்ப ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தையும், 2ஆவது ஆட்டத்தில் இந்திய அணியை 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்திலும் தோற் கடித்தது.

இந்தத் தொடரின் 3ஆவது லீக் ஆட்டம் இன்று நடக்கிறது. இதில் இந்திய - இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன.

இரு அணிகளும் தொடக்க ஆட்டத்தில் தோல்வியடைந்ததினால் முதல் வெற்றிக்காக போராடும். காலை 8.50 மணிக்கு போட்டி தொடங்குகிறது. (க)

## கிழக்கு ஆட்சி...

இறுதியாக நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இரு தரப்பும் இணக்கப்பாடு இன்றி தமது பேச்சுவார்த்தை முடிவுக்கு கொண்டு வந்துள்ளன.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் தமது கட்சிக்குமிடையிலான பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட தோல்வி காரணமாக இன்று உத்தேசிக்கப்பட்டிருந்த ஆட்சி மாற்றத்திற்கு வாய்ப்பு இல்லை என்கின்றார் எதிர்க்கட்சி தலைவர் சி. தண்டாயுதபாணி.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணக்கப்பாடுக்கு வராமைக்கான காரணம் என்ன என்று தெரியவில்லை.

ஆட்சி மாற்றம் தொடர்பாக வேறு யுக்திகள் பற்றி அவர்கள் சிந்திக்கின்றார்களோ என்பதும் தெரியவில்லை என்றும் தெரிவித்துள்ள அவர், இன்று நடைபெறவுள்ள சபை அமர்வின் பின்னர் அடுத்த கட்டம் குறித்து தீர்மானம் எடுப்போம் என்றும் குறிப்பிட்டார்.

முஸ்லிம் முதலமைச்சர் என்பது முஸ்லிம்களின் அபிலாஷையாக இருப்பதால்தான் இந்த விடயத்தில் விட்டுக் கொடுக்க முடியாத நிலை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்த மாகாணசபை உறுப்பினர் மொகமட் ரம்ழான் அன்வர் கூறுகின்றார்.

2012-ம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலின் பின்பு ஆட்சி அமைப்பதற்கு தமிழத் தேசிய கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவை பெற முதலமைச்சர் பதவியை அக்கட்சிக்கு விட்டுக் கொடுக்க தயார் என்று அறிவித்திருந்தது.

இதனை சுட்டிக்காட்டும் அவர் தற்போது தமிழத் தேசியக் கூட்டமைப்பு முதலமைச்சர் பதவியை விட்டுக் கொடுக்க மறுப்பதற்கான காரணம் தெரியவில்லை என்றும் கூறுகின்றார்.

2012-ல் கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்பு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைக்க சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கியிருந்தது.

அந்த ஆதரவை ஜனாதிபதி தேர்தலின் போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விலக்கிக் கொண்டாலும் தற்போதைய நிலையில் தற்காலிகமாக தற்போதுள்ள ஆட்சிக்கு ஆதரவு வழங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக எதிர்க்கட்சிகள் கருதுகின்றன.

இதற்கிடையில் கிழக்கு மாகாண சபையின் தற்போதைய நெருக்கடி நிலை குறித்து முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளருக்கு நேற்று திங்கட்கிழமை அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

2012-ம் ஆண்டு மாகாண ஆட்சி அமைக்கும் போது இரு கட்சிக்குமிடையில் முதலமைச்சர் பதவி முதல் இரண்டரை வருடங்கள் ஐ. ம. சு . முன்னணிக்கும் அடுத்த இரண்டரை வருடங்கள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் என இணக்கம் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அந்த அடிப்படையில் அவரது பதவிக் காலம் இன்னமும் மூன்று மாதங்களில் முடிவடையவிருக்கின்றது.

தனது பதவிக் காலம் முடிவடையும் போது அதனை விட்டுக் கொடுக்க தான் தயார் என்றும் இது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச ஏற்பாடுகளை செய்து தருமாறு அவர் கேட்டுள்ளதாக முதலமைச்சரின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையொன்று கூறுகின்றது. (செ-11)

## இந்தியா ஆர்வம்...

புதுடில்லிக்கு மூன்று நாள் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நேற்று திங்கட்கிழமை மதியம் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

புதுடில்லியில் உள்ள இந்தியப் பிரதமரின் ரேஸ்கோஸ் வீதி இல்லத்தில் நேற்று பிற்பகல் 12.50 மணியளவில் இந்தச் சந்திப்பு ஆரம்பமாகியது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜின் அழைப்பை ஏற்று புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் அவரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இந்நிலையில், இருதரப்பு உறவுகளை மீண்டும் வலுப்படுத்துவது தொடர்பில் நேற்றைய சந்திப்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, மீனவர் விவகாரம், புதிய ஆட்சி மாற்றம் மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புதுடில்லிக்கான விஜயம் என்பவை தொடர்பிலும் முக்கியமாக ஆராயப்பட்டதாக கூறப்படுகின்றது.

இதேவேளை இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியை இலங்கைக்கு வருமாறும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அழைப்பு விடுத்துள்ளார் என தெரியவருகிறது.

புதுடில்லியில் இருந்து நேற்று மாலை கொழும்பு திரும்பிய மங்கள சமரவீர, தன்னுடன் வெளிவிவகார அமைச்சின் எந்த அதிகாரியையும் அழைத்துச் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற ஒருவார காலத்திற்குள், அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர புதுடில்லிக்கு மேற்கொண்டுள்ள பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

.முன்னைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் சீனாவுடனான நெருங்கிய உறவுகள் தொடர்பில் புதுடில்லி கவலை கொண்டிருந்த நிலையில், மங்கள சமரவீரவின் பயணம் இருநாட்டுக்கும் இடையிலான நல்லுறவை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (செ-11)

## வட மாகாணத்தின்...

தற்போது வடமாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள பத்திநாதன், கடந்த 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுமார் 9 மாதங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிவந்த நிலையில், 2011.11.09 அன்று உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் மொனறாகலை மாவட்டத்தின் அரசாங்க அதிபராக பணி இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு இவருக்கு பணி இடமாற்றம் வழங்கப்பட்டபொழுது இந்த இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வினோநோதராதலிங்கம் ஆகியோர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராசபக்ஷவிற்கு அவசர கடிதம் அனுப்பியிருந்தனர்.ஆனாலும் எந்தப் பயனும் ஏற்பட்டிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது

வடமாகாணத்திற்கான புதிய ஆளுநர் நியமிக்கப்பட்டதை அடுத்து பிரதம செயலாளரும் புதிதாக நியமிக்கப்பட்டதால் வடமாகாண சபையின் நிர்வாக செயற்பாடுகளில் முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதம செயலாளராக திருமதி விஜயலட்சுமி றமேஸ் கடமையாற்றிய காலங்களில் வடமாகாண சபையின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு தடையாகவும், தன்னிச்சையாக சில முடிவுகளை அவர் எடுப்பதாலும் பல பிரச்சினைகளும், தடைகளும் இருந்துவருவதாக வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும் ஏனைய உறுப்பினர்களும் சுட்டிக் காட்டி வந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்டு தற்போது புதியதாக தெரிவு செய்யப்பட்டு ஆட்சி அமைக்கப்பட்டுள்ள மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசாங்கம் முல்லைத் தீவு, மொனாறாகலை ஆகிய மாவட்டங்களில் அரசாங்க அதிபராக இருந்து ஓய்வு பெற்ற சி. பத்திநாதனை வடமாகாண பிரதம செயலாளராக நியமித்துள்ளது. (செ-4)

## புதிய அரசாங்க...

வுக்கான வெளிவிவகார உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் கருத்து வெளியிட்ட போதே, இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் நிஷா தேசாய் பிஸ்வால் மேலும் குறிப்பிடுகையில், இலங்கைக்கான புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற ஆர்வமாகவுள்ளோம்.

புதிய அரசாங்கத்திடம் இருந்து மக்கள் எதனை எதிர்பார்க்கிறார்களோ, அதனையே நாங்களும் எதிர்பார்க்கின்றோம். இலங்கை மக்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை புதிய அரசு நிறைவேற்றுவதற்கு நாங்கள் ஆதரவளிக்க விரும்புகின்றோம். புதிய அரசாங்கம் ஆரம்ப நாட்களில் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து நாங்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளோம்.

இலங்கையில் ஜனநாயகம் தொடர்பாக வழங்கப்பட்ட உறுதியான தீர்ப்பை நாங்கள் வரவேற்கிறோம். ஆட்சி மாற்றம் அமைதியான முறையில் இடம்பெற்றுள்ளது. தனது தேர்தல் பரப்புரைகளின் போது வழங்கிய பல வாக்குறுதிகளை இலங்கையின் புதிய அரசாங்கம் நிறைவேற்றத் தொடங்கியுள்ளது.

புதிய அரசாங்கத்துடன் நாங்கள் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளோம் என அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான வெளிவிவகார உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## ராஜபக்ஷவின...

இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், பல நாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்பது போல மகிந்த ராஜபக்ச என்ற திருட்டு கும்பல் இன்று அகப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு லஞ்சம் கொடுக்க கொண்டு வந்த கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான அன்பளிப்பு பொருட்கள் இன்று நாட்டின் பல பாகங்களிலும் கைப்பற்றப்படுகின்றன.

சொகுசு கார்கள், விமானங்கள் கைப்பற்றப்படுகின்றன இவை அனைத்தும் மக்களிடம் மகிந்த குடும்பம் கொள்ளையடித்த பணம்.

மகிந்த தமது தேவைகளுக்காக ஆயிரத்து எண்ணூறு வாகனங்களை பாவித்துள்ளார்.

நூற்று இருபது கோடி மக்கள் வாழும் சன ஜனாதிபதி கூட இவ்வளவு வாகனங்களை பாவித்திருக்கமாட்டார்.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தா கடந்த ஒன்பதாம் திகதி எழுநூறு கோடி ரூபாய் பணத்தை இலங்கை வங்கி தபர பேன் கிளையில் இருந்து மீள எடுத்துள்ளார்.

மக்கள் பணத்தை தமது வீட்டு பணத்தை போல இவர்கள் கையாண்டுள்ளனர்.

இது தவிர அலரிமாளிகையில் கோடிக்கணக்கான பணத்தை கைவிட்டு சென்றுள்ளனர். அதில் 10,20,50,100 நோட்டுகள் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

அலரிமாளிகையில் விட்டு செல்லப்பட்டுள்ள பணம் தொடர்பாக இன்று பலத்த சந்தேகங்கள் கிளம்பியுள்ளன .

இது தவிர ஜனாதிபதியின் புதல்வர்கள் பல பெண்களை சீரழித்துள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

சர்வதேச பாடசாலையில் கல்வி கற்கும் தமிழ் மாணவிகள் இதில் அடங்குவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

மகிந்த குடும்பம் மக்களிடம் கொள்ளையடித்த பணம் தொடர்பாக சரியான விசாரணைகள் நடத்தப்படவேண்டும்

இது தொடர்பாக நாம் எமது கட்சி தலைமைக்கு அழுத்தம் கொடுத்துள்ளோம்.

ராஜபக்ஷ கும்பலுக்கு சட்டத்தின் மூலம் நாம் கொடுக்கும் தண்டனை இலங்கை அரசியல்வாதிகளுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும் என அவர் குறிப்பிட்டார். (செ-11)

## மகிந்தவின்...

இதனையடுத்து தங்காலை மற்றும் கொழும்பு நீதிமன்றங்களின் மூலம் கார்ல்டன் மாளிகையில் சோதனையிடுவதற்கான உத்தரவைப் பொலிசார் பெற்றுக் கொண்டிருந்தனர்.

எனினும் குறித்த சோதனை நடவடிக்கையின் போது எதுவித வாகனங்களும் கைப்பற்றப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒதுக்கப்பட்ட...

துக்கு மாற்றுவது தொடர்பான விவாதம் சபையில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துக்கூறுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கூறினார்.

ஆளுநர் நிதியத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் பெருமளவான வட்டியை ஆளுநர் பெற்று வந்ததாக எனக்கு தகவல் கிடைத்துள்ளது. இதனால் தனிப்பட்ட ரீதியில் ஆளுநருக்கு நிதி ஒதுக்கீடு செய்ய தேவையில்லை.

வடமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் ஒப்பிடாமல், வடமாகாணத்துக்கான தேவைகள் என்ன, நிதி எவ்வளவு தேவை என்பது தொடர்பில் முடிவெடுத்து செயற்பட வேண்டும் என்றார்.

வடமாகாண ஆளுநரின் இரத்மலானையிலுள்ள விருந்தினர் விடுதியை வட மாகாண சபை கையகப்படுத்தவேண்டும் அல்லது அங்கு வடமாகாண சபை உறுப்பினர்கள் சென்று தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யுமாறு வடமாகாண சபை ஆளுங்கட்சி உறுப்பினர் கந்தையா சர்வேஸ்வரன் குறிப்பிட்டார்.

தான் ஒருமுறை கொழும்புக்கு சென்றபோது, அங்கு தங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாகவும், ஆளுநரின் அனுமதி பெற்றே தங்க முடியும் என அங்குள்ளவர்கள் கூறியதாக அதன்பின்னர் தான் இராமகிருஷ்ணன் மிஷனில் தங்கியதாக சீ.வீ.கே.சிவஞானம் குறிப்பிட்டார். பழைய ஆளுநர் செய்த முறைகேடுகள் மற்றும் ஊழல் தொடர்பில் ஆராய வேண்டும் என ஆளுங்கட்சி உறுப்பினர் ஆயுப் அஸ்வின் குறிப்பிட்டார்.

மக்களுக்கு சேவை செய்வதில் நாங்கள் கூடுதலான அக்கறை செலுத்தவேண்டும். கிடைத்த சந்தர்ப்பங்களில் மக்களுக்கான சேவைகள் தொடர்பில் நாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

குறைகளை மட்டும் கூறிக்கொண்டு இருக்காமல், புதிய ஆளுநரான எச்.எம்.ஜி. எஸ். பள்ளிகக்காரவுடன் இணைந்து நாங்கள் மக்கள் நலன் நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என ஆளுங்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் குறிப்பிட்டார். (செ-4)


## பதவி வெற்றிடம்

**பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

- கணனி பக்க வடிவமைப்பாளர் – அனுபவமுள்ளவர்கள் மட்டும் (இருபாலாரும்)
- ஒப்புநோக்குநர் (பெண்கள்)
- அலுவலகச் செய்தியாளர்கள் – உள்ளகம், வெளியகம் (இருபாலாரும்)
- களஞ்சியக் காப்பாளர் (ஆண்கள்)

**தகைமை :- வயது 25இற்கு மேல்**
**கல்வித்தரம் :- க.பொ.த உயர்தரத்தில் சித்தி**

*யாழ்-நகருக்கு அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

**தகுதியானவர்கள் 21.01.2015 புதன்கிழமை நாளை பிற்பகல் 03.30 மணிக்கு**

இல.3, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

**எனும் முகவரியில் அமைந்துள்ள வலம்புரி அலுவலகத்திற்கு சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவத்துடன் நேரில் வரவும்.**

– முகாமையாளர்
வலம்புரி


# பேரப்பிள்ளையின்...

திணறி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் அதே இடத்தினை சேர்ந்த சிதம்ப்ரநாதன் தங்கம்மா (வயது 65) என்பவராவார்.

மற்றும் மீட்கப்பட்ட கலைச்செல்வன் கலையரசன் (வயது 6) அவரது தாயார் சிவமதி ஆகியோர் மந்திகை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (செ-19,60)

# 3 ஆளுநர்கள்...

மாகாணத்தின் ஆளுநராக கடமையாற்றியுள்ளார்.

இதேவேளை, மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தனது பதவியை நேற்று முற்பகல் இராஜினாமா செய்திருந்தார்.

தனது இராஜினாமா கடிதத்தை நேற்று ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பிவைத்ததாக அவர் கூறினார்.

மத்திய மாகாண ஆளுநராக டிக்கிரி கெப்பேகடுவ 2005-ம் ஆண்டு நியமிக்கப்பட்டதுடன், அவரது பதவிக் காலம் எதிர்வரும் டிசம்பர் மாதம் நிறைவுபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வடமத்திய மாகாணசபை ஆளுநர் கருணாரட்ண திவுல்கனேயும் தனது பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார். (செ-11)

# சீனாவுடனான...

ஆட்சியில் சீனாவின் கடனுதவித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு உட்கட்டமைப்பு கட்டுமானப் பணிகள் தொடர்பிலும் புதிய அரசாங்கம் ஆய்வு நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

சீனாவின் கட்டுமான வேலைத்திட்டங்களுக்கு ஏற்பட்டுள்ள செலவுகள் தொடர்பில் சுயாதீனமான கணக்காய்வு நிறுவனங்களைக் கொண்டு ஆய்வுநடத்தவுள்ளதாக கொள்கை வகுப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான புதிய துணை அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவதால் கவலையடைந்துள்ள இந்தியாவையும் மேற்குலக சக்திகளையும் புதிய அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு மகிழ்ச்சிப்படுத்தும் என்று பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக, 1.5 பில்லியன் டொலர் பெறுமதியில் துறைமுக கட்டுமானத்துக்காக சீன நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பில் ஆய்வுநடத்தப்பட இருக்கின்றது.

அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் உள்ள காணியொன்றை இந்த சீன நிறுவனம் முழுமையான உரித்துடன் சொந்தமாக வாங்கியுள்ளமை தொடர்பில் கவலைகள் உள்ளன.

இப்படியாக சீனாவுடனான வேலைத்திட்டங்களை ஆய்வுசெய்யும் புதிய அரசாங்கத்தின் அறிவிப்பின் பின்னணியில், இலங்கையுடன் தொடர்ந்தும் கூட்டுறவை எதிர்பார்ப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

இருதரப்பு நன்மைகள் மற்றும் பொது நலன்களின் அடிப்படையிலேயே சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் இருந்துவருவதாக சீனாவின் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஹொங் லீ கூறியுள்ளார்.

ஜனவரி 8-ம் திகதி தேர்தலில் தோல்வியடைந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம், உட்கட்டமைப்பு வேலைத்திட்டங்களுக்காக பெரும்பாலும் சீனாவிடமே தங்கியிருந்தது.

2009-ம் ஆண்டில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்தது முதல், ராஜபக்ஷ அரசாங்கம் பெரும் வேலைத்திட்டங்களுக்காக சீனாவிடமிருந்து 6 பில்லியன் டொலருக்கும் அதிக கடனுதவியை பெற்றுள்ளது.

சீன முதலீட்டில் அமைந்த பல வேலைத் திட்டங்களில் அளவுக்கு அதிகமாக செலவிடப்பட்டுள்ளதாக எதிரணி முன்னெடுத்திருந்த குற்றச்சாட்டுக்கள் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்கு உதவியதாக அவதானிகள் கூறுகின்றனர். (செ-11)

# ஜனாதிபதி...

பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன கூறினார்.

பொலிஸ் மா அதிபருக்கு நேற்று வழங்கப்பட்ட விசாரணை அறிக்கையின்

பிரகாரம், ஜனாதிபதி செயலகத்தில் 752 வாகனங்கள் காணப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இவற்றில் கெப் வாகனங்கள், ஜீப் வண்டிகள், கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள என்பனவும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சில வாகனங்கள் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் கையளிக்கப்பட்டதாகவும், சில விரைவில் கையளிக்கப்பட உள்ளதாகவும், சில வாகனங்கள் பாதுகாப்பு பிரிவின் உயரதி காரிகளிடம் காணப்படுவதாகவும் அஜித் ரோஹன குறிப்பிட்டார்.

காணாமற்போன ஏனைய வாகனங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்து வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் சுட்டிக்காட்டினார். (செ-11)


2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.

இன்று ஆரம்பமாகின்றது!
நேரம்:-3.30 மணி
DAY CLASS
LOGIC
எஸ்.எஸ்.மனோகரன்
★2015 BATCH மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.
★ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.
(சி-9869)

BEACON
யாழ்நகர் (வெலிங்டன் சந்தியடி)
★2014இல் Aகள், Bகள்என அளவையியலுக்கு பெருந்தொகையான சிறப்புச் சித்திகளை ஈட்டிய நிறுவனம்

AAT College Puthukkudiyiruppu
AAT, IBSL (வங்கியியல் கற்கைநெறி) விரிவுரைகள் இடம்பெறுகின்றன.
இடம்:-2nd floor, Boc, Puthukkudiyiruppu
24.01.2015,@9.00am சனி, ஞாயிறு.
T.P:-0775631280
(9193)


துயர் பகிர்கின்றோம்
எமது கிளிநொச்சி மாவட்ட உதவி ஆணையாளர் ஈ.தயாரூபன் அவர்களின் அன்புத் தந்தையார்
காங்கேசு–ஈஸ்வரானந்தன்
(ஓய்வுபெற்ற இ.போ.ச-சாரதி)
அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய உச்சில் புவனேஸ்வரி அம்மனை வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம்
கமநல அபிவிருத்தி திணைக்களம் கிளிநொச்சி
(சி-9870)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
தைப் பொங்கலை முன்னிட்டு குறைந்த கட்டணங்களில் கற்கை நெறிகள்
இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

Spoken English With Grammar - Quick Learning Course
- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம். Duration: (1 1/2 Months)
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
(சி-9871)

நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.

Diploma In English Duration: (2 Months)
தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

IELTS Acadamic/General We do Official Online Registration for Exam Candidates Duration: (2 Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

We gurantee success rate 6.5 band and above

A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது Duration: (2 Months)

21.01.2015@3PM
22.01.2015@12PM
Batches Starts on 20.01.2015
23.01.2015@9AM
24.01.2015@9AM

No.15, Sirambiyadi Lane, Off Stanley road (Above Sathosa SM), Jaffna.
Tel : 021-2224550
Head Office: No.30 15/2, W.A. D. Silva Mawatha, Colombo -06. Tel : 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org